கடவுள் துணை. IV. C. 13/24

திருநெல்வேலிநாட்டுத் தெற்கு
நட்டாற்றியிலிருந்து இலங்கையில்போய் வாசஞ்செய்த

## நட்டாற்றியாரவர்கள்

இயற்றிய

# முத்துறைமுப்பத்தாறு

## இதற்கு

காஞ்சிபுரம் மஹாஜன விதவான்களி லொருவராகிய
சதுசஷ்டி கலாபரவஸ்து

## கிருஷ்ணமாசாரியாரவர்களால்

செய்யப்பட்ட

## உ ரை யை

சென்னை சர்வகலாசாலைத் தமிழத்தலைமைப் புலமைநடாத்திய
ம-ா-ா-ஸ்ரீ

## கோ - இராஜகோபால பிள்ளையவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

## ச - இராமையசெட்டியார்

அவர்களாலும்

## வெ - சுப்பையசெட்டியார்

அவர்களாலும்

டி. சுப்பராயமுதலியாரவர்களது
சென்னை பாபுலா அச்சுயந்திரசாலையில
பதிப்பிக்கப்பட்டது.

சாவஜித்துஸு 1887

Registered,, Copy-right.

மகாமகோபாத்யாய, டாக்ட...
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
... 20

இந்நூல் அரங்கேற்றிய காலத்தில் நூலாசிரியரைப் பற்றி

## மூத்தையநாவலரவர்கள் இயற்றிய

## சாற்றுக்கவி.

திருவிளக்காதிபன்சேய்திலதயில நல்வணிகன்
அறுபத்துமூவரநட்டாற்றியான்—புரிநூலான்
முத்துறைமுப்பத்தாறென்னுமுத்நூலாய்ப்
புத்திரமாய்த்தந்தானிப்பார்கரு

---

சென்னை சாவ கலாசாலைத தமிழததலைமைப் புலமை நடாததிய

ம - ஈ - ஈ - ஸ்ரீ,

## கோ - இராசகோபாலபிள்ளையவர்கள் இயற்றிய

## சாற்றுக்கவி.

முத்துறைசேர் செந்தமிழின் முததுறைமுப்பத்தாறின்
மெயததுறையை யாரு மினிதுணாவான்—உய்த்துரைத்தான்
பேராாகிருட்டிணமாசாரிப் பெருந்தகையோன்
பாரோா மதிக்கபபரிந்து.

---

# அறிக்கை.

இப்புத்தகம் விலைக்கு வேண்டுபவர்கள் சென்னப்பட்டணம் எழும்பூரில் ஆரணிமஹாராஜாவின் குமஸ்தா முத்தியாலுஐயரவர்களிடத்திலும், ஷை யூா கெங்குசெட்டி தெரு தபாலாபீசுக்குத் தென்னண்டை கிரகததிலிருக்கும் அப்பாவு செட்டியாரிடத்திலும பெற்றுககொள்ளலாம்.

இதன்விலை தபாற்கூலி உள்பட அணா ௬.

# நூல் வரலாறு.

திருநெல்வேலி நாட்டிலுள்ள தாமிரபருணி நதியின் தெற்குக்கரையோரத்தில் சேதுபதி யென்னும் தேவஸ்தானத்துக்குச் சொந்தமான ஒருகிராமமுண்டு அதில் வைசியகுலதிலகராகிய அரசு சுப்பிரமணியஞ் செட்டியாரென்ற வணிகரொருவர் வாசஞ் செய்தனர். இவர் முதிர்ந்த சிவபக்தராகையால்சிவனது அடியார்களாகிய அறுபத்துமூன்று நாயன்மார்களும் தமக்கு ஞாபக சின்னமாம்படி தமது குமாரனுக்கும் அறுபத்துமூவர் என நாமகரணஞ் தரித்தனர். இந்த சைவசமயத்தராகிய அரசு அறுபத்துமூவர் செட்டியார் தம்முடைய ஜேஷ்டபுத்திரனை நூலாசிரியர் பிறந்தவுடன் வியாதிப்பட்டு ஏழுநாளளவும் பாலுண்ணுதலைப்பற்றி அந்த நதியின் கரையிலுள்ள சுடலைமாடதேவதையின் கோளாறெனவக்கோவில பூசாரி தம்மை யேமாற்ற அவரும் அவன் சொற்படி நூலாசிரியருக்கு சுடலைமுத்து என அத்துஷ்ட தேவதையின் பெயரை இட்டு நேர்த்திக் கடனுங் கொடுத்தனர். அப்பால் அரசு அறுபத்துமூவர் செட்டியார் தாம் வியாபாரஞ் செய்வதோடு கிருஷிகத் தொழிலுஞ் செய்ய அவாவுற்று பெருங்குளம் ஏரிப்பாய்ச்சலில் பூஸ்திதியைச் சவதரித்து அதற்கு சமீபமான தெற்கு நட்டாற்றியைத் தமக்கு வாசஸ்தலமாக்கிக்கொண்டு அவ்வூரில் யாதொரு பாடசாலை யில்லாதிருந்தும் மிகுந்த பிரயாச முதல்ய பொருட்செலவுடன் அவ்வூரில் ஒருவருஷம் வரையும் ஒரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்து நூலாசிரியருக்கு வாசிப்புக் கற்பித்தும் பதினான்காம்வயதில்விவாஹமுஞ்செய்வித்தனர். இவர்பின் பொருநாள் கெட்டபிள்ளைகளுடன் சகவாசஞ்செய்தல் கூடாதெனக்கண்டித்ததற்காக நூலாசிரியர் மறைந்தோடி இலங்கையிற்போய்சேர்ந்தனர். சிறுவனைக்கண்டு பிடிக்கும்படி பின்தொடர்ந்தவர்கள் தூற்றுக்குடியிற்போய்க் கப்பல் தரகிரிகளை விசாரிக்கையில் ஷை அரசு அறுபத்துமூவர் செட்டியாரால் பலதடவையிலும் உபகாரம் பெற்றுக்கொண்ட ஒருவன் ஐயோ இச்சிறுவன் இன்னானென அறிந்தேனிலன் அவனைப்பயமுறுத்திக் காட்டிப் பூஷணங்களைக் கொத்துவை வாங்கிக்கொண்டு இரண்டு பூவராகன் கொடுத்து புகைமரக்கலத்திலேற்றி இலங்கைக்கு அனுப்பி விட்டோமென தான்வாங்கிய

காதணிமுதலிய பூஷணாதிகளைக் கொணர்ந்து தந்தனன். இதனால்
சிறுவனுக்கு யாதொரு அபாயமின்றெனக்கண்டு அவர் இலங்கை
யிலுள்ள தமது ஒன்றுவிட்ட தமையனாராகிய சிவபெருமான்
செட்டியாரென்னும் ஒருதனவான் மூலமாய் நிருபங்களை யனுப்பி
ஊருக்குவந்து விடும்படிவேண்டிய எத்தனங்கள் செய்தும் அதற்கு
இடங்கொடாமல் நூலாசிரியர் எண்ணெய்விற்று ஜீவனஞ்செய்துகொ
ண்டே சமஸ்கிருதத்தையும் தமிழ் இலக்கண இலக்கிய முதலியவை
களையும் யாழ்ப்பாணமுதலிய இடங்களிற்போய்ப் பயின்று வந்தனர்.
இக்காலத்தில்தான் நூலாசிரியர் இலங்கையிலுள்ள வர்களால் தமது
வாசஸ்தலத்தின் பெயராலே நட்டாற்றியாரென அழைக்கப்பட்டனர்.
மேலும் நூலாசிரியர் பிசாசில் நம்பிக்கைக் கொள்ளுவதினால் நிந்தை
யும் பெருங்கெடுதியு முண்டாகுமென யாருமெளிதில் ஒத்துக்கொ
ள்ளும்படி நல்லஉதாரணங்களைப் பார்த்தெடுத்து சரு-வது சகூ-வது
கலிகளிலும் சமர்ப்பித் திருக்கின்ற நியாயதோரணைக்குப் பங்கம்வரா
தபடி தமதுதந்தையிட்ட சுடலைமுத்தென்னும் பெயரை ாங - வது
கவியில் ஒப்புக்கொண்டு கூறாமல் அவ்விலங்கையிலுள்ள வர்களால்
தம்மை நட்டாற்றியாரென் றழைக்கப்பட்ட நாமதேயத்தையே ஒப்புக்
கொண்டும் "தானப்பேர் கொண்டே கதந்தையேன்" எனவும்
கூறியிருக்கின்றனர். இவர் தமது ஆசிரியர்களில்தமக்குசமஸ் கிருதங்
கற்பிக்கும் சொரிமுத்தையரும் தமிழிலக்கண இலக்கியங்கற்பிக்
கும் முத்தைய நாவலரும் போதுமான வரும்படியில்லாதவர்களா
தலால் அவர்களையும் தாங்கவேண்டிய அவசியம் நேரிட்டதினாலே
தாம் எண்ணெய் விற்கும் வரும்படி செலவுக்குப்பற்றாமல் வறு
மையையும் கடன்பட்டு கடன் கொடுத்தவர்களால் வருந்துன்பத்
தையும் மட்டற்று அனுபவிக்கினும் ஊக்கத்திலாவது கல்விப்பயிற்
சியிலாவது யாதொரு குறைவுபடாதவ ராயினர். இவர் இவ்வாறு
இராமாயண முதலிய பிரசங்க சாதுரியமுடைய கவிவாணரா யிரு
க்கினும் யாசித்தலைவிரும்பி இச்சகம்பேசி நரஸ்துதி செய்தலாகிய
கவிராயத்தனம் செய்யாததன்மையுடையவராதலால் அங்குள்ளவணி
காதங்கள் வருணத்தவரான வித்துவான்கள் யாராவது அங்கு காணப்
பட்டால் அவர்களைப் பொதுத்திரவியத்தி லிருந்து உபசரித்தும்அவா
களைக்கொண்டு ஏதாவது பிரபந்தங்களைச்செய்வித்தும் தங்கள் மரபில்
கல்விவளர்ந்தோங்கச் செய்தலுமாகிய இந்த வழக்கத்தினால் இவருக
குயாதொரு பிரயோசன மில்லாததுந் தவிர சிலர் இவரிடத்திலும்

பொறுமைகொண்டு மிருந்தனர். ஆயினும் பிச்சஞ் செட்டியார் முதலிய சில விவேகிகள் இவரிடத்தில் மேலான எண்ணமுடையவர்களாகித் தங்கள் மரபின் வரலாற்றைக்குறித்து மேற்கோள்களை யனுசரித்து ஒரு நூல்செய்யும்படி மன்றுடியும் அதற்கு இணங்காதவராகிச் சகல மதஸ்தர்களுக்குஞ் சகல சாதியார் களுக்கும் உபகாரப்படும்படி ஒரு நீதிநூல் செய்வேனென ஒப்புகொண்டு சாதிக்களியாடாமை யென்னும் நீதித்துறையில் அவர்கள் சாதிக்கு உரியதைமாத்திரம் உள்ளபடி கூறினர். இதனாலும் மற்ற வணிகர் வெறுப்படையினும் மேற்படி பிச்சஞ்செட்டியார் இந்நூலின் உண்மையையும் மான்மியத்தையுங் கண்டறிந்தவராகையால் இந்நூலை அரங்கேற்றும்படி செய்து நூலாசிரியரிடத்தில் பெற்றுக்கொண்ட சிலகாலங்கழித்து அதாவது அட்சய வருஷத்தில் அச்சிறபதிப்பித்தனர். இந்நூலுக்கு இடப்பட்ட மூத்துறை முப்பத்தாறென்னும் பெயர் மூன்றுகவிகளாலான நீதித்துறைகள் முப்பத்தாறைக் குறித்துச் சொல்லப்பட்டது எனப் பொருள் தருதலால் இப்பெயரோ இந்நூலுக்கு முகவுரையாயுமிருப்பதுமன்றிப்பின்னிட்ட வித்துவான்கள் மூத்துறை மூப்பத்தைந்து முப்பததேழெனவும் இவைபோல்வனவும் பலநீதிநூல்கள்செய்யஏதுவாயு மிருப்பதாலிதனை பிரபந்தமெனவுங் கூறலாம். இத்தன்மையதானசாரத்தோடு தமிழ் நூற்களுக்கு நாமதேயம் சாற்றியிருப்பது அருமை. மேலும் ஒவ்வொரு துறைகளிலும்மட்டற்ற கருத்துக ளடங்கியிருப்பதுமன்றி ஒவ்வொரு கவியிலும் தாமெடுத்துக்கொண்ட சங்கதியை சமர்ப்பிக்கும் பொருட்டுப் போதுமான நியாயதோரணைகளைத் தந்தும் அவ்வாறு தரப்பட்ட நியாயதோரணைகளி லொன்றையாவது எவ்வித நோக்கங்களினாலும் போலிநியாயங்களாக்கச் சாத்தியப்படாததாயும் அதிலுள்ள அடைமொழிகளுங்கூட சொல்லை நயப்படுத்துவது மாத்திரமல்ல பொருள் நயப்படுவதாயும் பெருமபாலுஞ் சிறுவார்த்தைகளும் பெரிய திரண்ட பொருள் கொடுப்பதாயும பிரபஞ்ச உண்மைகளுக்குப் பொருந்தியதாயும் மட்டற்ற அறிவைக் கொடுக்கின்றதாயும் இவைபோன்ற பல இலட்சணங்களையும் உடைத்தாயிருப்பதால் சிரேஷ்ட தன்மையைப்பொருந்திய தமிழ் நூற்களில் இதுவும் ஒன்றென்பதற்கு யாதொரு ஆட்சேபமுமின்றாம்.

## நூலாசிரியரது பிற்காலநிலைமை.

இந்நூல் அரங்கேற்றம்பெற்று பேர்ப் பிரஸ்தாபமான பின்னர் நூலாசிரியர் தமது பிதிரார்ச்சிதத்தி லிருந்துதன்னிடத்தில் கொண்டு

வரப்பட்ட தொகையைக் கொடுத்து அங்குள்ள கடனைத் தீர்த்து விட்டு தமது ஊராகிய நட்டூற்றிக்கு ஏகினர். இவர் வித்துவான்கள் யாரைக்கண்டாலும் அவர்களுக்குச் சமானனுகேனென்ற எண்ணமுடையவ ராகையாலுந் தமது கல்வி யறிவைப் பகிரங்கப்படுத்துஞ் சமையம் நேரிட்டாலொழிய மற்றப்படி ஒன்றும் அறியார்போல் எவரிடத்திலும் தாழ்மையோடு கூடிய அடக்கமுடையவ ராகையாலும்இவர் சென்ற சென்ற இடங்களாகியஎட்டையாபுரம் ஊற்றுமலை சமீன்தார் முதலிய சிற்றரசர்களாலும் அங்குள்ள அரண்மனை வித்துவான்களாலும் மேலான நன்குமதித்தலைப் பெற்றும் அவர்களால் இந்த முத்துறை முப்பத்தாறென்னும் நூலின்பெயரால் முத்துறை யாரெனவும் அழைக்கப்பட்டனர். தற்காலத்தில் இவர் பிறமதந்த மூலிக்கொண்டவராதலால் அம்மதத்தர்களால் இவரது குடும்பப்பெயராகிய அரசு என்பதின் முன்னர் ஞானம் என்னும் மொழியைவைத்து ஞானரசு என அழைக்கப்படுகின்றனர். இந்நூலினு லிவருக்கு மேன்மைகிடைத் திருப்பினும் இவரிடத்தில் பொறாமை கொண்டிருக்குஞ் சில இழிஞருக்கு அவர்கள் மனப்படி அரசு சுடலைமுத்தெனவுஞ் சிலசமயத்தில் கையொப்பமு மிட்டிருக்கின்றனர். நூலாசிரியர் ஆதியில என்னிடத்திலுஞ் சில சமஸ்கிருத உயர்தர நூற்களைக்கற்றுக்கொள்ளும்படி வந்திருக்கையில் அவனை நன்று யறிந்தவனுகையால் அவரது சரித்திரத்தையும் நூல்வரலாற்றையும் திட்டபட்டமாயறிந்து இங்ஙனம் எழுதத் துணிந்தேன்.

## உரைசெய்த விவரணம்.

இந்நூலிலுள்ள வார்த்தைகள் யாவும் இலேசான மொழியாயிருக்கினும் ஒவ்வொரு வெண்பாவிலும் மேலானகருத்துடன் அதிக பொருளடங்கியிருப்பதால் வித்துவான்களும் வருத்தத்துடன்பொருள்படுத்த வேண்டிய திருந்ததினுலே இலங்கையிலுள்ள ச. இராமையசெட்டியாரும் வெ. சுப்பைய செட்டியாரும் பரோபகாரத்தைவிரும்பி என்னைக் கேட்டுக் கொண்டதினுல் இந்நூலுக்குச் சென்னை சருவகலாசாலைத் தமிழ்த்தலமைப்புலமை நடாத்திய ம-௱-௱-ஸ்ரீ கோ. இராஜகோபாலபிள்ளை யவர்களது ஒத்தாசையைக கொண்டும உரையிட்டனன்.

இங்ஙனம்,

ச. கிருஷ்ணமாசாரியார்.

# முத்துறை முப்பத்தாறு.

## காப்பு.

மதியஞ்சேனமகோனின்மாடணுக்கினேற்றணுகா
சதியாம்புலனடக்கச்சாதித—திதித்திதிபொம்
மாப்பொம்மாதீச்சுக்கொம் ச்சுக்கொண்மாற்றங்காண்
மீப்பாரிலாக்கானேமேல்.

| | |
|---|---|
| மதி அஞ்சேல் | புத்தியே தளர்ச்சியடையேல். |
| பொம்மா, பொம்மா | (சிறுவர்கள் விளையாடுகையில்) ஆன்மாவே ஆன்மாவே. |
| திதி, திதி | (இறைவனை) சந்தித்துக்கொள் சந்தித்துக்கொள். |
| தீச்சுக்கொள் | (கெட்டவழியில் புகாது விடயங்களை) அடக்கிக்கொள் |
| தீச்சுக்கொள் | அடக்கிக்கொள் (என்னும்) |
| மாற்றங்காண் | வாக்கியங்களைக் கவனித்து |
| சதியாம்புலன் | மோசமாயுள்ள விடயங்களை |
| அடக்க | (கெட்ட நெறியிற் செல்லாது) அடக்கிக்கொள்ள |
| சாதி | (எனக்கு) சாதனமாயிருக்கக்கடவை |
| நமகோனின் | (அவ்வாறிருந்து) நம்மிறைவன் |
| மாடு அணுக்கின் | பக்கலில் (என்னை) சேர்த்தால் |
| ஏறு | (உலக அனுபவங்களில்) எது |
| அணுகா | கைகூடாததாகும் (உன்னை நம்பிய என்னை) |
| மீப்பாரில் | இகபரமிரண்டிலும் |
| மேல் ஆக்கானோ | (அவ்விறைவன்) மேன்பட்டிருக்கச்செய்வான். |

“திதித்திதிப பொய்மாப் பொம்மா தீச்சுக்கொள், தீச்சுக்கொள் பொம்மாப பொம்மா கள்ளன் வருகின்றான் கதவையடை கள்ளிச்சிவருகின்றாள் தாட்பூட்டு” என்னும் இந்த நான்கு வாக்கியங்களில் பின்னைய இரண்டு வாக்கியங்களின்படி ஒழுகல் நம்மால் முடியாதென்க்

கண்டு அவற்றை ஒழித்தும் முன்னைய இரண்டு வாக்கியங்களின்படி யா வரும் ஒழுகவேண்டியது அவசியமென்னுங் கருத்தாலேயுணர்ந்தும் பெரும்பாலோர் அவற்றைக் கைக்கொண்டு ஒழுகிவந்தமையால் விளையாட்டுச் சிறுவர்கள் வாயிலும் வழங்குகின்றன; ஆதலால் நாமும் அவற்றைக் கைக்கொள்ளவேண்டியது அவசியமெனவும் நோக்கங்கொண்டு இங்கு "திதித்திதிப் பொம்மாப் பொம்மா தீச்சுக்கொள் தீச்சுக்கொள் மாற்றநுகாண்" எனவும், மறுமையின்பத்தைத்தேட மனஞ் சாதனமாகவேண்டியது உண்மையாகையால் மனதின் விகாரமாகிய புத்தியைப்பார்த்து "மீப்பாரிலாக்காரனேமேல்" எனவுங் கூறினார்.

மதியஞ்சேல் என அசேதனமாகிய புத்தி சேதனனாக அபேக்ஷித்துப் பரிணமித்தபடியால் பரிணாம அலங்காரம்.

திதித்திதி என உலக வழக்கச்சொல்லையே இக்கவியில் எடுத்துக் கூறினமையால் உலகயுத்தி யலங்காரம். (க)

---

## ஆஸ்திகச்சிறப்பு.

ஈப்பூவெறும்புதருமெந்திரம்பாறந்தணுகின்
கோப்பாமோதேனரக்குக்கூர்வெண்ணெய்—நேர்ப்பில்
காந்தமிரும்பிற்கலாவொருவன்வேண்டுமால்
நீநந்தன்வாய்ப்பபட்டகிலம்.

| | |
|---|---|
| காந்தம் | காந்தத்தையும் |
| இரும்பில் | இரும்பையும் |
| நோப்பின் | எதிர்முகமாய்வைத்து |
| கலாவ, ஒருவன் | கூடும்படிசெய்ய ஒருவன் |
| வேண்டும் | வேண்டுவது உண்மை (இந்நியாயம்போல்) |
| ஈ, பூ | ஈயுடன் புஷ்பத்தையும் |
| எறும்பு, தரு | எறும்புடன் விருட்சத்தையும் |
| பால், எந்திரம் | பாலுடன் மத்தையும் |
| தந்து அணுகில் | (இறைவன்) அருளிச்செய்து கிருபாநோக்கமுஞ்செய்யாவிடின், |

| | |
|---|---|
| கூர், தேன், அரக்கு | (இவ்வுலகத்துக்கு) மிகுந்த தேனும், மெழுகும் |
| வெண்ணெய் | வெண்ணெயும் |
| கோப்பாமோ | சமையாதாம் (இவ்வாறே) |
| நிலம் | (இந்தப்) பிரபஞ்ச வியாபாரங்கள் |
| நீந்தன் | (இதற்கன்னியனான) இறைவன் |
| வாய்ப்பட்ட | வசப்பட்டு நடந்தேறுகின்றன |

ஆல்—அசை.

வெண்ணெய் திரளவேண்டுமானால் பால் கடையும் எந்திரம் இன்னவடிவதாக இருக்கவேண்டுமென்னும் யுத்தி சிற்றறிவுடைய ஆன்மாவுக்குக் கிடைத்ததும் தேனீக்கு தேனும் எறும்புக்கு மெழுகுஞ் சவதரிக்கும் அவசியம் உண்டானதும் இறைவனது அனுமதியினால்தான் என்னும் கருத்துக்கொண்டு "அணுகில் கோப்பாமோ தேனரக்குக் கூர்வெண்ணெய்" எனவும் பிரபஞ்ச வியாபாரம் நன்மையாக நடந்தேறும்படிக்கே இறைவன் அனுமதிசெய்கின்றபடியால் பலாபலனுக்குரிய இன்பதுன்பங்கள் ஆன்மாவுக்கே உரியதெனக்குறிப்பிக்க இங்கு "நீந்தன்" எனவும் கூறினர்.

நீத்தன், நீந்தன் என மெலித்தல் விகாரம்பெற்று வந்தது.

ஈ, பூவுக்கு, தேனும், எறும்பு தருவுக்கு, மெழுகும் பால் எந்திரத்துக்கு வெண்ணெயும் உண்டாகுமென நிரனிறையாகக் கூறினமையால் எதா சங்கிய அலங்காரம்.

காந்த மிரும்பில் கலா வொருவன் என காந்தம் இரும்புமுதலியவற்றினது சுபாவத்தைககுறிக்கின்றமையால் சுபாவ உத்தியலங்காரம்(உ).

துரியதுரியனைச்சூழன்று தவல்சூழ்சிந்தைக்
கரிதாகிலாமைக்கணமின்றேய்—அருடளிசேர்
தலைவனுளக்குறியிற்சாடுமாக்சுற்றுவே
தலைவன்றெழுவறியுந்தான்

| | |
|---|---|
| துரிய, துரியனை | (மனமே) துரியாதீதமுங்கூட அடக்கிக்கொள்ளுதலைப் பெறாத இறைவனை |
| சூழ் | சூழ்ந்துகொள்ளககடவை |

| | |
|---|---|
| அன்று | அவ்வாறுசெய்யாவிடின் |
| குழ் சிந்தைக்கு | (குஞ்சுகளை விழுங்கவேண்டி முட்டைகளைப்) பேணிவைக்கின்ற நினைவு |
| அரிது ஆகில் | (ஆமைக்கு) இல்லையானால் |
| ஆமைக்கணம் | (உலகில்) ஆமைக்கூட்டம் |
| இன்று ஏய் | இல்லாததுபோல (நீ இருந்தும் இல்லாததாகி உலகவியாபாரத்தை நடத்தவாவது அவ்வாறு நடத்தி இறைவனைப் பிரபத்திசெய்யவாவது நான்) |
| உதவல் | உரவமாட்டேன் |
| மாதலைவன் | (ஆதலால்) குதிரையானது பந்தயப்பொருளுக்காக) மேலிருப்பவனது |
| உளக்குறியின் | மனக்குறிப்பின்படி |
| சாடும் | பாய்வதுபோல (இறைவனது) |
| அருள் | அருட் குறிப்பையும் |
| கன்று ஆ | கன்றையுடைய பசு |
| தலைவன் தொழு | தலைவனது தொழுவத்தை |
| அறியும் தனி | அறிவதுபோல (அவனது) ஆலயத்தையும் |
| சேர் | அடையக்கடவை |

தான்—அசை நிலை.

ஆமை தன் அவயவங்களை வேண்டியபோது விரிக்கவும் அடக்கவுஞ்செய்வதுபோல பஞ்சவிடயங்களை மறுமைப் பிரயோசனத்துக்காக நல்வழியில் செலுத்தவும் அவ்விடயங்களை தீயவழியில் செல்லாதடக்கவும் மனம் சாதனமாகாவிடின் ஆன்மாவால் ஒரு செயலும் முடியாதெனவும் மேலும் இவ்வாமை தன் குஞ்சுகளை விழுங்கும்படியாகவே குழியைத் தோண்டி அதற்குள் எல்லா முட்டைகளையும் ஏககாலத்திலிட்டு சததுரு அபாயம் நேரிடாமல் அக்குழியை மூடித் தன் நடத்தை யறிந்துக் குஞ்சுகள் வெளிப்படும் வரையும நீககரையில் காத்துக்கொண்டிருக்க பூமியின் உஷ்ணத்தினால் முட்டைகளின் கருகுஞ்சாகி முட்டைகள் வெடித்துக் குஞ்சுகளும் வெளிபபட்டு நீரிற்சாருகையில் காத்துக்கொண்டிருக்கும் தாயாமை கண்ணிற்பட்ட குஞ்சுகளையெல்லாம் விழுங்கிவிடத் தப்பின குஞ்சுகளினால்தான் ஆமைக்கூட்டங்களுண்டாகி வருகின்றன. இவ்வாறு குஞ்சுகளை விழுங்க வேணுமென்னும் நினைவு ஆமைகளுக்கில்லாவிடில் முட்டைகளைப் பே

ணிவைக்கவேமாட்டா, ஆமைக்கூட்டங்களும் உலகிலெல்லாமில்லோம். இப்படித் தன் மயமாகிய குஞ்சுகளை விழுங்குவதுபோல மனமான தன் பரிணமித்தலாகிய நான், எனது. என்னும் அகங்கார மமகாரங்களை விழுங்கி நான் என்னுடைமையன்று இறைவனுடைமை என ஆன்மாகொள்ளுதலுக்கு மனம் சாதனமாயிருக்கவேண்டியது அவசியமெனவும் கருதநாக இங்கு "உநவல் சூழ் சிந்தைககரிதாகி லாமைக்கணமின்றேய்" எனவும் அவ்வாறுயான் என்னுடைமையன்று இறைவனுடைமை எனக்கொள்ளினும பரமபத பந்துயப்பொருளைப் பெற்றுக்கொள்ள அவ்விறைவனது அருட்குறிபபும் இவ்வருட்குறிப்பு உறுதியடைய அவனது ஆலயப்பணிவிடை செய்தலும் அவசியம் இந்த அவசியத்திற்கு மனஞ சாதனப்படவேண்டுவது முக்கியமாகையால் அம் மனதைப்பார்தது "அருடளிசேர் நலவனுளக்குறியிற சாடுமாக்கற்றுவே தலைவன் தொழுவறியும" எனவுங கூறினர்.

"ஆமைக்கணமின்றேய்" என்பவற்றில் "ஏய்" என்னும் உவமஉருபு விரிநது வநதமையால பூரண உவம அலஙகாரம். (௯)

அற்புச்சுதர்கருபசாரமுண்டோவாராயா
பெற்றோமருநதூட்டி பபெற்றியதே—அக்காலே
ஏவருளகரியுறறீபுமிறைநேர்சாயா
நோவிநதாற்காண்பருகி.

| | |
|---|---|
| இறை அக்காலே | இறை மறுமையில் |
| ஏவா, உள, கரி | எவ்வகைபோரது மனச்சாட்சிகளைக் |
| உறறு, ஈயும் | கொண்டே (பலாபலனை) அளிக்கும |
| நேர்சாயா | நீதிககு விரோதஞ்செய்யமாட்டாது |
| நோவிததால் | (இதன்பொருட்டு மறுமையின்பததுக்காகந்தமது அடியாாகளை) வருததினால |
| ஆராயா, இ | (அதனை) ஆராயாத இநத |
| பெற்றியதே | தனமையானது |
| பெறறோர் | (பிளளைகளுக்கு) பெற்றோர் |
| மருந்து ஊட்டு | மருந்தை ஊட்டும சஙகடம்போலாம் |
| அன்பு, சுதாக்கு | இதனை யறிநத யான் என்னுடையையன்று இறைவனுடைமை என்னும அனபான அடியாாகளுககு |
| உபசாரம், உண்டோ | உபசாரம் வேண்டியதில்லை (இவர்கள்) |
| காண்பர். உருகி | அநதவருததத்திலிருநதே இன்பததைக்காண்பார்கள் |

தற்சுதந்தரத்தை இழந்து இறைவனுக்குத் தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்த அடியார்கள் இன்பத்தை இன்பமாகவும், துன்பத்தைத் துன்பமாகவும் கொள்ளாரெனக்குறிப்பித்து இங்கு "அற்புச்சுதற்கு பசாரமுண்டோ" எனவும் இவ்வாறே தன்னைப் பூரணமாயொப்புக் கொடுத்து அஞ்ஞானப்பற்றை முற்றிலும் விட்டகலாத அன்பர்களை இறைவன் நயமும், பயமும் காட்டிப் பரமபதத்துக்கு ஆள் ஆக்குவனெனவும் கருத்துடன் இங்கு "ஆராயாப்பெற்றோர் மருந்தூட்டிப்பெற்றியதே" எனவுங்கூறினர்.

இறைவன் மறுமை இன்பத்துக்காக வருத்திஞல் அதனை ஆராயாத தன்மைதான் பெற்றோர் பிள்ளைகளுக்கு மருந்தை ஊட்டுந் தன்மை என அதுதானிது இதுதானது எனக்குறிக்கின்றமையால் வைதர்ம்மிய திருஷ்டாந்த அலங்காரம். (௪)

---

அ ஞ ஸ் தி க ம று ப் பு.

இயல்பென்னுநாத்திக்கியன்மறித்தனற்கரியாம்
செயலெங்கேவானின்றுஞ்செய்யளுக்கட்—கயனின்று
கருபமலரிற்பாயுங்கருமணியைககாண்டிலனே
ஒருநாதமுண்டேலுலகு.

| | |
|---|---|
| அயல் நின்று | பக்கத்திலிருந்து (காரியப்பட்டு) |
| கருபமலரில் | மலர்போன்ற கருப்பஸ்தானத்தில் |
| பாயும், கரு, மணியை | பாய்கின்ற கருவாகிய மணியை |
| காண்டிலனே | (இறைவன்) நோக்குதலில்லாளுயினுனே (அவ்வாறு நோக்குதல் இல்லாதவனுகி) |
| உலகு, ஒருநாதம் | உலகத்தில் (ஒரு நாதியாவது |
| உண்டேல் | (இயற்கையாகவே) உண்டாளுல் |
| வான், நின்றும் | கேட்குதல், பார்க்குதல் முதலியவைகளுக்குக் காரணமான) ஆகாயமுதலிய ஒளியிருந்தும் |
| செய், யளு, கண்கு | பிறவியிலேயே அழகாய் அமைந்துள்ள (சில பிறவிச்) செவிகள் கண்கள் முதலியவைகளுக்கு |
| செயல், எங்கே | செய்கைகளெனிலலை |
| இயல்பு, என்னும் | (ஆதலால் பிரபஞ்ச வியாபாரமெல்லாம்) இயல்பாகவே நடந்தேறுகின்றன என்னும் |

நாத்திக்கு — நாஸ்திகருக்கு
இயல், மறித்தல் — இயல்புக்கு விரோதமானவைகளே
நற்கரியாம் — நல்ல சாட்சியாம்

நாஸ்திகர் இறைவனில்லை எல்லாம் இயல்பு எனவும் தார்க்கிகர் இறைவனும் ஆன்மாவுமுள ஆனால் இறைவன் யாதொன்றிலும் பிரவேசியாது வீணே இருக்கின்றனன். ஆன்மாக்களின் அதிர்ஷ்டத்தினால் பிரபஞ்ச வியாபாரம் நடந்தேறுகின்றனவெனவும் கூறுகின்றமையால் அவற்றிற்காக தனக்குள் ஆச்சரியம் பிறந்து இங்கு "அயனின்று கருப்பமலரிற்பாயும் கருமணியைக் காண்டிலரே" எனவும் அக்கொள்கை சரியன்று ஏனெனில் ஸ்திரிபுமான் இருவரும் யாதொரு அவயவபங்கமின்றி வழக்கம்போலவும் மற்றவர்களைப்போலவும் உண்டும், உறங்கியும் சிற்சில மகவுகளுக்குத் தீவினைப்பயனளிக்குமாறு காதில் கேட்டலையும் கண்ணில் பார்த்தலையும் வாக்கில் பேசுதலையும் கைகால்களில் கொடுத்தல் முதலிய செய்கைகளையும் பிறப்பிக்கின்ற சூட்சும அவயவங்களில் ஒன்றாவது பலவாவது பிறவியிலேயே அமையாததற்குக் காரணம் இறைவனே எனவுங் குறிப்புடன் இங்கு "செயலெங்கே வானின்றுஞ் செய்யனுக்கட்கு" எனவும் இவ்வாறாகவே காரியப்படும் வஸ்துகள் ஒரு இடத்தில் ஒருவிதமாகவும் மற்றொரு இடத்தில் வேறுவிதமாகவும் சமைகின்ற இயல்புக்கு விரோதமான செயல்களை எடுத்துக்கூறின் நாஸ்திகரும் தார்க்கிகரும் புத்தி நுட்பராகையால் எளிதில் ஆஸ்திகர் ஆவாரெனக் கருதுதுக்கொண்டு இங்கு "இயல்பென்னும் நாஸ்திக்கு இயல் மறித்தல் நற்கரியாம்" எனவுங்கூறினர்.

இயல்பானால் சிலருக்குமாத்திரம் அவயவபங்கம் அமைந்திருக்குங் காரணம் யாது என்று ஆட்சேபிக்கின்றமையால் விநய உத்தி அலங்காரத்தோடு கூடிய ஆட்சேப அலங்காரம். (ரு)

அலர்கதிரோதம்மேகமணுகின்வானுண்டேபோல்
நிலைகள்பலவறிந்தீர்நிச்சயமே—புலம்புலங்காண்
மறந்துவிட்டீர்போன்மயங்குமாரிகெடுமாரியின்
பிறந்துவிட்டோங்காகாவெனல்

அலர், கதிர் — (நாஸ்திகரோ தார்க்கிகரோ கிரணம்)விரிந்த சூரியனும்
ஓதம், மேகம் — சமுத்திரமும், மேகமும்
அணுகின் — (ஒன்றிற்கொன்று) கூடுமியல்பினால்
வான் உண்டேபோல் — மழையுண்டாகும் நிசசயம்போல

| | |
|---|---|
| பல நிலைகள் | அநேக உண்மை நிலைகளை |
| அறிந்தீர் | அறிந்திருக்கின்றீர்கள் |
| நிச்சயமே | (இதுவும், இதுபோல்வனவும்) உண்மைதான் |
| புலம், புலம் காண் | (உங்கள்) அறிவும் மேலானதுதான் |
| மயங்குமாரி | (ஆனால்) மழையில்லாப் பஞ்சத்தினால் |
| கெடுமாரி | (அல்லது) வெள்ளம்பஞ்சத்தினால் |
| இன்று | இப்பொழுது |
| இறந்துவிட்டோம் | (இறைவனே) மடிந்துபோகின்றோம் |
| கா, கா, எனல் | காப்பாற்று, காப்பாற்று என்று (பல தடவையி லும உலகோர்) முறையிட்டதை |
| மறந்துவிட்டீர்போலும் | மறந்துவிட்டீர்கள்போலும் |

இறைவன் தனது சர்வஞானத்துக்குப் பங்கம் வராதபடி சகலவ ஸ்துக்களினுடைய இயற்கையான குணங்களை அதத்தற்குத் தக்கபடி அமைத் திருக்கின்றனனென ஒப்புக்கொண்டு இங்கு "அலாகதிரோ தமமேகமணு கின்வாணுண்டேபோல் நிலைகள் பலவறிந்தீர்" என உதாரணமாக எடு த்துக்காட்டியும், ஆனால் அதிவிருஷ்டி அனாவிருஷ்டி முதலிய எதுவி னால் அவ்விறைவனது சர்வவல்லபம் விளங்கிக்கிடைக்கையில அவற்றை மேற்கூறிய இருதாத்தாரும கவனிக்கின்றிலா எனக்காட்ட இங்கு "மறந்துவிட்டீர் போன்மயங்குமாரி கெடுமாரி" எனவும் சாதாரணர் கூட இறைவனுளனென ஒப்புக்கொள்ளுகையில் நாஸ்திகர்மாத்திரம் இறைவனிலனெனபது சரியன்றெனக்காட்ட, இங்கு "இன்றிறந்து விட்டோம் கா காவெனல" எனவுங்கூறினர்.

நாஸ்திகரும தார்க்கிகரும யாவும் இயல்பினாலேயே நடந்தேறுகின் றனவெனபதை அதிவிருஷ்டி அனாவிருஷ்டியாகிய பிரத்தியட்ச ஏதுக்க ளைக்கொண்டு மறுத்துவிட்டபடியால வியாகாத அலங்காரம். (௬)

வேண்டாம்பரங்கடையான்வீண்பொறிவிட்டாங்குலையும
தீண்டாதுமண்டெரியைச்சேறலறக்—காண்டோறும்
பர்க்கடகமுட்டுறுந்தவாய்ப்பயிலரியாண்டினுமின்
இக்கொடுமைக்கான்மனிரோ

| | |
|---|---|
| வேண்டாம | (நாஸ்திகரே உங்களுக்கு ஆன்மாவுமில்லையென்று சொலல)வேண்டியதில்லை |
| ஆன் | (உங்களது) ஆத்துமா |

வீண், பொறி, விட்டு வீணான உடலை விட்டவுடன்
ஆங்கு, பரங்கடை துரியாதீதத்தில் இறைவன் சந்நிதியில
உலையும மாககடகம் (ஆக்கினைககுட்படுவோமென) நடுஙகும (ஆத லால) வானரம்
காண்டோறும் (இலைபபொட்டணத்துக்குள்ளிருக்குமவிஷப்பா மபைமறைததுமறைததுப்)பாாககுந்தோறும
முட்டு உறுதத (அதன்கை) முட்டுவலியுறுததி அழுதத
வாயப்பு,இல், அரி(அதைததிண்டிக்கொல்ல)இசைவில்லாதஅநநாகம்
மாண்டின் மாண்டதைபபோல (ஒருவேளை)
நின் (ஆன்மா இலலைனன்னும் குறறததிலிருநதுசடே றறம)பெறினும
இககொடுமைககு (இறைவனிருநதுமிலலையென்னும்) இநதப்பொ ல்லாஙகுககோ
ஆன் மன் இறை (உஙகள்) ஆதமா (நரகததுக்கு) இறையாகும
தீண்டாது (ஆதலால அவவிறைவனது) தீணடககூடாத
மண்டு சூழநதுவளைகின்ற
எரியை தீபோனற சினததீயை
சேறல் அறக மூட்டாதிருப்பீாகளாக

ஆன்மாவின் இயறகையறிவு பநதப்படுதலுககும அவவறிவுகுஞ சித்து வெளிபபடுதலுக்கும் இவவுடல சாதனமேயன்றி வேறொன் றுககு முதலாததும அறிவறறதுமெனககாட்ட "வீண்பொறி" என வும் நாஸதிகா உடல் ஸமரணையறறு நன்றாய் நிததிரைசெயத சுகத தை ஆன்மா ஒருவனிருபபதினாலேயே அறிநது இன்றைககுநன்றாய் நித்திரைசெய்தோமென்று பல தடவையும அறிநதிருக்கின்ற பிரத தியட்சமபோன்ற பலவறறையும இவாகள அறிநதிருபபதால எளி தில் ஆன்மா உளளெனககொண்டு அபபிடிவாததததை விட்டுவிட வேண்டியதிருக்க அவ்வாறின்றிப பாககு வெறறிலை சுண்ணாமபினால் வாயில சிகபபேறுவதுபோல பஞசபூதியஙகளின் கூட்டுறவினால் உட லுககு அறிவுகிடைதததென்று சொல்லுதல் குரங்கு பத்திரசாப்பப பொட்டணத்தைப பிரிதது உளளிருக்கும விஷப்பாம்பை அறிந்தும அப்பொட்டணத்தை எறிநதுவிடாத தன்மைபோல் எனககாட்ட இங்கு "காண்டோறு மாககடகமுட்டு" எனவும் இவ்வாறு ஆன்

மனிலனென்னுங் குற்றத்துக்குத் தப்பிக்கொள்ளினும் இறைவனி லன் இருக்கில் காணுனேனென்னுங் குற்றத்திற்குத் தப்பின் பிழை க்கவே கூடாதெனவுங்காட்ட இங்கு "மாண்டிலுறின் இக்கொடு மைக் கான்மனினா" எனவுங்கூறினா.

ஆன்மாவும் இறைவனும் இலனொன்பது சரியன்று என உவமை யுடன் அனர்த்தமும் எடுத்துக்கூறினமையால் உவம அலங்காரத் தோடு கூடிய அனர்த்த உற்பத்தி விஷம அலங்காரம். (எ)

## மாபத்திச்சிறப்பு.

பிணித்தமாபத்திநிலைபேற்றுநெறிதூண்டுமெதிர
கணித்தவைவயைக் காட்டாவோ கண்ணலரி—துணித்தவொழுக்
காற்றலறந்துவ்வாக்கிலேசாசையன்பீறும
ஆத்திகமேயாததிகமாமன்று.

| | |
|---|---|
| எதிர்கணித்தவையை | எதிரில்காணப் பட்டபொருட்களை |
| கண் அலரி | நேத்திரமும், சூரியனும் (சேர்ந்து) |
| காட்டாவோ | (ஆன்மாவுக்குக்) காட்டுமல்லவா |
| பிணித்த | (அதுபோல இறைவனைப்)பாசப் படுத்துகின்ற |
| மாபத்தி | (யான் என்னுடைமையன்று இறைவனுடை... எனக் கொள்ளுதலாகிய) தற்சுதந்தரஇழப்பு |
| நிலைபேறு நெறி | மோட்சபாதையை |
| தூண்டும் | தூண்டிக்காட்டும் |
| துணித்த | (இந்தத்தற்சுதந்தர இழப்புஉண்டாவதற்குக்கா ரணம்யாதுஎனில்பாவத்தைக) கண்டிக்கின்ற |
| ஒழுக்கு ஆற்றல் | குலாசாரச்செய்கை யேகாரணமாகத் |
| அறம் துவ்வா | தருமமும்(இது காரணமாகப்பிரபஞ்ச)வெறுப்பும |
| கிலேசம் | (இவ்வெறுப்புகாரணமாக ஆத்தும)கவலையும் |
| ஆசை | (இக்கவலைகாரணமாக மோட்ச)ஆசையும் |
| அன்பு ஈறு ஆம் | (இவ்வாசைகாரணமாக உண்டாகிய இறைவ)அ ன்புமேகடைசிக்காரணமாம் |
| ஆத்திகமே | (இத்தன்மைய தானதற்சுதந்தர இழப்பை உடை யோரது) இறைவவணக்கமே |

| | |
|---|---|
| ஆதகிசமாம் | வணக்கமென்றுசொல்லப்படும். |
| அன்று | (மறுமவர்கள் இறைவனேவணங்கும் வணக்கம) வணக்கமாக மாட்டாதாம். |

அஞ்ஞானமற்ற இருதயக்கண்ணும் ஞானசூரியனு முடையவ ாகளுக்கு தறசுதநதர இழப்புமமோட்சவழியும் சித்திக்கும் எனக்குறித் துககாட்ட "கனித்தவையைக்காட்டாவோ கண்ணலரிஎன உவமித் தும, குலாசாரவைராக்கியம்பொருந்தியவாகள்தமது குடிப்பிறபபுக்கு கிநதை அணுகுமென்றஞ்சி உயாதொழில் விருமபல் இழிவினே புரி தல வெறியாடல், வாக்குமாறல், உலகொவ்வாநடை, ஒருவர்செயத குறறம்பாராட்டல், நன்றிமறத்தல் சாதிவிட்டுச்சாதிபுகுதல், மாயமா லம. நமபிககைக்துரோகம், மூர்க்கம, இச்சகத்தால்வயிறு வளாததல், யாசிததல், வன்கண்மை, வணஙகவேண்டியவாகளே வணஙகாதிருத தல், பொய், விரோதம இரககமின்மை, பேராசை முதலியவைகளில தமமைப்பழககியும கொளளாாதமது குடுமபததையும பழக்கார் ஆத லால் " இநத துணிகதஒழுககாறல் " எனவும, சிலாதவிரப்பெரு மபான்மையோா பெயருககு மாததிரம்சமையவாதிகளாக இருக்கின்ற மையைக்கண்டித்து "ஆத்திகமே, ஆததிகமாமன்று" எனவுஙகூறினர்.

தூண்டும்; எனவும், காட்டாவோ ; எனவும் உடன்பாடும்எதிர் மறையுமாகக் கூறினமையால் வைதாமியபிரதிவஸ்துஉவம அலஙகாரம் ஒன்றிலிருநது ஒன்றுஎதுவாகக கண்டிருக்கின்றமையால காரண அலங்காரம். (அ)

வீட்டினவாவென்னுஞ்சீா விண்டாவாதாரககோல்
தோட்டிமையாயச் சூழநதவுரியாதீதன்—தாட்டோட்ட
ஈரமெனுஙகாரவலிக கேஙகமிடிலிறறழியும
நாறசீா கொண்டதிறைநன்கு.

| | |
|---|---|
| வீட்டின் அவாவு | மோட்ச இசசை |
| என்னும் | என்னும |
| விண தாவு | ஆகாயத்தைத தாண்டுகின்ற |
| சீா | சிறப்பினேயுடைய |
| ஆதாரககோல | கொழுகொமபின்வழியே |
| தோட்டிமையாய | ஒறறுமையாபத |

| | |
|---|---|
| சூழ்ந்து | (துரியாதீதத்தில் போய்ச்) சுற்றி |
| தௌரியாதீதன் | அத்துரியாதீதத்திற்கும் மிஞ்சியிருக்கின்ற இறைவனைத் |
| தாட்டோட்ட | தாட்டோட்டுச்செய்கின்ற |
| ஈரம் எனும் | மாபத்தியென்னும் |
| காரவல்லிக்கு | பாகலுக்குத் |
| ஏங்கு, ஆம் | (தெய்வ) பயமென்னும தண்ணீர் |
| இடின் | பெய்துவராவிடின் |
| இற்று, அழியும | (அப்பாகல்) கெட்டு உடனே அழியும் |
| இறை | (அவை இறைவனுக்கு உகந்ததாய்ப்பக்குவமாதல் எங்ஙன மெனஓருவரும ஐயுறவேண்டாம) கடையெழுவள்ளலி லொருவனாகிய மலையனென்னும அரசன் கூட |
| நாறநீா | (மலைவாசிகள் கொண்டுவந்த துருத்தியினால்) நாறிப்போன தண்ணீரையும |
| நன்கு கொண்டது | அமமலைவாசிகளையும மிகவுமஅன்போடு ஏற்றுக்கொண்டான் |

நான், எனது, என்னும் அகங்கார மமகாரங்களை யொழித்து யான்என்னுடைமையன்று இறைவனுடைமையென்னும் மாபத்தி சிறசில சமயங்களில் இடையூறுபடாததாகுமெனக் குறிப்பிட்டு கசப்புத்தன்மையுடைய பாகலை உவமித்தும் கடையெழுவள்ளலி லொருவனாகிய மலையனென்னுமரசன் மனுபுக்கிரனாயிருந்தும தனக்கு வெகும திகொணர்ந்து கண்டுகொண்ட நாறத்தண்ணீரிலை யாதொருபலன் இன்றாயினுமஅதனைப்பெற்றுமகிழ்ந்து உபசரித் திருக்கையில் பேரருளுடையோனாகிய இறைவன் தன் மேல்வைக்கும பயபக்தி எப்படிப்பட்டதாயிருக்கினும அவற்றிற்காக மகிழானோ எனக்குறித்துக்காட்ட நாறநீர் கொண்டிறை நன்கு எனவுங்கூறினா.

பயபக்தி மோட்ச இச்சை ஆகிய இவற்றை நீர், பாகல் கொழுகொம்பாய் ரூபகஞ் செய்தமையால் உருபக அலங்காரம.

"நாறநீா கொண்டிறை" எனயாவரும் ஒப்புக்கொண்ட சங்கதியைக்கொண்டு நூலாசிரியா தான்எடுத்துக்கொண்ட சங்கதியைச் சமாப்பித்தபடியால் அாத்தாந்தரநியாச அலங்காரம. (௬)

இதற்கேயாமுட் கரணமித்தினன் மீக்குமழலு
அதர்க்கேய்க்குமாணு வத்தையன்றாக்கும்—கதப்பேயக்குச்
சூட்டுக்கோலாங் தேவைச்சூற் காணவாங்கதரான்
மாட்டுமோம் யாதறிவர்மற்று.

| | |
|---|---|
| உட்கரணம் | மனம், புத்தி, சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணம் (ஆசைவெகுளி மயக்கங்களில்சிக்கும்படியல்ல) |
| இதற்கேயாம் | இத்தன்மையதான மாபத்திசெய்யவே உரித்தானதாம் |
| இத்து, ஈனன் | இவ்வாறான மாபத்தியோ (அதனைக் கைக்கொண்ட) நீசனையும் |
| மீக்கும் | (பிறப்பு முதலிய இழிவானசெய்கைகளிலிருந்து நீங்கி) மேலானவனும் ஒழுகச்செய்யும் |
| அழல் அதர்க்கு | நரகபாதையை |
| வய்க்கும | ஏமாத்திவிடும் |
| ஆணுவத்தை | (நான், எனது) என்னும்அகங்காரமமகாரங்களை |
| அன்று, ஆக்கும் | இல்லாமல் செய்து (இறைவனிடத்தில் பயத்தை) உண்டுபண்ணும் |
| கதப்பேய்க்கு | (ஆணுவத்தில் முககிய ஆணுவமாகிய) கோபமென்னும் கொள்ளிவாய் பிசாசுக்கு |
| சூட்டுக்கோல் | (அதுஒருக்காலும்அணுகாதபடி)சூட்டுததழும்பு |
| ஆம் | போன்றிருக்தம |
| சூல், காண, ஆம் | கன்றைர்காணுமாறு |
| கதறு ஆன் | கதறுகின்ற பசுவைப்போல |
| தேவை | (தமது அடியார்கள்மேல் மயக்கஙகொண்டு நீங்காதிருக்கும்படி) இறைவனை |
| மாட்டுமோம் | பாசத்துக்குள்ளாககும் (இவ்வாறு) |
| யாது | (இம்மாபத்தியின்பெருமை பலவாகையால்) எதை |
| அறிவா | அறிந்து விதவான்கள் கூறுவர் |

மற்று—அசைநிலை

இறைவன் மோட்சத்தை எளிதில் கொடுக்கில் அதனை குரங்கின்கைய பூமாலைபோல ஆன்மாவானவன் அலட்சியம் செயவன் ஆக

லால் ஆன்மாக்களுக்கு அம்மோட்சமாகிய பந்தயப்பொருள்வேண்டுமெனில் அந்தக்கரணம வேறுவழியில் செல்லாதடக்கி மாபத்திக்கே உரித்தாகக் கொளளுதலாகிய பந்தயகுறியை வைத்திருக் கின்றனன், எனககாட்ட இஙகு "இதறகேயாமுட்கரணம" எனவும் கொளளிவாயப் பிசாசுபிடித்தவனை அப்பிசாசுவிட்டு நீஙகுமாறு அவனுக்குச்சூடுபோடுதலைததவிரவேறுவழியில்லாததுபோல மாபத்தியை ததவிர மூககிய ஆணுவமாகிய கோபத்தை நீககவேறுவழியில்லையெனவும், காட்ட இஙகு "கதப்பேயகசுச சூட்டுககோலாம" என உருவகப்படுததியுங கூறினார்.

ஒருசெயலாகிய மாபத்தியின் தன்மையைப் பலவாறுகபபுகழுகின்றமையால் உல்லேக அலஙகாரம (ம)

## அன்பின்பயன்.

ஆதரித்தன்னமிட்டுண்டான மன்மேலாககுழுவல்
கோதில் வருவாயாங்கொளளலுறும—மாதலைவாய
வரைவிலபுகழ மனஙகடகைகக கூட்டு மாமனையார
சரியாகாராவாதலை.

| | |
|---|---|
| ஆன்மன்மேல் | ஆன்மாவைமேலாகச |
| ஆககுஉழுவல | செய்கின்றவிடா அன்பானது |
| ஆதரிதது | (பதின்மரையும) பாதுகாதது |
| அன்னமிட்டு | அன்னமுதலிய வைகளைககொடுதது |
| உணடு கோதில | (பதினொன்றாகிய தானும) அனுபவிதது (தான்செயயும எநதமுயறசியிலும்) குறறமறற |
| வருவாயாம் | வரவாகியையே |
| கொளளல உறும | அடைதலுக்குசசாதனமாகும |
| மாதலைவாய் | இலட்சுமீகரமபொருநதியவீட்டுத்தலைவாயிலில் |
| வரைவு, இல், புகழ | (யாதொரு) இழுககிலலாத கீர்த்தியுடன் |
| மனஙகள் | (பலரது) மனஙகளையும |
| கைககூட்டும | (தன்னையுடையானுககுக) கைவசப்படுததும |
| மா, மனையார | (ஆனால்) மாட்சிமைதஙகிய இல்லாளை |
| ஆவார், தலை சரியாகார | உடையவாகளே (விடாஅன்பில) முதன்மையாவாாகள (மறறபபடி தனமனையாளைவசபபடுததி |

அவ்வன்னைப் உபயோகிக்கின்ற இடையான வர்களும் அவ்வாறு வசப்படுத்தியும் அவ்வன் புக்கு இடையூறு செய்கின்ற மனைவியை உடைய கடையானவர்களும் முந்தினவர்களுக்(கு) ஒப்பாக மாட்டார்கள

பதின்மராவன, பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி, தரித்திரன், இரட்சணியமிழந்தோன் அனுதி, பிதிரார், தெய்வம், விருந்தினர் சுற்றத்தார்.

கணவனது கருத்துக்கிசைந்து ஒழுகுபவளே மாட்சிமைப்பட்ட மனைவியாவாள் ஆதலால் மாமனையாா என்றார்.

அன்பினுடைய சுபாவங்களைச்சிறப்பித்துக் கூறினமையால்சுபாவஉத்தி அலங்காரம். (கக)

நீதிநடுமுறைமை நிலையுண்மை யீவுபயன்
ஏதன்பிற்றி லார்க்கன்றுபயன்—ஈதுண்டேல்
பூமாரிபோன்று பொழிபாகுபந்தரினில்
தேமாரிபோலச் சிறந்து

| | |
|---|---|
| நால் இல்லார்க்கு | நாக்கு இல்லாதவர்களுக்கு |
| பயன்அன்று | (தானுண்ணும் உணவின் உருசியை ஆன்மாஅறியாதபடியால் அதற்குப்) பிரயோஜனமன்று (உடலுக்குத்தான் பிரயோசனம்) |
| அன்பு, இல் | (அதுபோலஒருவனுக்கு) விடா அன்பில்லாவிடின் |
| நீதி, நடு | நியாயம், நடுநிலைமை |
| முறைமை, நிலை | நல்லொழுங்கு, உறுதி |
| உண்மை, ஈவு | சத்தியம், கொடையாகிய இவைகளால் |
| பயன், ஏது | (யாதொரு) பிரயோசனமு மில்லையாம் (ஆதலால்ஒருவனுக்கு) |
| ஈதுண்டேல் | (மேற்சொல்லியவற்றோடு) இந்தவிடாஅன்பும் உடையதாயிருக்குமானால் (அது) |
| பாகு பந்தரினில் | சர்க்கரைப்பந்தரில் |
| சிறந்து | மேற்பட்டு |

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம் பெசன்ட் நகர், சென்னை-20.

| | |
|---|---|
| பூ, மாரிபோன்று பொழி | (பலவைபவங்களும்) பொலிவுற்சமெயயும், மேகம் போன்று பொழிகின்ற |
| தேமாரிபோல | தேன்மாரிவருஷித்ததுபோலவாம் |

நாக்கில்லாதவன் உண்ணும் உணவு தனது உடலுக்கே பிரயோசனப்படினும் அவ்வுணவின் சுருசிகளும் ஆன்மாவுக்குயாதொருபிரயோசனப்படாததுபோல ஒருவனிடத்தில அன்பில்லாவிட்டால் நீதிமுதலிய ஆறும் தன்னே அடைந்தவனுக்கு இன்பதனைப்பயகதுமேயன்றித் தனக்கு மறுமைப் பிரயோசனத்தைத் தரமாட்டா என "தாலிலார்ககன்று பயன்" எனவும் உவமித்துக்கூறினர்

நாக்கு இல்லார்க்குருசியின் பிரயோஜனமில்லை நீதிமுதலியவைகள் இல்லாதவர்க்கு மறுமைப் பிரயோஜனமில்லை என்றமையால் பிரதிவஸ்து உவம அலங்காரம். (கஉ)

ஓட்டுமாமுட்பகையின் றோட்டினது தறபுசழக்காய்ச்
சாட்டியர்க்குமவ்வன் பேசார்பென்றல்—சூட்டலுளன்
வாகினபம்பூமலடிமஞ்சு முயற்கோடீர்த்தாண்
ஆருவந்தாட்கென்ற லரோவாங்கு

| | |
|---|---|
| உட்பகை | காமக்குரோத, உலோப, மோக, மத, மார்ச்சரியமென்னும், ஆறையும் (விடா அன்பு) |
| ஓட்டுமாம | ஓட்டிவிடுமாம் |
| இன்று, ஒட்டின் | (அவ்வன்பு)இல்லாமல்ஒருவன் (உட்பகைஆறையும் பார்வைக்கு) விட்டு இருப்பானுயின |
| அது, தற்புகழ்க்காய் | அவ்வாறிருக்குகைதற்புகழச்சிகேயாம் |
| அவ்வன்பே சாட்டியர்க்கும | அந்தப்போலி அன்புதன்னேயுடையானேவிரோதிக்கின்றவாகளுக்கும் |
| சார்பென்றல் | துணேயெனச்சொல்லுதல் |
| வாகின்,நபம்,பூ, | ஆகாயமண்டலத்திலுள்ள தாமரைப்புஷ்பங்களே |
| மலடி, மஞ்சு | மலடிவயிற்றில் பிறந்தமகன் |
| முயல், கோடு | முயற்கொம்பினுல் |
| ஈர்த்து ஆண் | இழுத்துப்பறித்து ஆண்மகனது |
| ஆருவந்தாள்கு | தொப்பூழில் பிறந்தபெண்ணுக்கு |

| | |
|---|---|
| சூட்டஇளன் | அவள்மனேவியாகும் பொருட்டுமணமாலேயாக ச்செய்து) அணிதலேப்பொருந்தினன் |
| என்றலரோ ஆங்கு | என்றுசொல்லுதல்போலாம் |

தனக்குத் தீங்கு செயகின்றவாகளுக்கும் நன்மைசெய்கிறகுணம் விடா அன்புடையோாகளுக்கு உரிததேஅன்றி மற்றையோாகளுக்கு உரித்தலவ, எனக்காட்ட இல்லாமைகளே இங்கு உவமித்துக் கூறினா.

அவ்வாறுகூறினமையால் அபூத உவம அலஙகாரம்.

அரோவென்னுமொழி நாவுக்குஇன்பம்தரும் அசைநிலே (கசு)

## இன்சொலுடைமை

கவருநதேக்கூட்டுறவுங கைவசிக்குமா சூடடோ
டவனியுளையாணராக் காண்டறரும—கவனமிடின்
இருபணத்தோன்கமழ்க்கின் கேழொன்றோகேர் நடுவன்
பருண மாட்டின் மொழிதாளுண்டு

| | |
|---|---|
| கேர், நடு | (தனது குடிப்பிறப்புக்கு இழிவைத்தரும் தீ யொழுககுக்குப்) படப்படுதல் நிதானம |
| அன்பு அருள் நம ஆட்டு | (ஜீவாகளிடத்தில்) அன்பு, ஈகை ஆகிய இவற் றைத் (தன்னேஉடையவனிலிருந்து) பொ ஙகியெழச் செய்கின்ற |
| இன், மொழிதான் | இனிமையானவார்த்தையானது |
| ஆண்டு, கவரும், தேகூட்டுறவும் | (தன்னே) அப்பொழுதே கைவசபபடுதெதுகின்ற கிருபையின் கூட்டுறவையும் |
| மா, சூட்டோடு | மகிமைதங்கிய நன்குமதித்தலுடனே |
| அவனியளை கைவசிக்கும் | உலகத்தாளையும் (தன்னே உடையவனுக்குக கைவசப்படுத்திக் கொடுக்கும் |
| ஆண், அரா | (அவனிடத்தில் வந்தடைந்தவர்களே அவனது ஆணவமென்னும் விஷப்பாமபைத் |
| காண்டல் தரும் | தலேயெடுத்துப்பார்க்க வொட்டாதாம் |
| கவனமிடின் | (இன்னும் நன்றா , யோசிக்குமிடத்தில் |

கிருபணத்தோன் — உலோபமுதலியவற்றை யுடையவன் (இதனை அனுசரிப்பானாயின் அவனைத்)
கமழ்க்கின் — தயாளுவாக்கினால்
கேழ் ஒன்றே — (அதன்) தன்மை ஒன்றே (இவ்வாறு) பலவாம்

கீழ்மக்கள் குடும்பத்தில் தீயொழுக்கமும், மேன்மக்கள குடும்பத்தில் நல்லொழுக்கமும் இயல்பாய் அமைந்திருககின்ற மையால் அத்தீயொழுக்கு தமதுகுடும்பத்தையும் ஆண்டுகொள்ளாமல் அதற்குநடுநடுங்குவர்கள் எனக்காட்ட " கேர் " எனவுமகீழ்மக்களில் ஒருவன் இனியவைகூறலாகிய இவ்வொன்றையாவது மாய்மால மறறதாய் அனுசரிப்பானாயின் உடனே அவனையும அவன் குடியையும் நல்லொழுக்கம் வந்து ஆண்டுகொள்ளு மெனக்காட்ட " நடுவன் பருணமாட்டு " எனஅடைகொடுத்தும் உடனேகிருபை உண்டாகி அவ்வினியவைகூறலுடன் சேர்ந்துகொண்டு சறகிருத்தியஞ் செய்யு மெனக்காட்ட " கவருந்தேக்கூட்டுறவுங் கைவசிக்குமா சூட்டோட வனியவா" எனவும் எவ்வகையோருககுங் கீழப்படியசசெயயும்எனக்காட்ட" ஆணைராக்காண்டறும் " எனவும், மற்றஉட்பகைமுதலிய வற்றையும் ஓட்டுமெனக்காட்ட " கிருபணதகோன் கமழக்கின்" எனவும்கூறினர்.

கிருபணத்தோன் கமழ்க்கின் என இனியவைகூறலே முக்கியப் படுத்தியுங் கூறினமையால் வெதிரேக அலஙகாரம். (௰௪)

மணவாளிகட்பதிக்கு மன்றமயக்கறநால்
சணலாடி சாடுலகமுஞ்சாடா—குணனுடில்
எரிமுகங்கூர்ந துயிர்க்கணேற்றருளின கூறறுவிடார்
துரிதமொடு பற்றுமேல் சூழ்ந்து.

மன்றம் — (விவாக உற்சவமண்டபத்தில்கூடிவந திருக்கும்) சபையானது
மணவாளி — (விவாகம்பண்ணிக் கொள்ளும்) ஸ்திரிபுமானிருவரிடத்திலும்
கண், பதிக்கும் — (தங்கள் தங்கள கண்களை ஊன்றித்திருஷ்டிவைக்கும்
மயக்கு, அற — (அதுபோல) சந்தேகங்கள் நீங்குமபடி.

| | |
|---|---|
| நூல், சுணலாடி | நூற்பொருளின் உட்கருத்தைத் தகர்த்து வெளிககருத்தாககுகின்ற வித்துவானே |
| சாடு உலகமும | நெருககி அவன்வசமாகின்ற உலகத்தாரும்கூட |
| குணம, நாடில் | (அவன்) இனிமையான வார்த்தைகளைக்கூற விருமபாவிடின் (அவனிடத்தில்) |
| சடார | நெருஙகவேமாட்டார்கள் |
| மேல் சூழ்ந்து | (இதனையும) அறிவிறபெரியோர்கள் ஆலோசித்து |
| எரி, முகம | (கடினமொழியினால முகநரம்புகள் பின்னப்பட்டு அதனால்முகமானது) எரிமுகமாகுதலையும |
| கூர்ந்து | கவனித்து |
| உயிர்கண் | ஜீவர்களிடததில் |
| அருளின், ஏறறு | கிருபையைபபொருந்தி |
| கூறறு | (இனியமொழிக) ஞானாததலே |
| துரித,மொடு,பறறு | உடனேகைக கொளளாமல் |
| விடார | சும்மாயிருக்கமாட்டார்கள |

எரிமுகமாவது தன்னிலுள்ள அழகு குனறுமபடிக் கடுகடுததமுகமாயிருக்குதலாம். (௰௫)

இமமைககு முமமைககுமின்புநயம போக்கடிக்கும
வன்மொழிபபேய முதிரவாழதலது—கைமமெயதாய்
தமபொருளோடாஙகருள போயததட்டு மருட்சுருட்கள
புனகுடிசைககூட்டு மவனபோல்.

| | |
|---|---|
| இமமைக்கும், உமமைககும | (மறறநற்செயல்களினால் கிடைதத) இகபர இரணடினுககுமுரிய |
| இன்பு நயம | இன்பமாகிய இலாபததை |
| போககடிககும | நாசப்படுததுகின்ற |
| வன்மொழி | கடினவார்ததையானது |
| முதிர | (தன்னில் மாத்திரமலல தன்னைசசேர்ந்தகுடுமபமுதலியோர்களிடததிலும) நிலைபெறறோஙகுமபடி |
| பேய்வாழ்தலது | மதிகெட்டததனமாகக்குடிவாழக்கைசெயதலானது |
| கைமமெயதாய | (தன்) சொநத அனுபவததினாலேயே |
| தமபொருளோடு | தமது வைபவஙகளுடனே |

| | |
|---|---|
| ஆங்கு, அருள் | தெய்வ அருளும் |
| போய், மருள் | பேர்மயக்கத்தையும் |
| சுருள் தட்டும | (தரித்திரமடைந்து பசிமுதலியவற்றால்) சுருட்சியைக்கைக் கண்டபலனாக அநுபவித்தும் |
| கள்,புன்,குடிசைக்கு | கள்ளைத் (தான் உண்பதுந்தவிரத் தனது) நீசத்துவமான குடும்பப்பிள்ளையையும |
| ஊட்டுமவன் போல் | ஒக்கலில் வைத்து உண்ணக் கொடுக்கின்றவன் செயல்போலாம். |

வன்மொழிப்பேய்எனக்கொண்டு, கடினமொழியாகிய பிசாசம் எனக்கொள்ளினும பொருந்தும்.

சுருட்சியாவது கையிலுள்ளவற்றையெல்லாம் கொடுத்துக் குடித்துவிட்டதனால் வெறிநீங்கினவுடனே அவவெறியினால் எழுப்பபபட்ட உதராக்கினியை ஏதாவது புசித்துததணிக்க ஒன்றுமிலலாமையால் மயங்கிச் சுழன்றுவிழுதலாம். (௰௬)

## அறப்பயன்.

தனக்கு நிலை பாழ்கோட்குந் தலையாகுங் கல்வியிதோ
தனக்கே தற்கால்வழிக்குந் தானாக்கும—எனக்கொடையும்
வீண்போகா கூழ்க்கெருவு வீழ்வடிக்கதலி
கோண்புசெயல் காய்கனியாங் கூறாது.

| | |
|---|---|
| கல்வி | கல்வியானது |
| தனக்குநிலைபாழ கோட்கும | தனது நிலையாகிய ஆன்மன் இலன்உளன் (என்னும இரு) செயகைகளுக்கும |
| தலையாகும் | காரணமாகும |
| இதோ | இவ்வறச்செயகையோ (அவ்வாறல்ல) |
| | ஆன்மா உளனென்பவனுக்கே உரித்தாகும் |
| தன் | (அவ்வாறு உரிமையைபபூண்ட) தனககும |
| கால்வழிககும | (தனது) பின்னடியாருக்கும் |
| தான் | தானாக இருந்து |
| ஆக்கும் | (இகபர இன்பததை) உண்டுபண்ணும் |
| எனககொடையுமு | (ஆதலால கல்வியின் பயன்போலல்ல) எபபடிபபட்ட அறபபயனும |

| | |
|---|---|
| விளைபாகா | விண்போகமாட்டாவாம் |
| கூழ்க்குளருவும் } வீணே } | (ஏனெனில்) பயிருக்கு இடப்பட்ட எவ்வகை எருவும் வீணுமோ |
| அடிக்கதலி | (இவற்றையும் ஒருவாழையை நாட்டினுல் நாட்டினவனுக்குப் பலமுறையும்) அடிவாழைக் கன்றுகள் |
| காய்கனியாம் | (தோன்றிக்) காயுங் கனியும் ஆகின்றதையும் |
| கூர்ந்து | கவனித்து |
| கோண்பு | (அறச்செயல்களை நாம்நடத்துவதையாவது மற்றவர்கள் நடத்துகின்றதையாவது)இடையூறு |
| செயல் | செய்யாதிருக்கக்கடவர்கள் |

தனக்கு நிலைபாழ்கோட்கும் இவற்றில் கோட்கும்என்பதை இழிவுசிறப்பு உம்மை யாகக்கொண்டு கல்வியானது தனது நிலையாகிய ஆன்மாமாத்திரம பாழாகாது ஒருவனுக்கு முதன்மையாயிருக்கும் எனக்கொள்ளினும் அமையும்.

அறப்பயன் கல்வியைவிட மேலாதிக்கமுள்ளதெனக் கூறினமையால் வெதிரேக அலஙகாரம். (டுஎ)

உடல்பிழுநதான் மனையுழுடுலையச் செய்யுலையைக்
கடவுசெயுமிசசெயலாங் காணைசாண்—உடல்சாணுய்
இரததல் குடாப்பறிதது மின்றரம்பைநாரென்ளுா
தரமென்ன வீயவென்ளுா சாரநது

| | |
|---|---|
| எண்சாண்உடல்சாணுய் | எண்சாணுடம்பு ஒருசாணுக்குறுக |
| இரத்தல இச்செயல் | யாசித்தலாகிய இசசெய்கையானது |
| உடல்பிழுந்துஆன்மனையும | உடலைப்பிழுந்து ஆத்துமாவை |
| ஊடுலைய | வேறுகப்பிரிநது நடு நடுஙகச் |
| செய் அலையை | செயகின்ற கொடுரசசெய்கையை |
| கடவு,செயும்,ஆம் | யோக்கியப்படுததுமாம |
| குடர்பறிததும்இன்று | (இவ்வாறிருக்க) குடலைப் பிடுஙகிப்போட்டும |
| அரம்பைநார் | வாழையினதுநார் |
| என்ளுர் | (என்றவர்கள்தான் இவனுக்குக்காலுங் கையும், திறமும,வலிமையும இருக்கையில்யாசித்தல கூடாதென முறுமுறுப்பாரகள்) மறறையோர் |

| | |
|---|---|
| சாந்து | யணம் ஒத்து |
| ஈய, தரம, என்ன | (இவன்)கொடுத்தலைப் பெற்றுக்கொள்ளுதலுக்கு ப்பக்குவஞவை தெப்படி |
| என்ஞர் | என்று ஒருபோதுஞ் சொல்லமாட்டார்கள் |

காண் ஆனசங்கை

உயிர்விடுஞ் செய்கையிலும் யாசிக்கும், செய்கை நீசத்துவமா கையால "உடல்பிழந்தான் மனையுழுவிலேயச் செய்யலேயைக்கடவுசெ யுமிச்செயலாம்" எனவும் குடைப்பிடிங்கியும் வாழைநா என்கிற வர்களை ஒததவர்களே யாசிததலின் நீசத்துவத்தைப் பகுததறியாரெ னக்குறிப்பிட்டு "குடர்ப்பறித்து மின்றரமபைசாரொன்ஞர்" எனவும் கூறினா.

யாசித்தலை மிகவும் நீசத்துவப்படுத்திக் கூறினமையால் வெதி ரேக அலங்காரம். (௰௮)

எட்டாங் குணத்தனிவை யிவ்வினிஞர்க் கின்னதெனத
திட்டபட்டமா யன்றேசெய்ததனுக—குட்டுப்புக்
கலலெனினுமுண்டோ கசட்டெனதுதற சுகம்போம்
பல்லங்கண்டம் முகள்வோன்பாறறு.

| | |
|---|---|
| எட்டாஙகுணத்தன் | எண்குணத்தையுடைய இறைவன் |
| இவைஇன்னி ஞர்கு இன்னது என | இன்னின்னவஸ்துக்கள் இன்ஞர்க்கு இன்ஞர்க் குஇத்தன்மையதாக உதவும் என |
| திட்டபட்டமாய | சட்டதிட்டமாய் |
| அன்றே | அநாதிகித்தியத்திலேயே |
| செய்ததனுக்கு | (அவனவனது செயல்களையும் முன்னறிந்துஅவ னவனுக்குத்தக்கபடி அமைததுவைத்ததற்கு |
| உள்து, உப்புக்கல், | (மிஞ்சி) உட்கொள்ளுகின்ற உபபுக்கல் முத |
| எனினும்உண்டோ கசடு, என் | லாகியதும்கிடையாது (உண்மை இவ்வாறுதலால் ஒருவனது) பிசினி த்தனத்திஞல் யாதுபிரயோசனம |
| அது | அந்தப்பிசினிததனததிஞல் |

| | |
|---|---|
| பல்லம் ஆம், கண்டு | கறடியை ஆடாக நிதானித்து (அதனைத்தன்னதாககிக் கொள்ளத்) தண்ணீரில் |
| உகள் வோன் | பாய்ந்து வருந்தினவனது |
| பாற்று | பகுதியை உடைத்தாய் |
| தன்சுகம்போம் | (இகடரகளில்) ஆன்மாவுக்குரிய இன்பம்தொலைந்துபோம |

தன்வயத்தனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கல், முடிவிலா ஆற்றலுடைமை, பேரருளுடைமை, வரம்பிலின்பமுடைமை, தூயஉடம்பினனாதல் ஆகிய இவைகளை உடையானை எண்குணத்தான்.

கறடியைப் பற்றினவன் செயலைக்கொண்டு பிசினியின் செயலைத்திருஷ்டாந்தப் படுத்தினமையால் சாதருமிய திருஷ்டாந்த அலங்காரம். (மகூ)

## நிலையாமை.

நிலையென்பமூன்றதையே நிலையாமைசின்னீர்
அளவையாவாரு கோலாண்டுவரும்—சலதாரை
ஏறிக்கீழ் முட்டகத்தார்கதேற்ற கறளாரமூக்குக்
காறுவெயிலாடியன் றேகாண்.

| | |
|---|---|
| ஏறி | (இருதயத்தை அனுசரித்து மனமாகி அம்மணமேகண்டத்தில் சித்தமாய்க் காரியப்படவும நெற்றிப்பொருத்தில்மூளையை அனுசரித்துப் புத்தியாய்க்காரியப்படவும்) மேலெழும்பி |
| கீழ்முட்டு | (மறுபடியும் அகங்காரமாய்க் காரியப்படுமாறு) தொப்பூழ்வளாப்பாய்ந்து மோதுகின்ற |
| சலதாரை | (அந்தக்கரணவிர்த்தியென்னும்) அசைந்துகொண்டிருக்கு தலையுடையகண்மணி |
| சித், நீர் | (பரிசுத்தமும், அழகுமாகும்படி அதனை) ஆத்தும ஞானமென்னும்தண்ணீனாக் கைக்கொண்டும் |
| அளவை ஆம் | (பிரத்தியட்ச அனுமான உபமான ஆகமப்)பிரமாணமென்னும் |
| வாரு, கோல் | (மை) ஒழுகப்பெற்ற அஞ்சனக்கோலைக் கொண்டும் |

| | |
|---|---|
| ஆண்டுவரும் | கையாளப்பட்டுவருகின்ற |
| அகத்தார்க்கு | (உத்தம) அந்தக்கரணவிர்த்தியைஉடையமெய்ஞ் ஞானிகளுக்கு |
| மூன்று* | பஞ்சபூதியத்துடன் (அதன்காரியமாகிய) உடல் செல்வமென்னும் மூன்றும் |
| நிலையாமை | நிலையற்றதாம் |
| அதையே | அந்தமூன்றையே |
| ஏற்ற கறளார் | (மனதில்) அஞ்ஞானமென்னும் மாசுபிடித்திருக்குதலை உடையவர்கள் |
| நிலைஎன்ப | நிலையென்று சொல்லுவார்கள் |
| அழுக்கு, ஆடி | (இவர்களுக்கும் அந்த மெய்ஞ்ஞானிகளுக்கும் ஆன்மா ஒரேதன்மையை உடையவைகள்தானே எனக்கேட்கில்) அழுக்குக்கண்ணாடியில் |
| அன்றோ, காறு, வெயில் | அல்லவா கறுப்புவெயில் |

காண்—அசைநிலை.

* அந்தக்கரணம், இருதயஸ்தான சாரத்தின்செயலினால் மனமாயும் கண்டஸ்தானசாரத்தின்செயலினால் சித்தமாயும் நெற்றிப்பொருத்துக்குநேருள்ளமூளையின் சாரத்தின்செயலினால் புத்தியாயும்அது கீழே பாயும்போது தொப்பூழுக்கு மேலுள்ள ஸ்தானங்களின் சாரத்தின்செயலினால் அகங்காரமாயும் பரிணமித்து ஆன்மாவுக்குச் சாதனப்படுகின்ற இந்நான்குபொறிகளும் அந்தக்கரணவிர்த்தியாம் இவ்வாறுஓரே வெயிலானது கறுப்புச்சிகப்பு பச்சை நிறக்கண்ணாடிக்குத் தக்கது பல பல நிற வெயிலாகத் தோற்றுவதுபோல ஓரேவஸ்துவாகிய அந்தக்கரணமே இடபேதத்துக்குத்தக்கது மனமாயும் சித்தமாயும் புத்தியாயும் அகங்காரமாயும்பரிணமிக்கப்படுகின்றது.

சலதாரையென்பதைச் சாக்கடையெனவும் வாருகோல்என்பதைத்துடைப்பான்எனவும் பலருங்கொள்ளுகின்றனர் அவ்வாறுரைப்பது நூலாசரியர்கருத்தன்று.

பிரத்தியட்சப்பிரமாணம் இன்றானல் மற்றையமூன்று பிரமாணமும் இன்றாதலால் அளவைஎன்பதை ஒருமைகொடுத்துமுடித்திருக்கின்றனர்.

அறிவே ஆத்துமா அஞ்ஞானிகள் மெய்ஞ்ஞானிகளது எல்லா ஆத்துமாக்களும் ஒரேதன்மையையுடையன எனக்காட்ட "காறுவெயில் ஆடியன்றேகாண்" எனவுங்கூறி நிரூபித்து விட்டமையால் அர்த்தாந்தரநியாச அலங்காரத்தோடு கூடியகாவிலிங்க அலங்காரம்(உம்)

தந்தி லுழப்பாங் கோட்டுத்தாழ்பீளைக் கண்ணொழுகும்
பந்துமுகக்கோனடுக்கி பாட்டனங்கால்—அந்தித்தும்
தகைந்துமுல்லைத் தேனருந்தித்தனகன்ன கண்சுவைக்கும்
தேகம்பூதிபுன் மணியாநிட்டு.

| | |
|---|---|
| தந்தம் இல. | (மனமே) தந்தம் இல்லாது |
| உழப்பாம் | (நாக்குக்) குழறிப்பேசுதலையுடைய |
| கோட்டு | (கோட்டுவாகிய) உமிழ்நீர்வடிதலொடு |
| தாழ், பீளை | ஆழ்ந்தகண்பீளையைப்பொருந்திய |
| ண்,பந்து,ஒழுகும் | கண்ணையும், பந்தை ஒழுகுகின்ற |
| முகம் | (குழிவிழுந்த) முகத்தையும் |
| கோல் | *(உடல்குறுகித்தளர்ந்துத்தள்ளாடி) ஊன்றுகோலை |
| நடுக்கி | நடுக்கிக்கொண்டுநிற்கின்ற(இந்தப்)பாட்டியை |
| நம்பாட்டன் | (இளமையில்) நமதுபாட்டன் |
| கால் | (கூடமுயலுகையில்அவள் ஊடல்கொண்டு சிரசுக்குநேரே உதைக்கப்பட்ட) பாதத்தைச் |
| அந்தித்தும் | சிரசில்சூடியும் |
| தகைந்து | (இவளையாசித்து) வசப்படுத்தி |
| முல்லைத்தேன் அருந்தி | முல்லைமலர்போன்ற நகைப்பை இனியவார்த்தைகளினால் உண்டுபண்ணி அதரபானஞ்செய்து |
| தனம், கன்னம் | ஸ்தனங்களையும், கன்னங்களையும் |
| கண் சுவைக்கும் | கண்களையும் சுவைத்து இன்பமாக நினைத்து நுகர்ந்தனன் (இதன்றியும்) |
| தேகம், பூதி | இவ்வுடலானது துர்நாற்றத்தையுடையது |
| புல், மணி, ஆம் | புல்லினது நுனியின் துளியொன்று நிலையற்றது |
| நிட்டு | (ஆதலால் இவ்வுடலை) இகழ்ந்து வெறுத்து விடக்கடவை. |

உடல் அரோசிகரமெண நிருதித்துக குறைசை ரசப்படுததினமை யால் இககவிசாந்தரசததையுடைய இந்நூலுககு அங்கமாயிறறு.(உக)

என்றுறறரூ பறிவேயிககட நேர்வைபவஞ்சாண்
ஒன்றுபுரிநம்பொணுமீ தொன்றலொணு—வன்பூட் டை
ஆண்ட து போலாண்ட குடியாடிய தவவாறுய்ப்பால்
பூண்டுணாநாக் கூழககோட்டுமபோய.

| | |
|---|---|
| என்று, உறறு | (ஆன்மா) எப்பொழுதும் நிததியமாயிருநது |
| அரூபு, அறிவே | ரூபமறறதாயும அறிவுமயமாயும இருககின்றது |
| இக்கடம, நோ | இநதவுட லோ (அழிவையும ரூபததையும அறிவிலலாமையையும பொருநதியிருப்பதாலஅநத ஆன்மாவுககு) நேரவிரோதமானதாம் |
| வைபவம | (இவவாறுநிலையறற இவ்வுடலைககொண்டு இன்பம் நுகருமபடியான) செலவஙகளோ |
| வன்பூட்டை | (ஒருகடத்தில தண்ணீரும மறறொருகடத்தில் வெறுமையாகவும் மாறிமாறிவருகின்ற) வலியஇருகை இறை கூடைகளோ |
| ஆண்டது, போல் | கையாடினதுபோல் |
| ஆண்டகுடி | (இராசாஙகததோடு) அரசாண்டகுடும்பததோன் |
| ஆடி | கூத்தாடியாகவும |
| அது, அவ்வாறுய் | அந்தக்கூததாடிக்குடுமபததுக்கு அநத இராசாஙகத்தை உடைததாககி |
| பால், பூண்டு | பாலை ருசிததது |
| உணா நா | (அதற்குப் பழுது) சொல்லுகின்ற நாககையும |
| போய், கூழ்கு ஓட்டும | போய்க்கூழை (யாசிக்குமபடி) போக்கிவிடும |
| ஒன்று சாண்புரி நமபொணும | (ஆதலால) ஒருசாண்கயிறறை நமபினனும |
| ஈது | நிலையற்ற இவ்வுடலுககுமநிலையில்லாத இந்தச் செல்வஙகள |
| ஒன்றல்ஒணு | (ஒருககாலும) நமபக்கூடாதாம் |

ஒரோதேகத்திலேயே செல்வமும் செல்வமின்மையும் ஒருவன்காண்கின்றபடியால் வன்பூட்டை யாண்டதுபோல் எனவுஙகூறினா.

பூட்டையென்றதுவன் பூட்டை யென்றதினாலே இருகைஇணை கூடை எனக்கொண்டாம். (உஉ)

## துறவறஒழுக்கம்.

காரருககனறழுற விகாந்தியவற்காரியமே
கோரபுலிககோமுகமாய்க் கொள்ளினது—தோர்தொறுங்கால்
தற்காத்தனிற்றலைதான்றான் வெறுத்தொருக்கும்.
கற்புவதிதாரி நடள்காசு

| | |
|---|---|
| நல், துறவி, கோர, கோமுக, புலி, ஆய் | (ஒருவன்) நல்ல துறவியெனப் பெயர்படைத்தும் அச்சமுள்ள கோமுக வியாக்கிரமம் போல |
| கொள்ளின் | அந்தரங்கத்தில் கொடூரமும் வெளியரங்கத்திலே மாய்மாலவேடமும் தரித்திருக்கின் |
| அது | அந்தக்கொடூர செயல்களானது |
| கற்பு, உவதி | (முறகாலததிலுள்ள) கற்புடைய பதினாறு வயதுப்பெண்ணினது. |
| தாரி | (சரித்திரத்தை விளக்கும்பொருட்டுக் களிரியில் தோன்றி அவள்) போன்றவளாகிய |
| நடள் | (விருத்த) வேசியை |
| தோதொறுங்கால் | (இன்னளென அறிந்தவர்கள் அவளைக்குறித்து) நினைக்குந்தோறும் |
| காசு | (மணதிலுண்டாகும)குற்றச்செயல்கள்போலவாம |
| தான், தான் | (ஆதலால) தன்னைததானே |
| வெறுத்து ஒருக்கும் | வெறுத்து (அகக்கரண புறக்கரணங்களைத் தண்டித்துக்கொண்டு |
| தற்காத்தல் | தன்னைத்தானே காத்து நடக்குதலும் |
| நிற்றல் | (உண்மை நிலையிலேயே மன) உறுதி கொள்ளுதலும் |
| தலை | (துறவிககுச்) சிறந்தகுணமாம் |
| கார், அருக்கன் | (இத்தன்மையோர் இல்லறத்தோடு வாழினும் அவறறில்) மேகசூரியனை (ஒத்து ஒட்டறறிருப்பார்கள்) |

| | |
|---|---|
| இவன்காந்தி | அந்த மேகசூரியனது ஒளியை (ஒக்கு) |
| காரியமே | (இவர்கள்) செயல்களெல்லாம சுத்தமாகவே விளங்கும. |

தவவேடம்பூண்டு மாயமாலத்தினுல உலகத்தாரைத தன்வசப் படுத்தப் பாாக்கின்றதினுலே துறவிகளுககுஒருபிரயோஜனமுமின்று ஆனல் இல்லறததினா துறவியென்ற பெயருககாகத தான அவாகளது குறறஙகளை வெளியிடாகளெனக காட்ட இஙகு "கறபுவதிதாரி நடள்காசு" எனவும உவமிததுக்கூறினா. (உக)

தன்னைததான் முன்னோக்கித தன்னவனிற பூதநென்றும்
பின்னுபபுவிகடததிப் பெறறுயபபா—மூகககசயாா
கூததி கழைமேலு வததிககொணடு முயிாபபாற கூணடில
பாாததேக கிளிவனததைப் பாாதது.

| | |
|---|---|
| கூததி | கழைக்கூததாடிக் கன்னிகை |
| கழைமேல் | ஸதமபததின் மேலிருநதுகொண்டு |
| உவததி, கொணடும | (தனது விசிததிர விநோதஙகளினுல கூடிவநத வாகளை) மகிழச செய்துகொண்டிருககினும |
| உயிாபபால | (அசசமயததில அவளது முழுநோககமும) உயிரினிடததிலேயாம |
| மூகககசயாா | (அதுபோல) ஆசைவெகுளிமயககஙக ளிலலாத துறவிகள் |
| கூண்டில்கிளி | உடலிலுளள ஆனமா |
| வனததைப பாாதது | பலாபலனுக ததககதுமோடசமாகிய)குடியிருபபையாவது(நரகமாகிய) குடியிருபபையாவது நோககி |
| ஏம | செலலும (மெள) |
| தன்னைத்தான் | தன்னைக்குறிததுத தானே |
| பாாதது | நன்ருக ஆலோசிதது |
| முன்நோககி | (தேகமுதலியனவகள யானல்ல தேகத்துக்கு அனனியமாயிருநது அறியபபடு பொருளாய எபபொழுதுமிருககினறோம் எனனும)முன்னிலைமையைக சவனிதது |

என்றும் — எந்நாளும்
தன்னவனில் — தனது சொந்த இனமாகிய இறைவனிடத்தி லேயே
பூத்து — தங்கித்தரித்து
புவி — (தனக்கு அன்னியமான) உலகஞானத்தை
பின்னோடி தத்தி — வெளிக்குமாதத்திரமு கைக்கொண்டு
பெற்று — (இறைவனது அருளைப) பெற்று
உய்ப்பா — (இப்பிரபஞ்சக்கட்டிலிருந்துதப்பி)பிழைப்பார்கள்.

பேதமையான கழைக்கூத்தாடிச்சியுங் கூடகமபத்தின்மேலிரு ந்து வேடிக்கைசெய்யுஞ சமயத்திலும தனக்கு ஒரு அபாயம் நேரி டாதபடி உயிரமேலேயே நோக்கமும வேடிக்கையைக்காட்டுஞ் சாத னமுமிருக்கையில் துறவிகளுக்கும இல்லறத்தைநடத்துஞ்சாதனமும் அவவாறுநடத்துகையிலும துறவறத்தைக்கைக்கொள்ளலுமாகியசாமர் த்தியமஇ நக்கவேண்டியது அவசியமென இதற்கு "கூத்திகழைமேலு வத்திக்கொளகை உயிர்ப்பால்" என்வும உவமித்துக்கூறினா. (உச)

பொறுத்துமனைக் கன்பியிடை புலனைந்துவநல்லாள
உறுத்திபபுரளினுெல் காமைபபுலனே—நெறிக்காந்து
மாறுசசிவங்கொண்டு மறைமுதலைகக்கொண்ட
பேராக்குமெறறே பெரிது.

மனைக்கு, அன்பி, இடைபொறுத்தும — இல்லறத்தில்மனைவிமக்கள்முதலியோருக்குச் (செய்யவேண்டியவைகளைச்) செய்யினும
ஐந்து, புலன், உவநல்லாள் — ஐந்துவிடயங்களும ஆனந்திக்கும்படியான அழகையுடைய (அந்நிய) இளமபெண்
உறுத்தி — (வசியவந்து ஸ்தனங்கள ஈறதலிய அவையவங் களைக்கொண்டு) அழுத்திப
புரளின் — புரண்டுதழுவினும (அவாகளதுவிடயங்கள்)
ஆமை, ஒல்கு, புலனே — ஆமை (அவயவங்களை அடக்குதல்போல) கா ாந்து (ஒன்றுக்கு முகவாத) இந்திரிய உண ாச்சியாகிவிடும
நெறிக்கு, ஆரந்து — (இவவாறுபோன்று சன்மார்க்கபபகுதிக்குட்பட்டு
மாறுசசிவம்,கொண்டுமறை,முதலை — நீங்காத நன்மைகளைப் பொருந்தி (நான்கு) வேதங்களுக்கும தலைவனாகிய இறைவனைத

| | |
|---|---|
| கைக்கொண்ட | தன்வசப்படுத்திக்கொண்ட |
| பேரார்க்கும | மகிமைதங்கிய துறவிகளுக்கும் |
| பெரிது, எற்றே | இல்லறத்தோடு கூடியதுறவறம் மிகவும எம் மாத்திரம. |

மனைவிமக்கள் முதலியோருக்குச செய்யவேண்டியவைகள்,இன்னும் அவசியமெனக்கண்டால், இல்லறத்தை விட்டுநீங்குதல, குற்றமாகும என்னுங்குறிப்புடன "பொறுத்துமனைக்கணபியிடை" எனவும, மனமவிடயங்களில் செல்லாது அடக்கும வலியுள்ளோருக்கு வீடானுலென்ன காடானுலென்ன இல்லறத்திலிருந்து கொண்டேதுறவறம இயற்றலாம எனறகுறிப்புடன் " புலனைந்துவங்கலலாளுறுத்திப்புரளி னெல்காமைப்புலனே " எனநியாயதோரணைதந்தும இந்நியாயதோரணைப படிசெயதல அறபமெனவுங காட்ட இங்கு " பேரார்க்கு மெற்றேபெரிது " எனவுங்கூறினார.

துறவிகளுக்கு விடயங்களைக்கெடுக்கவும கூடுமென அவர்களது அற்புதத்தையும் உபயோகிக்கவுங்கூடுமென அவர்களது வீரியத்தையுங் கூறுகின்றமையால சாந்தரசத்தை அங்கியாக உடைய இந்நூலுக்கு அற்புதரசத்தையும வீரியரசத்தையும பொருந்திய இக்கவி அங்கமாயிற்று. (உரு)

## பொறையுடைமை.

ஓரலோடின் கூற்றுரைக்க குணமாமொனபதுகல
ஆராற்றலொண்முடியே ஆவசியம—ஓர்விலது
வாட்டுவரோகன முடியிலமன்னுமோ விதின்றேல
கூட்டுபவோகீழக கொழுமோகூாநது.

| | |
|---|---|
| ஓர்வு, இலது | (அறபவிஷயங்களையும)கவனிக்குகலிலலாவிடின் |
| வாள, துவரோ | கீர்த்தியுள்ள (ஆணமக்களில்) ஆண்தன்மையுடையவர்களும (பெண்மக்களில) பெணதன்மையுடையவர்களும ஆவார்களோ (ஆக மாட்டார்கள்) |

| | |
|---|---|
| ஓரலோடு | (காரியம இவ்வாறிருப்பதால் அற்பவிஷயங்களை யும்) கவனிக்குதலோடு கூடிய |
| இன் கூற்று, ஆசை, குணமாம் | இனியவை கூறலென்னும் பசும்பொன்னுல் செய்யப்பட்டவாககி னற்குணங்களுங்காயநற் குணங்களும மனநறகுணங்களும் (என்கிற) |
| ஒன்பது, கல், ஆர், ஒண் ஆற்றல் முடியே ஆவசியம் | நவரததினங்கள நிறையப்பதித்த ஒளியுள்ள பொறுமையென்னும் கிரீடமே (பெரியோர் என்றுசொல்லப்பட்ட வாகளு க்கு) அவசியமாம் |
| கல், முடி | (ஏனெனில்) ரததினக்கற்கள் பதித்தகிரீடத்தை ப் (பெற்றிருக்குதல்) |
| இல், மன்னுமோ | இலலாவிடின் அரசனுவானே (ஆகான்) |
| ஈது, இன்றேல | (ஆதலால் ஒருவனுக்கு) இவ்வாறுனபொறுமை இல்லாவிடின் |
| கூட்டுபவோ கிழ, கூர்ந்து | (பெரியோாகள்) உடன்கூட்டாளி யாகக்கொள் ளுவார்களோ(கொள்ளமாட்டார்கள்) அவ்வாறு உடன்கூட்டாளி யாகும்படி கீழ்மகனைப் பெரி யோகள் ஏவிவிடினும் அதனை உருசிததுக்) |
| கொளுமோ | கைக்கொள்ளுவானே (கைக்கொள்ளான்) |

வாக்கின் நற்குணங்களாவன; இனியவை கூறல், மெய்யுரை, நல்வார்தகை, பயன்படுசொல்.

காயநற்குணங்களாவன; கோயிற்பணிவிடை, தவம், தானம்.

மனநற்குணங்களாவன; அருள்நினைவு, ஆசையறுத்தல், தவப்பேறு.

மேற்கூறியபத்து குணங்களில் இனியவைகூறலாகிய குணத் தைப்பசுமபொன்னுகவும் மறறைய ஒன்பது குணங்களை நவரத்ன ங்களாகவும் அந்தபததுக் குணங்களோடு பொருந்திய பொறுதியுடை மையை அவற்றுலான கிரீடமாகவும உருபகஞ் செய்தமையால்உரு பக அலங்காரம,

கிரீடமில்லாவிடின் அரசனுகான் பொறுதி இல்லாவிடின் பெ ரியோர் ஆகார்என்ற அருத்தத்தில் பொறுதி, பெரியோர்களுக்கு அவ சியமெனவுங் கூறினமையால் வைதன்மியவாக்கியார்த்தத்தை ஏது வாக உடையகாவிலிங்க அலங்காரம். (உசு)

பூவுலகோவாற்றிகுடி பூகம்பமோடமிழ்த்தும்
நாவாய்க்கடலுடைத்தா நைத்தோர்க்கும்—நோவாண்டும்
நாடும்பரியேழோ நசித்துமவடன்னிழிக்கும்
வாடாப்பட முடிவுமட்டு.

| | |
|---|---|
| பரி, ஏழோ | பருத்தியானது (நூல்நூற்பவளால்) ஏழுதரமா தந்திரமா (அவற்றிற்குமேலேயேனைநது) |
| நசித்தும், அவள் முடிவுமட்டு | வருந்தியும் அந்திய காலமவளா அவளுக்கு(உண்ண உணவு கிடைக்கும்படி காரணமாய் இருப்பதுவும தவிர) |
| தன், இழிக்கும் | (அவளது) அவமானபங்கந்தோன்றாதபடிக்கும் |
| வாடா, படம் | நீங்காத சேலையாகவும் உதவும |
| ஆற்றி | (அதுபோல) பொறையுடையான் |
| நோவாண்டும் | (மற்றவாகளாலே பலமுறையும) வருத்தத்தைக் கையாடியும் |
| நைத்தோர்க்கும் | (அவ்வாறு) வருத்தினவர்களுக்கும |
| நாடும் | (நன்மைசெய்யவே) விருமபுவான் |
| குடி அமிழ்த்தும் பூகம்பமோடு | (ஆதலால் பொறுமை உடையவர்கள்) குடிகளைக் கவிழ்த்துப் போடுதலுக்குககாரணமான பூகம்பமுடனே |
| நாவாய்க்கடல் | கப்பல்களை உடைய கடலையும் |
| உடைத்தாம் | உடைத்தாயிருக்கின்ற |
| பூவுலகோ | பூமியோ (அல்ல அதற்குமேலாம்) |

வித்துவான்கள்பலரும் பொறுதி உடையானை இப்பூமிக்கு ஒப்பிட்டிருக்கும் பிரசித்த உவமானத்தன்மையை ஆட்சேபத்தால்மறைத்தபடியால் அபன்னவ அலங்காரம். (உஎ)

தாங்கொணுத் துன்புதுன்பாய்த்தந்தவலும் தாபனுக்குப்
பாங்காடாமந்திலகம் பண்ணுகைகித்—தேங்குளிரப்
பொன்மாரி போன்றமொழியாடு பவேபோலிபொறை
இன்மான்குளிர்ந்து கொவியிங்கு.

| | |
|---|---|
| இங்கு | இவ்வுலகத்தில் (வஞ்சத்துடன்) |
| பொறை, போலி | பொறுத்தி யுடையவனைப்போல நடிப்பவன் |

| | |
|---|---|
| இன் மான் | (யாதொருநன்மையும்) இல்லாதவனுகி |
| குளிர்ந்து | (பொறுமையற்றவனிலும்) குளிர்ந்து |
| கொலி | கொல்லுகின்ற கொடியனுவன் |
| தாங்க | (ஆனல்பொறுதி யுடையவர்களோ தங்களால்) தாஙகக் |
| ஒணு, துன்பு | கூடாதபடி ஒருவன்பெருந்) துன்பம் |
| துன்பாய்த் தந்த வலும் | (பெருந்) துன்பமாகப்பலமுறையும் தரப்பட்ட (அநதந்த) அவசரத்திலும் (தாங்களகோபா வேசஙகொள்ளாதபடி |
| காபனுக்கு | (அகங்காரமென்னும் அககினியினுல்) தகிக்கப் பட்டிருக்கின்றவனுக்காக |
| பாங்காடாம | (அவ்வக்கினியினுல்) பாழ்ங்காடாகக்கிடககின்ற |
| அகம் | (அவனது) மனமென்னும் பாலைநிலத்தை |
| பண்ணுக்கி | (நல்லமருதநிலம்போல) பண்படுத்தி |
| அங்கில் | அவ்விடத்தில் |
| தேம், குளிர | தேங்கிக்குளிரும்படி |
| பொன்மாரி | (பொன்னுய்க்காரியப்படுகின்ற)மேகம்வருஷித்தல் |
| போன்ற | போலொத்த |
| மொழி !ஆடுபவே | (இனிமையான) வார்த்தைகளை அவனிடத்தில் உபயோகிப்பார்கள் |

அங்கில் என்பதை அசையெனக் கொள்ளினும் அமையும பொறுதியை உடையாரே மிகுவலிமையயுமுளர் பொறுதியறறவர்க ளேவலிமையையும இலாஆதலால் இவ்வாறுவலிமையற்றவாகளைநசித் தல் எளிதெனக்காட்ட" துன்புதுன்பாய்த்தந்தவலும்; எனஎச்சவுமைத் தந்தும் இவாகளுக்கு அகங்காரமேமுக்கியமாகையால் இவர்களதுமன ம் மூடமுடையது எனக்காட்ட "பாங்காடாம்" எனஉவமித்தும்; இவர் கள்மேலெழுங்கோபததை அடக்கும்வலிமைஇருக்கினும் இவர்களது கொரேத்தன்மைகள் சாதுவாகும்படி இனிமையானவார்த்தைகளைக கையாடும் வலிமையேவல்லபம்எனக்காட்ட "தேங்குளிரப்பொன்மாரி போன்றமொழியாடுபவே" எனவும் தனது வஞ்சகம்நிறைவேறுமாறு பொறுதியை உடையான்போல் மாய்மாலம்செய்கின்றவனேபொறுதி யற்றவனிலும் நீசனெனக்காட்ட போலிபொறையின்மான் குளிர்ந்து. கொலிஎனவுங் கூறினா.



... வே. சாமிநாதையர் நூல் நிலையம் ... சென்னை-20.

பண்ணுக்கித்தேன்மாரிபோன்ற மொழிஎனத் திருஷ்டாந்தப்படு த்தினமையால் எடுத்துக்காட்டணி. (உ௮)

## தாழ்மை.

அகம் புறம் பொன்றாக்காவான் றண்மையே தண்மை
சகம்பிறவா வஞ்சஞ் சடங்கிருதி—புகுமேனும்
பிணக்கடிமை பூண்டிருந்த பெட்பனுக்குங் கீழ்த்தாழ்வாம்
பணிப்பருள லொன்றோ பல.

| | |
|---|---|
| ஆன், சகம் | ஆன்மாவானவன் (தன்னோடு) கூடவே |
| அகம், புறம்பு ஒன்றாக்கா | மனதையும் (மனதால் ஏவுப்பட்ட) வெளி அவயவங்களையும ஒன்றாக்கி |
| தண்மையேதண்மை | பணியும்பணிவே தாழ்மையாம |
| பிறவும் | (அவ்வாறின்றி) மாய்மாலமாய் |
| வஞ்சம் | (வெளியவங்களைக்கொண்டு பணிதல்) வஞ்சகமாம் |
| சடம், கிருதி, புகுமேனும் | (மேற்சொல்லியபடி) மனம்ஒத்துப்பணியுந்தொழில் (ஆன்மனிடத்தில்) பிரவேசிக்கினும் |
| பிணக்கு | (தன்கருத்துக்கிசைந்து நடக்காது) ஏறுக்குமாறுசெய்கின்ற |
| அடிமைபூண்டிருந்த | (தனக்கு) அடிமைப்பட்டிருந்த |
| பெட்பனுக்கும் | தன்மையை உடையானுக்கும் |
| கீழ், தாழ்வாம் | பணிவாயொழுகலே தாழ்மையாம் |
| பணிப்பு | (இவ்வாறான) தாழ்மையானது |
| அருளல் | (ஒருவனுக்கு மேன்மையைத்) தந்தருளல் |
| ஒன்றோ,பல | ஒருவகைப்பட்ட மேன்மையோ (அல்ல)பலவாம் |

அந்தக்கரணம் இருதய சாரத்தின் செயலைப் பெற்றால் தான் மனமாகும்; ஆதலால் இருதயத்தைச் "சடம்" எனவும் அதன் சாரத்தின் செயலால் சமைந்தமனதை "சடங்கிருதி" எனவுங் கூறினர். (உகூ)

எம்மாத்திரமானேமென்ப வெற்றோவற்பமலோ
அம்மா வுலகெளிதோ வார்புலனே—பொம்மறிவார்
மாட்டேற்றங்கோன் மறையுமனை வைத்தவக்கணையும்
கூட்டாமோ காட்டாட்டாற் கோள்.

| | |
|---|---|
| பொம்அறிவார் | அறிவு நிறைந்த பெரியோர் |
| மாட்டு | (அற்ப அறிவாளிக) ளிடத்திலுள்ள |
| ஏற்றங்கோல் மறையும | ஏற்றங் கோல்பாட்டும் . |
| மனைவைத்தல் | மனைவைத்து விளையாடுதலாகிய |
| வக்கணையும் | சம்பிரதாயமும |
| காட்டாட்டால் | தொட்டுககாட்டாவிடின் |
| கோள் கூட்டு மோ எறறோ | (அச்) செய்கையின் (அந்தரங்கம்) தெரியுமோ (அவைபோன்ற அறிவுகளைத் தானே அறிந்துக்கொள்ளலாமெனில் அவ்வாறறியுமநமது விவேகமும்) எத்தன்மையதோ |
| அற்பமலோ | (அத்தன்மையதான விவேகத்தைக்கொண்டு நாம் அறிந்திருக்கிற அறிவும) அற்பமல்லவா |
| அம்மாஉலகு | ஆஆ (இவ்) வுலகஞானங்கள் |
| எளிதோ | இலேசானவையோ |
| ஆர்புலனே | (அவற்றை அறியும்படிக்கு நம்மிடத்தில் போதுமான அறிவுண்டோ |
| எம்மாத்திரம | (ஆதலால் உலகோர் யாவரிலும் நாம் எவ்வளவு குறைவை |
| ஆனேம் | உடையவர்களா யிருக்கின்றோம் |
| என்ப | (என்று அறிவுடையோர்கள் தங்களைத்தாழ்ந்தவாகளாகவும்) கருதுவார்கள |

பிரபஞ்ச உற்பத்திகள் இறைவனது சர்வவல்லபத்தினுலும சர்வஞானத்தினுலும அமைந்திருபபதாலும அவ்வுற்பததிகளின் காரணமாயுண்டாகிய உலகஞானஙகளில் சிலவறறையாவது சிற்றறிஞனுகிய ஆன்மாவானவன் பூரணமாயறிதல் கூடாதெனவும காட்ட "அம்மா உலகெளிதோவாாபுலனே" என அதிசயப்படுததியுங கூறினா.

நமது அறிவு எத்தன்மையதோவெனச் சந்தேகங்கொண்டமையாலும்சந்தேக அலஙகாரம். (௩௰)

நன்றோர்க்குந் தீயோர்க்கு நன்றலாற் காய்கனியாய்
நின்றமரநிழலாய் நீடுயர்வா—ஒன்றுனையாா
துன்புசகித் துததுலககி நாள்வன் னெயிற்றைக
கன்மடததைத் தீரப்பாஙகரம்.

| | |
|---|---|
| கரம் துன்பு } சகித்து | கைவிரல (கரடுமுரடு முதலியவற்றால் நேரிடும்) (துன்பங்களைப்) பொறுத்து |
| நாள் துலக்கி | நித்தியமும் விளக்கி |
| வன்னெயிற்றை | வலிமையுள்ள பற்களினது |
| கன்மடத்தை தீர்ப்பாம் ஒன்று | அசுத்தங்களை நீக்கும் (அதுபோல பொறுதியோடுகூடிய தாழ்மைஉடையார்கள் ஒருவனுக்கு உதவிசெய்கையில் அவர்களால் துன்பம நேரிட்டாலும் அதனை) |
| உரையார் | (வாயிலெடுத்து முதலாய்ப்) பேசவு மாட்டார்கள் (அவர்களுக்குச்செய்யும் உதவியையும் நிறுத்தவு மாட்டாகள்) |
| நிழல் | (அதன்றியும் தன்னைக் கல் முதலியவைகளைக் கொண்டு சிதைக்கின்றவர்களுக்கும் அவ்வாறு சிதையாதவாகளுக்கும) நிழலைத்தரும்படி |
| காய்கனியாய்நின்ற | காயுங் கனியுமாய்நிற்கின்ற |
| மரம் ஆய் | விருக்ஷம்போல |
| நன்றோர்க்கும் | நல்லவர்களுக்கும் (தங்களை வருத்துகின்ற) |
| தீயோர்கதும் } நன்று அல்லால் | பொல்லாதவாகளுக்கும் நன்மைசெய்தலேஅன்றிக்(கேடுசெய்யாதுஒரேதன்மையதாய்உலகுககு) |
| நீடு, உயாவர் | மிகவும மேன்பட்டு உதவியாகவேயிருப்பார்கள் |

பொறுதியோடுகூடிய தாழ்மையுடையவர்களிடத்தில் ஒருவனுககு ஏதாவது குறைவுகள் காணப்பட்டால் அவற்றை வலியப்போய் நீக்குந்தன்மையும் அவசியமா யிருககவேண்டுமெனவும, அவற்றை நீக்கி நன்மை செய்ய முயலுகையில் தஙகளுக்குத துன்பம் நேரிட்டாலும அல்லது அந்த நன்மையைப் பெற்றுக்கொள்ளுகிறவன் அச்சமயத்தில் துன்பப்படுத்தினும் சற்றேனும் மனதில் முதலாய் வையாமல் நன்மை செய்வதில் பின்னிடக்கூடாதெனவும் காட்ட "துன்பு சகித்து துலக்கிநாள் வன்னெயிற்றை" எனக் கரத்தை உவமித்தும், இந்த இலக்ஷணம் இருப்பதுந்தவிர நன்மைக்குத் தீமை செய்யுமாறு இடைவிடாமல் தங்களை வருத்தி வருகின்றவர்களுக்கும் அவ்வாறு வருத்தாதவர்களுக்கும் ஒரே தன்மையதாகயிருந்து உலகுக்கு நன்மை செய்யும் இலக்ஷணமும் இருக்கவேண்டுமெனவுங்காட்ட "நின்றமர நிழலாய் நீடியாவர்" என உவமித்துங்கூறினர். (௩௧)

## வாய்மை.

நாக்கி லிரண்டுண்டேவாய் நற்றொழிலிற் செற்றுணர்வேன்
தூக்கினுப்பூணுண்டதுண்டோவென்னுஞ்சொல்—ஆக்குமெனி
அணங்கதனுககே யடங்காவண்டவுண்டை யுத்தனையோ [ல்
இணங்கா வுலகநடை யின்று.

| | |
|---|---|
| நாக்கில் இரண்டு | நாவினிடத்தில (ஆன்மாவுக்கு உருசியைஉணர்த்தும) அறிகருவியும (அந்தநாககினுல்வசனிததலை உண்டுபண்ணும்) செய்யுங்கருவியுமாகிய இரண்டும |
| உண்டே | உளவென்பது நிச்சயந்தான் |
| உப்பு | (ஆனுல் வாககு மாறின ஒருவனைப்பார்தது)உப்பிட்ட |
| ஊண் உண்டது | உணவு சாப்பிட்டது |
| உண்டோ | உண்டோ இல்லையோ |
| என்னுமசொல் | என்னும் உலகவழககசசொல்லை |
| தூககின் | கவனிக்கின் |
| வாய் | (செயயுங கருவியினுலுண்டாகிய) வாய்மை |
| நல்தொழில் இல் | (என்னும) நலலசெயகை இல்லாவிடின் |
| செறுஉணாவு ஏன் | வெறுக்கததக்க உருசியை உணர்த்தும் (அந்த) அறிகருவியினுல யாதுபிரயோசனம(ஆதலால்) |
| ஆக்குமெனில் | (ஒருவன் வாயமையைக்) கைக்கொணடிருப்பானுயின் |
| இணங்கா | (அவனுக்கு) ஒத்துவராத |
| உலகநடை இன்று | உலகாசார நல்லொழுக்கமும் இருக்கின்றதோ |
| அணங்கதனுககு | தெயவததுக்குள் |
| அடஙகா | வசப்பட்டு ஒழுகாத |
| அண்டவுண்டை | சர்வஉலகஙகளாகிய பூமண்டலங்களும் |
| அத்தனையோ | அவ்வளவாய் இருக்கின்றதோ |

இறைவனுக்குள் அடஙகாத உலகஙகளு மில்லை வாய்மையுடையானுக்கு வசப்படாத உலக ஒழுக்கமும் இல்லை என்றமையால் வைதன்மிய பிரதிவஸ்துவம அலங்காரம. (௩௨)

சேட்டிப்பாகமின்றியுரைச சித்தமு வேறுகாது
கூட்டுமீன்கூட்டுண்டோ கூட்டிகளால—காட்டுரிக்கே
வடுவறுஉ மெயயோடு வாய்மைக உலகம்
இடமதோ யாரிருந்து மென்.

| | |
|---|---|
| கூட்டிகளால் | மணஞ்செய்துகொண்ட ஸ்திரிபுமானிருவர்களி ஞலும் |
| கூட்டு | (செய்துகொண்ட வாகருத்தத்துக்கு அடையாளமாகச்) சுட்டிககாட்டுதலாகிய சம்பந்தமானது |
| மீன்உண்டோ | (மற்ற) நட்சத்திரங்களினிடத்தில் உண்டோ (இல்லையாம; அநதச்சமபந்தம) |
| காட்டுரிககே | (அந்த ஸ்திரிபுமான்களால்) சுட்டிக்காட்டுதலுக்கு உரித்தாகிய அருந்ததிநட்சததிரததுககே உரியதாம் (அதுபோல) |
| சேட்டிப்பு | (மனம) சேட்டிபபுக் |
| இன்றி | கொள்ளாமல் |
| உரை, சித்தமும் | (வுரைதனதயும அம்) மனமும் |
| வேறுகாது | வேறுபடாமல் |
| கூட்டும் | ஒன்று படுத்துகின்ற |
| வடு, அறுஉம் | குறறமறற |
| மெய்யோடு | உணமையோடுகூடிய |
| வாயமைககு உலகம், இடமதோ | வாய்மைகளுக்கு உயாந்தோாகளே இடமாம(வேறே இவ்வுலகததில) |
| யாா இருநதும | எவாகளிருககினும் |
| என் | (அவற்றிறகு) யாதுபிரயோஜனம |

ஆமது—அசைநிலை.

மனைவி தன் தேகத்தைக கணவனுக்கும் கணவன் தன்தேகத்தை மனைவிககுமே ஒப்புக்கொடுத்திருக்கிறதாக வாககுததத்தஞ் செய்து அவவாறு செய்ததற்கு அடையாளமாக அமமிமிதித்தும் அங்கியமுகமபாாக்ககூடாதெனவேறு நட்சத்திரங்களை நோககாது அருநததி

நட்சத்திரத்தையே பார்த்தும் இவ்வாறான வாக்குத்தத்தப்படியே உலகத்தில் மனுபுத்திரர் விர்த்தியாகுமாறு மக்களைப்பெறுதல்நீதிசாத்திரமாகையால் அந்த வாக்குததத்த மென்னும் முக்கிய வாய்மைக்குரிய அடையாளத்தையே மற்றவாய்மைகளுக்கும இங்கு உவமானமாக்கி பொருள் நயபபடுதகி "மீன்கூட்டுண்டோ சூட்டிகளால் காட்டுரிககே" எனவும் மேறகூறிய முககியவாய்மையே விபசார முதலிய துர்செய்கைகளினல் தவறிக்கிடககையில் மற்ற வாய்மைகளுக்கும் கீழமக்களிடததில் இடமுண்டோவென "யாரிருந்துமென்" எனவும் கூறினர்.

அம்மிமிதித்தல்; தன்பத்தாவுக்குத் துரோகஞ்செய்து புருஷன் சாபததால் கல்லாய்ச் சமைநதுகிடந்த கௌதமனுடைய மனைவியாகிய அகலிகையைக் குறிப்பிககின்றது.

அருந்ததிநட்சததிரம; கணவனைவிட்டுப் பிரியேனென்ற வசிட்டருஷியினது மனைவியாம். (௩௩)

ஓதிமுகப் பததியிரோ ரோருகநவாதிமணிச
சோதிரசக்கலவிபுரட் சுந்தரிபால்—நீதிநடு
அமபகதது வாய்மையெனுமையகோகாப்பிலிமை
வமபடியாம் யாதுபிறமறறு.

| | |
|---|---|
| பத்தி, இரோ ரோருகம | பரபத்தி, பரமபத்தியென்னும் இரண்டு முலைகளினுடு. |
| நவாதிசோதி, மணி, ரசகக ல்விபுரள் | ஒன்பது சூரியர்களை ஒத்த ஒளிபொருந்திய நவரச அலஙகாரஙகளை உடைய ஞானநூல்என்னு மிரத்தினபரணம புரளுகின்ற |
| ஓதிமுகம் | அறிவு என்னும் முகத்தையுடைய |
| சுந்தரிபால் | (சிறநத அறிவாளியென்னும) பெண்ணிடத்தில் |
| நீதி, நடு அம்பகத்து | நீதி, நடுவு நிலமை என்னும் அவளது இரண்டு கண்களை |
| வாய்மை, எனும இமை காப்புஇல | வாய்மைஎன்னும் இமைகள் காத்தல் இலலாவிடின் |
| ஐயகோ | ஐயய்யோ |
| பிற, யாது | மற்ற அறிவு முதலிய நற்குணங்களில் யாதுபிரயோஜனம் (அவை) |

வம்படியாம் யாவும் பொல்லாங்கை வருவிக்குமாம்

பரபத்தி; பார்க்கும் ஆசை பரமபத்தி, பார்த்த வஸ்து பிரிந்து விட்டால் ஆற்றேனெனப் பயந்திருக்குமிலமையாம்.

நவரசங்களாவன—அற்புதம், கருணை, சாந்தம், வீரியம், பெருநகை, இரௌத்திரம், குற்சை, பயம், சிங்காரம், இவற்றில் அற்புதம் அதிசயம் விளங்கப்பாடுதல. கருணை, கிருபை வெளிப்படப்பாடுதல். சாந்தம், விடவேண்டியதை விலக்கவும கைக்கொள்ளவேண்டியதைக்கைக்கொள்ளவும் ஏதுவாக இருந்து ஞானத்தை உண்டுபண்ணிச் சமரச முண்டாகப்பாடுதலாம். வீரியம், வைராக்கியங் காட்டப் பாடுதல். பெருநகை, பெருநகை உண்டாகப் பாடுதல். இரௌத்திரம, உக்கிரங்களைத் தூண்டிப் பாடுதல். குற்சை, நிந்திபடை எடுத்துப் பேசுதல். பயம், பயஙகளை உண்டாகப்பாடுதல் சிங்காரம்; ஸ்திரீ விஷயம் தோன்றப்பாடுதல் இந்தச்சிஙகாரம் ஞானநூலிலும் தோன்றப்பாடுதல். எங்ஙனமெனை இக்கவிக்குத் தோஷங கூறுவண்ணம் ஞானநூற்களில் இறைவன் அடியார்களைப், பெண்ணுகக்கூறி யிருக்கும் வழக்கத்தையே இங்கு எடுத்தாண்டு "ஓதிமுகப் பத்தியிரோரோருகநவாதிமணிச் சேமதிரசககலவி புரட்சுந்தரிபால்" எனவும்; இறைவபக்தி உள்ளவர்களே சரியான அறிவாளிகளென்னும் நோககதுடன் அவர்களைப் பெண்ணுக உருவஞ்செய்து கூறினர். (௩௪)

நடுவுநிலைமை.

முப்பொருட்கும் புக்காவன்முன் மூடர்க்கன் றுநடு
எப்பொருளுங் காட்டு நுட்பாலீர் வாளார்க்—குப்பியியாங்
காண்டுகொளு முட்புறமுமாட்டி யிடைவா லாட்டி
ஈண்டுகொளக் காரணமன் றீது.

நடுநுட்பால் ஈர்வாளார்க்கு அன்றும் — நடுவு நிலைமையானது (மனமென்னும் வைரக் கட்டையில் அற்பக்காரிய) ங்களையும் ஆராயும் ஆத்துமஞான மென்னும இரம்பத்தைக் கையாடுகின்ற) பச்சாதாபப் பகுத்துணர்வு உடையார்களுக்கு உரித்தாவதன்றியும்

முப்பொருட்கும் — சூரிய சந்திர விளக்கு என்னும் மூன்று பொருள்களுக்கும்

| | |
|---|---|
| புக்காதல் மூன்மூடர் | அகலாத அஞ்ஞான இருளை உடைய முழுமூடர்களுக்கும் |
| எப்பொருளும், காட்டும் | எந்த உண்மைநிலைகளையுங் தெரிவிக்கும |
| உப்பிலி, ஆங்கு | (ஆனு லதனை அசட்டைபண்ணிக் கைக்கொள்ளாத) சாரமறறவனை அப்பொழுதே |
| உள்புறமும் | (உட்பகையாறும, கொலை, களவு, பொய், நிந்தை முதலிய பொல்லாப்புகளும்) உளளும் புறம்புமாகவந்து |
| ஆண்டுகொள்ளும் | மூடிகொள்ளும் |
| ஈண்டுகொள | (இவனுக்கும்) இவ்வுலகத்தில் (இவ்வாறு சேர்ந்த உண்மை நிலைகளையும், நடுவு நிலைமையால்) காண்கினும். |
| இடையாட்டி | (தஙகளைவிவேகிபோல் காட்டுகின்றசிலர்களில்) இடுப்பின்பொறுதலைப்போல்முறுகினபக்ஷத்தைச் சேருகின்றவனுக்கும் |
| வாலாட்டி | (காரியங்கொள்ளும் சமயத்துகருத்தக்கது)நயவசனிப்பு முதலிய செய்கைகள்செய்கின்றவனுக்கும் |
| ஈது, காரணம் | இந்த நடுவு நிலைமை காரணம் |
| அன்று | அல்ல (ஆன்மாவாகிய தன்னைப்பற்றியும் தன் குடும்பத்தைப்பற்றியும் அபிமானமற்ற செய்கையே காரணமாம்) |

உலகத்தில் நடுவு நிலைமை யறறவர்களை மேற்கூறியபடி மூன்று தரத்தாராகப் பிரித்து இமமூன்றுதரத்தாரும இவ்வாறுனதற்குரிய காரணத்தை வாயிலெடுதது முதலாய்ச்சொல்ல மனங்கொள்ளாமல் அடுததலாக்கியததை உணர்ததுகின்ற அன்று என்னும் குறிப்பினை முற்றைக்கொடுத்து முடிததிருக்கின்றனர். (௩௫)

சிந்தைகூர் வன்னிகுடைத்தீ நடுமீநீந்தடுதங்காய்
தந்தாலே யுன்னருளாஞ் சாற்றலுள—வந்தியதே
ஈசனுக்காங்கற் களிரண்டல்ல வென்றவர்க்குப்
பேசநடுபே சொனுமோபேது.

| | |
|---|---|
| மீந்த | (ஐந்து தேங்காயில் ஏறுனொன்று இறக்க ஒன்றுநீ யாய்த்தந்ததொன்று நானுய்எடுத்துககொண் டதொன்று) மீதியானதொரு |
| தேங்காய் | தேங்காயைத் |
| தந்தாலே | தந்துவிட்டால்தான் |
| உன் அருள் | உனதுகிருபை |
| ஆம் | என்பதுபோல |
| சாற்றல் உள | (நியாயங்களை) சொல்லுதலும் (இவ்வுலகத்தில்) உண்டு (இந்நியாயங்கள்போல்வனவும்) |
| ஈசனுக்காங் கற்கள், இரண்டல்ல வென் றவர்க்கு | ஈசனுக்குகந்த கல்லிரண்டுகல்லு மல்லவே என் றஞானிக்கு (எதிர்மாற்றமாகப்) |
| பேசு, பேது, நடு, | பேசுகின்ற புத்தியின நியாயம் |
| பேசலுமோ | (வாயிலெடுத்துமுதலாய்ப்)பேசக்கூடுமோ(இந் நியாயம்போல் வனவும்) |
| வாந்தியதே | மனங்கொள்ளாது ஆரோசிக்கத்தக்கது |
| சிந்தை கூர் வன்னிகுடை நடு, தீ, மீ | (ஆனால்) மனதினல் ஆராயப்படுகிற ஆராய்ச் சியென்னும்வன்னிக்கட்டையினுல்கடைந்து (அதிலெழாநின்ற)நடுநிலைமை என்னும்ஓமா க்கினியே நியாயமென்னும் வேள்விக்குமே லானதாம் |

மனச்சாட்சி மழுங்கியும் நியாயவிரோதஞ் செய்வ ரெனக் காட்ட "மீந்ததெங்காய் தந்தாலே யுன்னருளாஞ் சாற்றலுள" எனவும் நியாயமின்னதென ஒருவழியில் புலப்படினும் முரட்டுத்தன்மாய் நியாயங்கூறவொண்ணுது எனக்காட்ட "ஈசனுக்காஙகற்களிரண்டல்ல வென்றவர்க்குப்பேசு நடுப்பேசொணுமோ எனவும் இங்கு உலகஉத் திகளை அலங்காரப்படுத்தியும் அவற்றைநியாயவிரோதங் கூடாதென் பதற்குத் திருஷ்டாநதப்படுத்தியு மிருக்கின்றனர்.

சிந்தையைவன்னிக் கட்டையாகவும் அதன் ஆராச்சியை அதி ல்கடைதலாகவும் நடுவுநிலைமையை அதிலெழாநின்ற ஓமாக்கினியாக வும் உருபகஞ்செய்து வந்தவர்நியாயத்தை மாத்திரம் யாகத்துக்குக் குறிப்பாகஉருபகஞ்செய்தமையால் ஏகதேசஉருபக அலங்காரம்.(கூசு)

வம்பலைக்காட்டியையே மாறுவராய் மானத்துள்
செம்பலவுந்தீட்டித தெளிவுபற்றி—உம்பரா
பயர்க்குங்கிடைத்த பொல்லோர பல்லோர்க்கு மவ்வேதாம்
குயக்கோலார செங்கோலார் கூற்று.

| | |
|---|---|
| வம்பலைக்காட்டியையே | (பெரியோர்கள்) திசைகாட்டும் கருவியையே |
| மாறுவராய் | ஒத்தவர்களாய் |
| மானததுள் | நல்லொழுக்க வரம்பில் நின்று |
| செம, பலவும் | நீதிகள் பலவறறையும் |
| தீட்டி | கைக்கொண்டுசோதித்து |
| தெளிவுபறறி | துணிதலின் வேறதுவாகவே |
| உம்பா | இவ்வுலகத்திலுளள யோக்கியர்களுக்கும் (தன் கையைததானே வெட்டியெறிந்த) |
| அரபயர்க்கும் | பாண்டியனுக்கும் (தன்னுடையமகன்மேல் தேரூாநததிருவாரூர்) மனுநீதிகண்டசோழனுக்கும் |
| கிடைத்த | (நீதியென்னும பண்பின் பதப்பொருளின் பிரயோசனஙகள் கிடைத்தன) |
| அவ்வேது | அந்த ஏதுவே |
| பொல்லோர் | பொல்லாத அரசர்களுக்கு |
| குயக்கோலார் | கொடுஙகோல் அரசனெனவும் |
| பலலோர்க்கும | பலநலல அரசர்களுக்கும் |
| செங்கோலாா | செஙகோல் அரசனெனவும |
| கூற்று | (உலகத்தாா) பிரித்தலுக்குங் |
| ஆம் | காரணமாம் |

நடுவுநிலைமையாவது அநதரங்கக்குற்றச் செயலகளைக்கண்டிக்குமெனக்காட்டப் பாணடியன் பிறனதுமனையாளை இரகசியமாய்க் கையைப்பிடித்திழுதத குற்றத்தைபபின்னர்தானே உணர்ந்து அவ்வாறிழுத்த தன்கையைத்தானே வெட்டிஎறிந்த சரிததிரத்தையும்; நடுவுநிலைமை வெளியரஙகக குற்றச்செயல்களையுங கண்டிக்குமெனக் காட்ட; பசுக்கொலை செய்தவாகள் கொல்லப்பட வேண்டுமென்ற நீதிப்படி மநுநீதிகண்டசோழன் பசுவின் கன்றின்மேல் இரதத்தை ஊர்ந்து அதைககொன்ற தன்குமாரனையும தோக்காலின் கீழே கிடக்

தித் தேரைமேலேகூட்டாத்திய சரித்திரத்தையும் இங்கு எடுத்தாண்டிருக்கின்றனர்.

உலகத்துக்கு நீதியென்னும் பண்புகிடைத்ததற்குக் காரணங் கூறினமையால ஏதுஅலங்காரம.

அரசயாளென்ற மொழிகத சேரதேசத்துக்கும சோழதேசத்துக்கும மத்தியதேசாதிபதியாகிய அந்தபாண்டியனெனவும ; மத்தியசதோதிபதி அல்லாத ஒருமிக்கமா யிருக்கிற சோழதேசாதிபதியாகிய மனுநீதிகண்ட சோழனெனவும் பொருளதருமபடி பலாபால் அர்விகுதிதந்து கூறினமையால் சிலேடை அலங்காரம்.

இந்நூலாசிரியர் பாண்டியதேசத்தவராகையாலும இலங்கையிலிருந்து இந்நூல்செய்தமையாலும அந்தபபாண்டியன்எனவுமகூறினார்.

## நன்காராய்வு.

தாதைக்குங்கிழோ தனயனெனு நாடொழுங்கின்
நீதியதறகெதிரினீதமயா—மாதாழா
நயமரனுந தீதுறினுநன்ற தனுககென்றுயக
அயகிருபாணாந நகெகெனறு.

| | |
|---|---|
| தாதைக்குமதனயன், கிழோ | தகப்பனுக்குமகன் (தாழநதவனல்லன்) சரியானவனே |
| என்னும் | எனக கொள்ளுகின்ற |
| நாடொழுஙகின் | தேசாசாரத்தினல் |
| நீதி | (அததேசததில) நீதியும |
| அதற்கு எதிரில் | அநததேசாசாரததுக்கு எதிரிடையாகமகன்த கப்பனை மேலாகக் கொள்ளுகின்ற தேசாசாரததினல் |
| நீதம், அயர் | நீதிகுறைநதும் போகுகின்றது |
| நய மதனும | (இவவாறு பிரபஞசகாரியஙகள் புரண்டுபோய்க கிடபபதால ஒருவர் செயத) நன்றியினல். |
| மா, தாழா, தீது | மிகவும தாழக்கூடாததீமைகள |

| | |
|---|---|
| உறினும்ஆநன்று, அதனுக்கு | நேரிட்டாலும் அப்படியான அநதநன்றிககாக |
| என்று ஆய்க | எப்பொழுதும நன்காராய்ந்துகொண்டே இருப்பாரகளாக |
| கிருபாண | (ஆட்டைக காபபாறறும் பொருட்டு ஓநாயின் மேலெறிநத) வாள் |
| அயம | (அவவோநாயின்மேல் படாமல) ஆட்டின்மேல் (பட்டது போலொதத |
| நடுகக | நியாயததுககுச செயயும |
| ஆறு, என் | வழியா/று |

தனககுககீழபட்டவாகளைததாழந்தவாகளாக பாவிக்குதல் நியாயமாயினும அநதபபாவனையிலிருநது அவர்களை இழிவாயநடத்தும் வழககம உணடாகியிருப்பதால "அதறகெதிரில நீதமயா" எனவும கூறியிருககிறது. (ந-அ)

அறுக்கொழுககாய சுமரதலான்றேருள் வைத்தல்பிதா
நறுக்குடிநாமூக் கறைகொநாட்டறைவாள்—உறுககியரி
காநதமோடிநதயர்ததுங கைககொண்டு மன்றிலகம
ஓரநதொல்கா வானன்ருருண்டு.

| | |
|---|---|
| அரி உறுககி | சூரியனைபபாராதது (உஷ்ணமுதலிய தீ[illegible]களைக் கொடுககின்றதெனை) அதட்டி |
| காநதம ஓடு | (இருமபைத்தவிர மறறவஸ்துககளை இழுக்காத) காநததுடனே |
| இநது அயாததும | (கறையுளள) சநதிரனேயும வெறுத்தும(அக்காநதமதன்னினதைதை இழுததுககொளளுமதன்மைபோன்ற குணததையும) |
| கைக் கொண்டும் | (அச்சநதிரன் சூரியனிக் ருநதுஉஷ்ணத்தோடு பெறறுககொண்ட ஒளியைசீதளமாககிகிரகணசமயத்திலும் கூடமறறொகததினுல் உலகுககுநன்மைசெய்யும தன்மைபோன்ற குணததையும) கையாடி |
| அன்றில; அகம் ஓரநது | அன்றில் பட்சிபோன்ற கற்புள்ள மனையாளை ஆராய்நது சம்பாதிதது |
| ஒல்கா | (அதிவிருஷ்டி அனுவிருஷ்டியைத் தராத |

| | |
|---|---|
| வான் நன்றார் | (பிரதிஉபகாரத்தை விரும்பாத) மேகம்போன் றநன்மைகளை உலகுக்குச்செய்கின்றவர்களும் |
| உண்டு | இருக்கின்றனர் (ஆதலால் மேற்கூறிய இலட்சணத்துக்கு இசையும்படி. |
| ஆய் | தாயானவள் (பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய நன்மையாவது) |
| அறுகு | (பிற்காலத்தில்) சிம்மத்தினது |
| ஒழுக்குக்கு | நடைக்கைக் கொப்பான நற்குடிப்பேற்றுக்காக |
| சுமத்தல் | கற்புத்தவறாதநிலைமையுடன் கற்பத்தில் சுமத்தலாம் |
| பிதா | தந்தை (செய்யும் நனமையாவது) |
| ஆன்றோருள் | அறிவுநிறைநத பெரியோர்களது சபையினிடததில் |
| வைத்தல் | வீற்றிருக்கும்படி செய்தலாம் |
| நாட்டறை | (பிளளைகளே ஒருவனது குற்றம் குறைகளைக்குறித்து) நாட்டார்சொல்லும்வார்த்தையானது |
| வாள் | (ஒரு) வாள போலாம |
| நறுக்குடி | (ஆதலால்உங்கள்) வாசனையுள்ளகுடும்பத்தாரை |
| நா, மூக், கறை[illegible]ர் | (தீயொழுக்கத்தினலே) நாக்கையும் மூக்கையும் அறுத்து விடாது(நல்லொழுக்கத்தில்நடக்கக் கடவீர்கள்) |

தன்தேகத்தை அயலானுக்கு ஒப்புக்கொடாமலும் கணவன் சொல்தவறாமலும் ஆகிய செய்கைகள் எல்லாவற்றிற்கு மேலாதலால் பிறக்கும் ஆண்களும் பெண்களுந்தாயைப்போல உண்டாகித தன்னபிமான முடையவர்களாய் விளங்குவது நிச்சயமெனக்காட்ட "அறுக்கொழுக்காய் சுமத்தல்" எனவும்; தந்தையும் பிள்ளைகளை நல்நடக்கையிலும் ஞானநூல் நீதிநூல் கேள்விகளிலும் பழக்கிமேலாக்க வேண்டுமெனக்காட்ட "ஆன்றோருள் வைத்தலபிதா" எனவம் இவ்வாறு தாய்தந்தையர் மூன்மாதிரியாக இருந்துவளர்க்கின் உடனே நற்குடிப்பேறுவந்து ஆண்டுகொள்வதற்குச் சந்தேகம்இன்றெனக்காட்ட "நறுக்குடி" எனவும்ஆனல்பிள்ளைகள் தவறிவிடின்உடனேநற்குடிப்பேறு தொலைந்து போமெனக்காட்ட "நறுக்கு உ நாமூக்கரைக்கீர்" எனவும் இவ்வுலகததில் நற்குடிப்பேறு உடையகுடும்பத்தார் இருக்கின்றனர்

அவர்களோடு சேர்ந்து கொள்ளவே முயலவேண்டும் எனக்காட்ட, அன்றிலகம்லூர்ந்தொல் காவானன்ருருண்டு எனவுங்கூறினர். (௩௯)

நன்றுபலவுள கேணன்றை மூராட்டாட்டி
இன்றெனருந கொன்றனரு மேய்ப்பகடம்—தந்தனரில்
ஒன்றரிதே யேதுகுலநலந கோளோநகருணன்
றின்றிவாககு நாதனருளின்று.

| | |
|---|---|
| நன்று பலஉள | (நலலோர்களால் செய்யப்பட்டுவரும்) நன்றிகள் பலவாறுக இருககின்றன (அவைஎவை போலவெனில) |
| கடம் தநதனரில் | (சரணமபுகுநத புருவுககாகவும் யுத்தத்தில்செயிகக இநதிரனுககாகவும) தேககககளைக்கொடுததமனுசககிரவர்ததி ததீசிமுனி ஆகிய இவர்களசெயதநன்மைகளில் (புருவுககுச) |
| ஒன்று அரிதே | (செய்த) நன்றியைஅருமையானதாயக்கொள்ளலாமே யொழிய) இநதிரனுககுசசெய்தநன்றி ஒருவனது உயிர்கொலைககாத லால அதுநன்றிஅலலவெனக கொள்ளலாகாதாம் |
| கேள் | (நியாயதோரணை இவ்வாறிருககத) தந்தைதாயார் முதலியஇனததார் (செயத) |
| நன்றை முரட்டாட்டி | நன்றிகளை (ஆததிரத்தினுலேயும் கடமையின்படியேயும செயதிருககின்றனரென்று) முராட்டுத்தனமாய |
| இன்று எனரும் | (நன்றி) ஆகமாட்டாதென்று சொல்லுகின்றவர்களும |
| கொன்றனரும ஏயப்ப நன்று | (ஒருவாசெய்த) நன்றியைமறந்தவர்களும் (குற்றததில்) ஒரேதன்மை உடையவர்க ளாவார்கள இப்படி நன்றி |
| இன்று | இல்லாமல் ஒன்றுக்கும் உதவாத |
| இவாக்கு | இவாகளுககுக |
| குலம் | குடித்தன ஒழுங்காவது |
| நலம் | (உலக) இன்பமாவது |
| கோள் | (நற) செய்கையாவது |
| ஏது | சற்றேனும் உண்டா |

நாதன் அருள் — இவ்வாறு இல்லாவிடினும் இறைவனதுகிருபை யும் கூட
இன்று — கிடையாதாம்

யமனாகிய புறாசிபிச்சக்கிரவர்த்தியினிடத்தில் சரணம் புக வும் இந்திரனாகிய வேடன் அப்புறாவின் பிறகே தொடாநதுபோய் எனக்காகாரமாய் இருக்கின்ற என்புறாவைத்தராமல் இருப்பதுநியா யமலலவென்று கூற அதற்குமேற்படி சக்கிரவர்த்தி அப்புறாவின் இறைச்சிக்குப் பதிலாக அதனைத் திராசின் ஒருதட்டிலும் தனது சதையை அறுத்து மற்றொருதட்டிலும் வைத்துப்புறாவை இரட்சித் தான்.

முனிசிரேஷ்டர்களுக்கு ஜென்மப்பகைவனான விருததிராசூர னைஜெயிக்கும்படிக்கு ததீசிமுனிதனது `முதுகெலும்பை கொடுக்க இநதிரன் வாங்கிப்புதுவச்சிராயுத மாகசெயது மேற்படிஅசுரனை இந் திரன் ஜெயித்தான் இதனால் இந்திரனும தேவர்களும் இரட்சிககப் பட்டாாகள். (௩௰)

## சாதிக்களியாடாமை.

நாற்குலப்பேரத்த மறைநன்காய்வோா சொல்லுபவோ
மேறகுலமாய நாறெனுழிற்றுன் மேல்கீழே—தாயககுலமும
ஏவருமேகஞ்சாய்கை இலககிடுமாக் குததிமுறம்
மேவிமறைக் கொணுமோமெய்த்து.

தாய் குலமும் — இத்தேசத்துக்கு உரியவர்களாக இருக்கும்தன் மையினாலும அன்னியர் செயயும தொநத ரைகளைப் பொறுத்துககொள்ளல் முதலியநற் குணஙகளினாலும் முதன்மைபெற்ற தமிழவ ருணமும்
ஏவரும் — (மற்ற) எவ்வகைப் பிரிவார்களும்
ஏகம் — (மனுவின் புத்திரராகையால்) ஒன்றுதான்(என)
சாய்கை — நான்குவேதங்களும்
இலக்கிடும் — குறிப்பிடுகின்றன

| | |
|---|---|
| மேவி | (இந்தஉண்மையாகிய)யானையைப் பிரவேசித்து |
| குத்தி | (ஈட்டியினால்) குத்தி |
| மெய்த்து | (மனம்) ஒத்து |
| முறம் | சுளகினால் |
| மறைக்க | மறைத்துவிட |
| ஒணுமோ | முடியுமோ (அவ்வாறு மறைத்துவிடினும்) |
| நாற்குலம | நெய்தனிலமாக்கள், மருதனிலமாக்கள், முல்லைனிலமாக்கள், குறிஞ்சிநிலமாக்கள் பாலைநிலமாக்கள், பிரம சத்திரிய வைசிய சூத்திரனென்னும் |
| பேர் | நாமதேயங்களின் |
| அத்தமதை | காரணார்த்தங்களை |
| நன்கு | நன்றாக |
| ஆய்வோர் | ஆராய்ந்தநல்லவர்கள் |
| மேல்குலமாய் | (தங்களைக்குறித்து) மேல்ஜாதியாக |
| சொல்லுபவோ | கருதுவார்களோ(ஒருபோதும்கருதமாட்டார்கள்) |
| நால், தொழில், தான் | (ஆனால்மேற்கூறிய வருணத்தவர்களினது)பலவகைப்பட்ட தொழில்களும் நிச்சயமாகவே |
| கீழ்மேலே | ஒன்றற்கொன்று மேலானதாம் |

தமிழ்ப்பாஷையே இத்தேசத்துக்கு உரித்து எனவும்தமிழர்களே இத்தேசத்துக்கு உரியவர்களெனவும் இந்நூலாசிரியர் சித்தாந்தப்படுத்தித்தமிழ்வருணத்தைத்தாய்க்குலம்எனவும்அத்தமிழர்களில் நெய்தநிலமாக்களென்றால் கடலையடுத்த நிலங்களிலுள்ள மனுபுத்திரரெனவும் மருதநிலமாக்களென்றால்வயல் சூழ்ந்தநிலத்திலுள்ள மனுபுத்திரரெனவும் முல்லைநிலமாக்களென்றால் காடுசார்ந்தஇடத்திலுள்ள மனுபுத்திரரெனவும் குறிஞ்சிநிலமாக்களென்றால் மலைப்பிரதேசத்திலுள்ள மனுபுத்திரரெனவும் பாலைநிலமாக்களென்றால் விளைவற்றஇடத்திலுள்ள மனுபுத்திரரெனவும் பிராமணரென்றால் பிரமக்கியானத்தையுடையவர்கள் அதாவது இறைவனைப்பற்றி அறியும்விதமும் அறிவிக்கும் விதமுமாகிய செயல்களைஉடையவர்கள் எனவும்இத்தொழில் பிரதானமான தொழிலெனக்குறிப்பிக்குமாறே இவர்களைப் பிரமனது அவயவங்களில்பிரதான அவயவமாகியமுகத்தில் பிறந்தவர்களெனவும்

மேற்கோள்களில் கூறியிருப்பதுஉபசாரவழக்குஎனவும் ; சத்திரியரொ ன்ருல் சத்துருக்களைச் செயித்து பிரஜைகளை இரட்சிக்கின்றவர்கள் எனவும் இச்செயல் சத்திரியாகளது புஜபலத்தினு லுண்டானதால் அவர்களைப் பிரமனது புஜத்தில் தோன்றினவாகளெனக் கூறியிருக்கி ன்றதும உபசார்வழக்கெனவும் வைசியரொன்ருல் வியாபாரச் செய் கையாகிய நடபடியில் பிரவேசிக்கின்ற வர்களெனவும் ஆதலால் இவ ர்களை அப்பிரமனது தொடையி லிருந்து வெளிப்பட்டார்களென உபசாரவழக்காய்க் கூறியிருக்கின்றது எனவும் சூத்திர ரொன்ருல் கைத்தொழில் முதலியவேலையிளுல் வருத்தப்படுகின்றவர்களெனவும ஆதலால் இதுவும் உபசாரவழககாக அப்பிரமனது பாதத்தி லுதித்த வர்களாகக் கூறியிருக்கின்றன எனவும் இங்கு "நாற்குலப்பேரத்தம தைநன்காய் வோாசொல்லுபவோ மேறகுலமாய நாற்ருெழிற்றுன் மேல்கீழ்" எனவுங் கூறினர். (சுக)

*தாதரிமூவாயிரமுந்தாயோம் விசேம்வணிச்சு*
*வாதவலில் வாணியர் வேழாண்மமிடை—ஏதிதுநோ்*
*தமிழ்புரட்டோ வாயிழிப்பத் தனங்காட்டு கைங்கிரியச்*
*சிமிஞூற்குச் செய்ந்நெறியென் சித்து.*

| | |
|---|---|
| தாது அரி | (விஸ்,தாதுவண,தாதுமுதலிய) தாதுக்கடல்கள் |
| மூவாயிரமும் | மூவாயிரங்களையுமுடைய |
| தாயோம் விசேம் | ஸமஸ்கிருத பாஷை என்னும் தாய்க்குப் பிறந்த ஆரியர் (எங்களுக்கு பிரவேசிகைஎன்னும் பொருள்தரும் அந்த) விஸ் என்கிற தாதடியா கவைசியரொன நாமதேயம் வந்தது (இவ்விசு தாதினை யனுசரித்து) |
| வணிச்சு | (அந்தவண, தாதானது வியாபாரம் செய்தலில் பிரவேசிக்கை என்ற அருத்தத்தில் வந்து) வணிச்சென்ருகி (அதுவே) |
| வாதம் | (வாணிகம் செய்கின்றவனது தன்மைஎனப்பொ ருள்தர வாணிச்சியம் என்ற) மொழியால |
| வலில் | வந்த அவசரத்தில் |
| வாணியர் | வாணியரொன ஆரியமொழி நாமதேயம் எங்களு க்குக் கிடைத்தது |

| | |
|---|---|
| வேளாண்மம் | (இப்படி இருக்க) பூமியைக்கைய்யாளும்தன்மை என்னும பொருள்தரும் வேளாண்மை என்னும் பகுதியும் |
| இடை | மத்தியான முல்லை நிலத்தைக் குறிக்கும் இடை என்னும்பத்தியும் |
| ஏது | (அம்மூவாயிரம் தாதுக்களைச்சேர்ந்தவைகள்) அல்ல (தமிழ்மொழிகளாம்) |
| இது | (இம்மொழிக்குரியவர்களைப் பூவைசியர் தனவைசியரென உட்பிரிவாகக்சொன்ன) இது |
| நேர் | இயல்புக்கு விரோதம் |
| தமிழ்புரட்டு | இவ்வாறு விரோதமாய்க் கூறுவது தமிழ் நூல்களின் புரளித்தனம் (என்று) |
| ஓவு | (ஸமஸ்கிருத நூல்களின் போக்குக்காக) வருந்துகின்ற |
| ஆய் | சிறந்த தமிழ்நூற்களை |
| இழிப்ப | நிந்திகுமாறு (எழுந்தருளி நாயகர் முன்புக்குத தாசிகள்) |
| கைங்கரிய | அமாகமென்னும கைங்கரிய தன தீவாராதனையில் |
| தனம் | ஸ்தன (மென்று பார்ப்போா நினைக்குமபடி) |
| காட்டு | நெஞ்சிற்கட்டிக்கொண்டு அபிநயம்செய்கின்ற |
| சிமிழ் | சிமிழாகிய செப்பை (யொத்து தமிழ்வருணத்தவாகளைப்பிரித்து வகைவிவரமாகச் சொல்லியும மறுபடியும் அதேநூலில் அவர்களைச்சத்திரிய வைசிய சூத்திரரென ஜாதிககளியாட்டினல்) |
| நால்கு | (ஆரியவருணத்தை இச்சித்துச் சொல்லிஇருக்கின்ற) சூடாமணி நிகண்டுமுதலியநூற்களுக்கு (நியாயதோரணைதந்து) |
| சீத்துசெய் | ரணம்பண்ணும் |
| நெறிஎன் | து |

ஸப | ஷைக்கு மூவாயிரம் தாதுக்கள்தான எனவும ஒவ்வொருதாதுக்களிலிருந்து அநேக ஆரியமொழிகள் உண்டாகி இருப்பதால் "தாதரிமூவாயிரமும்" எனவும் சில அவ்வியம் இருப்பதால்

எசச உண்மைதந்தும் ஸமஸ்கிருதநூல்களில் பெரும்பாலும் காரணார்த்தமும காரியார்த்தமுமாகக்கூறி இருக்கின்றமையால்பலரும்பறபல விதமாய்க் கூறுதலுக்கு இடமாய் இருக்கின்றதெனவும் தமிழ்நூல்கள் அப்படி அல்லவெனவும் காட்ட "ஓவாய்" எனவும் ஆதியில் சில பெண்கள் இல்லறவாழ்க்கையை முற்றிலுந் துறந்து ஆலயங்களில் சேர்ந்து பணிவிடை செய்கின்றவர்களுக்குத் தேவடிமார்கள் எனப் பெயர் இவர்கள்செய்யும் நல்லவழக்கத்தை வரவரவெறுத்துத தேவதாசிகளது விநோதவேடிக்கையான ஆலயப்பணிவிடைகளை இச்சிக்கின்றதுபோல சிலநூற்களில் தமிழ்வருணத்தை வெறுத்துக் கூறியிருக்கின்றன எனக் குறிப்பிட்டு "சிமிழுூற்கு" என உவமிததுக் கூறியும் இருக்கின்றனர்.

"சிமிழ்நூல்" என அதிசயசங்கதியை யெடுத்தாண்டுஉருபகஞ்செய்தமையால், உருபக அதிசய உத்தி அலங்காரம்.

காரணார்த்தத்துக்கு உதாரணம், பிரம சத்திரிய வைசிய சூத்திர ரென்னும் மொழிகளின் கருத்தையும், காரியார்த்தத்துக்கு உதாரணம் அவர்களது தொழில்களின் தன்மையை உணர்த்துமாறுமுறையே பிரமனது முகம், புஜம், தொடை, பாதமாகிய இவற்றில் தோன்றினரெனக் கூறியிருக்கின்றது என்றதையும் மேலேச்செயயுளின் வியாக்கியானத்தில் கண்டுகொள்க. (சஉ)

ஒன்றிப்பேமெக்குடியு முரசிப்பல் கோனுக்கும்
அன்றரசுமோதி யிரண்டானேயூ—டொன்றெலுங்காய்
வாதிக்குமன்றீது வைப்பதலே பண்மறமாம்
சாதிக்களியாட்டுத் தான்.

| | |
|---|---|
| சாதிக்களியாட்டு ஒன்றிப்பு | சாதிக்களியாட்டினால் (ஒருவருகடொருவரன்பற்று) ஒன்றிப்பு |
| ஏம் | இல்லாமற்போம் (உடனே) |
| எக்குடியும் | எவ்வருணத்தவர் |
| உரசி | (பிரிந்து) கலகப்பட்டு (அக்கலகமானது) |
| பல்கோன் | (பற்) பலஅரசர்களை |
| ஆக்கும் அன்று அரசுமோதி | உண்டுபண்ணும் (அவ்வாறுண்டுபண்ணவே அப்பொழுதே பலஅரசர்கள் ஒருவருக்கொருவர் எதிர்த்து |

| | |
|---|---|
| இரண்டு ஆனையூடு | (இரண்) டிரண்டு ஆனைகளுக்கிடையிலே |
| ஒன்று | தங்கி அகப்பட்டு நசுங்கி அழிகின்ற |
| ஒலுங்காய் | ஒலுங்காகிய கொசுகுகளைப்போல |
| வாதிக்கும் அன்று | நீங்காத துன்பத்தைப்பிரஜைகளுக்குஉண்டுபண்ணும இவ்வாறு ஆவதுந்தவிர |
| ஈது | இந்தச் சாதிக்களியாட்டானது |
| பல்மறம்ஆம் | விரோதமுதலிய பற்பல அதர்மங்களுக்கும் காரணமாம் |
| தலை | (ஆதலால் அறத்துப்பாலில் கூறியிருக்கும்அப்பகுதிகள்யாவற்றிலுமிதனை)முதன்மையாக |
| வைப்ப | அறிவுடையோர்கள் கைக்கொள்வார்கள் |

தான்—அசைநிலை.

சாதிக்களியாட்டினல்விளையும் அனர்த்தத்தைநியாயதோரணையுடன் கூறியிருப்பதால் அனர்த்த உற்பத்தியலங்காரம். (௩௬)

## பொய்யாமை.

காற்றைப்பிடித்துக் கடியபரியாக்குவபோல்
ஊற்றைச்சடத்தமதை ஊக்கிவரல்—நூற்றறரும்
வாய்மைக்குப் புல்லுருவிமானந் தானந்துடைக்கும்
தூய்மையோர் கொள்ளார் துணிந்து.

| | |
|---|---|
| ஊற்றைச்சடத்த மதை | (தன்னைப்பற்றி மற்றவர்கள்மனதில் கெட்ட எண்ணத்தைப) பிறப்பித்துகொண்டு இருக்குதலை உடைய பொய்யை |
| ஊக்கி | (ஒருவன்) முயற்ச்சித்து |
| வரல்காற்றை, | வருதலானது காற்றைப் |
| பிடித்து | பிடித்துச் (சுமக்கும்படியான) |
| கடியபரி | பெரிய சுமையாகக் |
| ஆக்குவபோல் நூற்றல் | கட்டுவதுபோலாம் (இவ்வாறனகெடுதியை உண்டுபண்ணுவதுந்தவிர பலரிடத்திலும் மேலான) எண்ணத்தைப் |

தரும் — பிறப்பிக்கின்ற
வாய்மைக்கு புல்லுருவி — வாய்மையென்னும் அறக்கீரைக்கு (அதனை அடியோடுகெடுக்கும்) புல்லுருவிப்புண்டாகும்
மானம் தானம — தனது மரியாதையையும் (அதிலிருந்து பலகேடுமுண்டாவதால்) இகபரமிரண்டினையும்
துடைக்கும் — நாசப்படுத்திவிடும்
தூய்மையோர் — (ஆதலால மனம் வாக்குக் காயங்களில்) பரிசுத்தமுடைய பெரியோர்
துணிந்து — துணிகரங்கொண்டு
கொள்ளார் — (ஒருபோதும்அதனைக்)கைக்கொள்ளமாட்டார்கள்

நல்ல எருவிட்டுத்தளையைச்சுத்தஞ்செய்து பாத்திகட்டிஉப்புச்சாரமான நல்ல தண்ணீரைப் பாயச்சிறல்தான் அறைக்கிரை செழிததோங்கும் இக்கீரைபபாத்தியில் சிறுபுல்லுருவி தோன்றுமாகில் உடனே கீரை நாசமடைவதுபோல சுத்தமான இருதயத்தில் பொய் சற்று கிளம்புமாயின் உடனே வாய்மையும் தொலைந்துபோமென "வாய்மைக்குப் புல்லுருவி" என்றூர்.

"காற்றைப் பிடித்துக் கடியபரியாக்குவபோல்" எனப் பிரசித்தமில்லாத ஒரு உவமையை ஏற்படுத்திக் கூறினமையால் உற்பிரேச்சை அலங்காரம். (சச)

கடைக்காலா மத்தனைக்குங் கரணவணுவூசுவிக்கும்
சடத்தமுமகாச சரசமொடு—துடிததவெறி
ஆடலான்கை நரனுக்காற்று கொலைக்கேறறப
மூடமதே யேதுமுனிந்து.

அத்தனைக்கும கடைக் காலாம் — (பஞ்சமாபாதகங்களி லொன்றுகிய பொய்) உட்பகை முதலிய தீமைகளுக்கும் அஸ்திபாரமாகும்
அணுகரணம் — அணுரூபமான (மனம் புத்தி சித்தம் அகங்காரமாயக் காரியப்படுகின்ற) அந்தக்கரணத்தை
ஊசுவிக்கும் — உதவாமல்போகச்செய்யும (ஆதலால்)
சரசமொடு — விளையாட்டோடே யாவது

| | |
|---|---|
| சட்டத்தமும | பரிகாசத்தோடேயாவது |
| ஆகா | (வீணை பொய்) சொல்லுதலகூடாதாம் |
| வெறியாடலான் | ஏன் கூடாதெனககேட்கில்) ஆவேசங்கொண்டு ஆடுகின்ற பூசாசாரியினது |
| கைதுடித்த | கையால (அழுத்திப் பிடிககப்பட்டிருக்கின்ற தான் வதைகாபபட்டு கொலையுண்ணப்போ கின்றதை நினைத்துத் துடி) துடித்துக் கெஞ்சாநின்ற |
| நரனுகு / முனிந்து | மனிதனைத (துஷ்டதேவதையின் சந்நியதானத்தில் நிற்பவாகள்) கோபித்து |
| ஏற்று | மனமலைத்து |
| ஆற்றுகொலை கருஅறப | செய்த கொலை பாதகத்துக்கு அவாகள் அதனை துஷ்டதேவதையெனவும அறிவுள்ள வஸ்துவெனவும கொண்டிருந்த அறபமான |
| மூடமே | மூடத்தனமே |
| ஏது | காரணமாம |

ஒட்டியதேசத்தவர்கள் தங்கள்மனதில் தேவதையாய் எண்ணங்கொண்டிருக்கின்ற துஷ்டதேவதை தங்களுக்கு வேண்டிய வைபவங்களைத்தருதலுக்காக யாவரும் சேர்ந்து அறியாமையினலே நரபலியிட்டுவந்தாாகள் என்பது உலகப்பிரசித்தமாம. (௩௫)

குடிவெறியன் மூஞ்சிகுறுகுட்டை நீரேற்றேற்றி
அடும்மலங்கோல மறிந்தும—படுவபோல்
குண்டியன் கோட்டாலை கூர்ந்து மென்கூாத்தாக்கித
துண்டியா நன்ருய்த் தொழும.

| | |
|---|---|
| குடிவெறியன் | குடியினல் வெறித்தவன் |
| குறுகுட்டைநீர் | சிறிய பள்ளத்தையுடைய முழங்கால் தண்ணீரில் (தவறிவிழுந்து) |
| மூஞ்சி, ஏற்று ஏற்றி | மூஞ்சியைத (தண்ணீருக்குமேலெழுப்பிவைத்துக்கொள்ளத் திராணியும புத்தியு மற்றவனுகி அத்தண்ணீருக்குளளேயே) நுழைத்து நுழைத்துக் |

| | |
|---|---|
| அடும் | (தன்னைத்தானே) கொல்லுகின்ற |
| அலங்கோலம் | மரியாதை கெட்டசெய்கையிலிருந்து (மற்றவர்களா லிரட்சிக்கப்பட்டிருக்குதலே) |
| அறிந்தும் | (வெறிநீங்கி நன்று) யுணர்ந்தும |
| படுவபோல் | மறுபடியும போய்க் குடித்து வெறிக்கின்றவனைப்போல |
| குண்டிடன் கோட்டாலே | (பொய்யன் பொய்சொல்வதினால்நேரிடுந்) துன்பத்தை |
| கூர்ந்தும் என் | (பலமுறையும்) உருசிக்கினும்(அவற்றினால்)யாதுபிரயோஜனம |
| துண்டியா | (அப்பொய்யை) ஒருபோதும்விட்டு நீங்காதவனுகி |
| கூர்த்து ஆக்கி | (அதனை) அதிகரிக்கச் செய்து (மறுபடியும் மறுபடியும்) |
| நன்றாய் | நன்றாகக் கைகொண்டு |
| தொழும் | (அப்பொய்க்கு) அடிமைப்படும் |

இந்நூலில் களியாட்டைப்பற்றிக் கூறுது விட்டிருக்கினும் அவற்றைக் கண்டிக்குமாறே குடித்துவெறிப்பதினாலுண்டாகிய கேட்டை எடுத்தாண்டு "குடிவெறியன் மூஞ்சி குறுகுட்டைநீரோற்றேற்றி அடுமலங்கோல மறிந்தும் படுவபோல்" எனப்பொருள் நயப்படுத்தும்படி இங்கு உவமானமாக்கிக் கூறி இருக்கின்றனா.

வெறியினால் முழங்கால் தண்ணீரில் தவறிவிழுந்து சாகப்போனதை இந்நூலாசாரியா பிரத்தியக்ஷமாய்க் கண்டு உவமித்தமையால் பிரத்தியட்ச பூரண உவம அலங்காரம. (௩௬)

## கள்ளாமை.

தனக்குவைகாண்டே உம்படிறின் தன்வாய்க்குங் கையோடா
தெனக்குறைகாண்பரிசைகின்றால்—தனக்கறுவர்
இம்மானுக்கீடோ விருமைகெட்டேங்கிரவில்
பொம்மானுக்கஞ்சுவதென் போக்கு.

| | |
|---|---|
| படிறின் | திருட்டினால் |
| தனம் குவை | திரவியக்குவியலைப் |

| | |
|---|---|
| காண்டும் | பெற்றுக்கொள்ளினும் |
| தன் வாய்க்கு | (தீவினையால் அத்திரவியக்குவியல் பார்த்திருக்கக்காணுததாகி) தன்வாய்க்குக |
| கைஒடாதுஇ சைகின்றால் | கையெட்டாதபடி தரித்திரமுண்டாகும் (ஆதலால் திருட்டுத்தொழில் சரியமென்றெண்ப் பசாதர்பமடைந்து) சேர்ப்பட்டால் |
| என்னகுறைகா ண்பர் தனக்கு | என்ன குறைவுகளைப் பெற்றுக்கொள்வார்கள் (நல்வினைப்பயன் ஆரம்பிப்பதால் ஒரு)குறைவையும்பெற்றுக்கொள்ளார்கள் தன்னுடைய |
| இ, மாணுக்கு அறுவா ஈடோ | இந்தமாட்சிமைக்கு (மற்றவர்களைப் பணியாது பூமியை ஆண்ட) ஏகசக்கிராதிபதிகளாகிய அறுவர்களதுமாட்சிமைகளும்ஒப்பாகுமோ |
| இருமைகெட்டு ஏஙகு | (காரியம் இவ்வாறிருக்க) இவ்வுலக இன்பமும் மறுமை இன்பமுமதொலைந்துபோக(யாரும்) பயப்படுகின்ற |
| இரவில் | நடு இராத்திரியில் |
| பொம்மானுக்கு | (மிருகங்கள் அஞ்சியோடும்படி கொல்லைகளில் வைத்திருக்கின்ற) பொம்மைக்கும் |
| அஞ்சுவது | (ஆளோவென) நடுங்குவது |
| என் | என்ன |
| பேசக்கு | புத்தியீனம் |

ஏகச்சக்கிராதிபதிகள் கார்த்தவீரியன், புரூரவன், நளன் அரிச்சந்திரன், முசுகுந்தன், புருகுற்சன் ஆகிய இவர்களாம். சகரனையும ஏகச்சக்கிரவர்த்திகளிலொருவனுகச் சொல்வாருமுளர்.

ஒருதிருடன் சேர்ப்பட்டால் அவனிடத்தில் பிரஜைகளும்அரசனும் அன்பும் பிரியமுங்கொள் வதிஞல்யாவராலும் மேன்மையாக எண்ணப்படுவானெனக் காட்ட "தனக்கறுவர் இம்மாணுக்கீடோ" எனவுங் கூறினர். (சஎ)

வெடிவா யுமிழ்க்கள்ளும் வீரமுகப்பேய்க்களும்
பிடியாத தூம்புறப் பாய்ப்பெய்களும்—அடிமுறுக்காயக்
குளிர்காயு மக்கினிச் செங்கோற்களும் கூழ்க்களும்
சளமாகு மிங்கு மங்குந் தான்.

| | |
|---|---|
| வெடிவாய் | காற்றமுடைய வாயிலுள்ள |
| உமிழ்க்களமும் | எச்சிலை (முகத்தில் காறியுமிழ்ந்து அனுப்பிவிடுகின்ற அற்பம்) திருடும் |
| வீரமுகம் | யோக்கிய முகத்தைக் காண்பித்தலுடன் |
| பேய்க்களமும் | மதிகெட்டதனமாக யோக்கியன்போல செய்கின்றதிருடும் |
| பிடியாத | (மனம்) பிடியாத |
| தாழ்பு, ஆய் | சாக்கடையைப்போல (பாவித்து) |
| உறுப்பு | (ஒவ்வொரு) அவயவங்களையும் |
| பெய் | (இஷ்டப்படி) இமசைசெய்கின்ற |
| களமும் | திருடும் |
| அடிமுறுக்காய் | (இராஜகட்டளை மிகுந்த) கடூரமாய் உண்டாகி |
| குளிர்காயும் அக்கினி | (அதனால்) குளிர்காயும்போது (தக்கபடி அடுத்தும் விலகியுமிருக்கும்படியான) நெருப்பை |
| செங்கோல் களமும் | (ஒத்த) நியாயாதிபதி இடத்தில்போய்த் தண்டனையடையத்தக்க திருடும் பரிதானம் வாங்குதலாகிய திருடும் |
| கூழ் களமும் | பயிர்செய் நிலங்களைக் கூட்டுகின்ற திருடும் எச்சித்தனமான திருடும் |
| இங்குமங்கும் சளம் ஆகும் | இவ்வுலகத்தில் நீங்காத துன்பத்தை உண்டுபண்ணுவதுந்தவிர மறுமையிலும் பெருந் துன்பத்தை வருவிக்கும். |
| | தான்—அசைநிலை. |

நீதியினால் தண்டிக்கப்படுகிறதிருடும் பரிதானம் வாங்குதலாகிய திருடுமெனப்பொருள்தரும்படி "செங்கோல்களமும்" எனவும் பயிர்நிலங்களைக் கூட்டுதலாகிய திருடும்தின்பண்டத் திருடுமெனப் பொருள்தரும்படிக்கும் "கூழ்க்களமும்" எனவுங்கூறினமையால் சிலேடையலங்காரம்.

(சஅ)

மானந் துடைக்கு மாண்குடிமை போக்கடிக்கும்
தானங் கெடுக்குந் தனுவீத்த—ஈனுதிரம்
காற்றும்பேய் தானுக்கி நடித்திழிப்பா முடத்தைச்
சேத்தாடா வற்றுஞ்செயல்.

மானம் துடைக்கும் — (கள்வர்களே திருட்டுத்தனமானதுஉங்களுடைய) மரியாதையைக் கெடுத்துவிடும்
மாண், குடிமை, போக்கடிக்கும், — (பெயருக்குமாத்திரம வைத்துக் கொண்டிருக்கிற)மேறகுலத்தையும் (கூடப்)போக்கிவிடும்
தானம் — (தான் குடியிருக்கும்) இடத்தைத் (தனக்கு)
கெடுக்கும் — இல்லாமறசெயதுவிடும்
தனு, ஈத்த — (தனக்கு) உடலைக்கொடுத்த
ஈன்உதிரம் — பெற்றோர்களாகிய இரத்தத்தை
நாற்றும் — (எங்கும) அபகீர்த்தியாய்த் தூற்றப்பண்ணும்
செயல் — (இவறறிற்கும் இவைபோல்வனவற்றிற்குக் காரணமானஉன்)செயலானது
பேய்தான் — பிசாசு (தனது ஆவேசத்தைப் பெற்றுக்கொண்ட முடவனை) தன்னைப்போல
ஆக்கி நடித்து — அவலட்சணப்படுத்தி(அலஙகோலமாக அவனை) ஆடச்செயயினும்
இழிப்பு ஆம் — (அவனுக்குளப்போதும்) நிந்தையைக்கொடுத்துக்கொண்டிருககின்ற
முடத்தை — (அவனது) முடத்தை
சீத்து ஆடா — (அந்தச்சமையத்திலாவது)நீக்கிக்கொடுத்து (அவனை) ஆடும்படி செய்யாத
அறரும் — அநத செயல்போலாம்

அநர்த்தங்களை எடுத்துக் கூறினமையால் அனாத்த உறபத்தி விஷம அலஙகாரம். (சசு)

## கோணைகைமறுத்தல்.

தூணைத்துரும் பாக்கல்மேறகோள் சிறுதுரும்பைக்
கோணைகமாய்ககோடல கீழ்க்கோளாம்—கோணைகையைக்
கடஙகோளழிப்பானு மழிபொருளுங் காய்ந்தழிக்கும்
விடமன்ற தொப்பிடலாம் வீழ்ந்து.

தூணை துரும்பு ஆக்கல் மேலகோள் — (தனக்கு விரோதமாய்ச்செய்த) பெரிய குறறங்களையும அற்பகமாகசசெய்து (அவறறையு) மறந்துவிடுதல்மேல்மககளது செயகையாம (காரியம் இப்படியிருகக)

| | |
|---|---|
| சிறு துரும்பை | (யாருக்காவது) விரோதமான செய்கை யாகாது (ஒருவனது) செயல்களையே |
| சீழ் | இடமகன்ற |
| நாகம், ஆய கோடல் கிழ், கோளாம் | மேருமலைபோன்ற குற்றச்செயல்களாக்கி (வீணே கப் பலரும் அறியும்படி (செய்தல் கீழ்மக்கள் செய்கையாம் (இவ்வாறு) |
| கோண கையை டம் | அவதூறுசெய்து நகைத்து (பிறனை அவமானப் படுத்துவதுந தவிர தன்னையும் நரகததுககு) ஆளாயககெடுத்துககொண்டவனுககுஉடலில |
| கோள் | (பல்லை) ஊன்றுஞ்செயலினால் |
| அழிபொருளும் அழிப்பானும | கடியுண்டபொருளையும அவ்வாறுகடித்துஉடல் வேறு உயிர் வேறாய்ப் பிரிக்கின்ற பொருளையும் |
| காய்ந்து | கோபித்து ஒருமிக்க |
| அழிக்கும் | அழித்துவிடுகின்ற |
| விடம் | விஷசெந்து |
| அன்று | என் புததிககு அகப்பட வில்லை |
| வீழ்ந்து | (அவ்வாறு அகப்படுமாயின்) இசசமையத்தில் ஆவலோடு ஓடி |
| அது, ஒப்பிடலாம் | அதனை எடுததாண்டு இவ்விடத்தில் நாம ஒப் பிடலாம் |

கடியுண்டவஸ்துவையும்கடித்தவஸ்துவையும் ஒருமிக்க அழிக் கின்ற விஷத்தைப்பொருநதிய ஒருசெந்து சமபவிககுமானல் ஒப்பிடு வேனென்றமையால் சமபாவனை அலஙகாரம. (௩௰)

சாதுவே தஞ்சனோ சாதிகாண் டேடவென்றே
பேதமலககீழுண்டு பெட்புறாகாண்—டேதாக்கி
அலப்புதருங் கோணகை யரத்தோல் புகழ்நரககாண்
டுலப்பி யொழித்திடுமி னைத்து.

| | |
|---|---|
| சாதுவே | சாதுக்களே உலகில் யாவரும் |
| தம்சனமோ | தம்முடையவர்களே (அன்றி) |
| பேதமல | யாதொருபேதமு மில்லை |
| சாது | (இவ்வாறிருக்கச் சில) வருணத்தவனாக |

| | |
|---|---|
| காண்டு | கண்டு (கீழ்ப்படின் தீட்டென்று) |
| ஓடலெனறு | ஓடுகின்றது யாதுகாரணம் (ஆனல் பெரியோர் களால் பிரிக்கப்பட்ட) |
| கீழ் உண்டு | கீழ்மக்கள் இருக்கின்றனர் (அவர்கள்யாரெனில்) |
| பெட்பு | அன்பு விளங்கா நின்ற |
| உரை | (ஒருவனது) வாய்ச்சொல்லை |
| காண்டு | எடுத்து (அதையே) |
| ஏது ஆக்கி | (மாற்றி அதனைப்பற்றி அவதூறுசெய்யக்) காரணமாய் வைத்துக்கொண்டு |
| அலப்புதரும | (பலபல இடங்களிலும் போய் அதனை) வீணுகவார்த்தையாடி அவதூறுசெய்கின்ற |
| கோணகையர் | கோணகையாகிய |
| அ, தோல் | அந்த உடலை, |
| புகழ், நரம | புகழுகின்ற மனிதசசெந்துவைக |
| காண்டு | கண்டவுடனே |
| ஒதது உலபபி | (மனம்) ஒதது (மற்றவாகளையும அவாகள் கண்ணிற்படாமல்) ஒழிததுககொள்ளச்செய்து |
| ஒழித்திடுமின் | (நீங்களும்) ஒழிததுககொள்ளககடவீாகள. |

சாதிபிறப்பின்படி இழிந்தவனுயினும் நல்லொழுக்கமுடைய ஒருவனை வரைதல் கூடாதெனவும எவன் ஒழுக்கந்தவறி நடககின்றனே அவனைக கண்டால் விலகி ஓடவேண்டியது அவசியமெனவும நீதிநூறகளின் கருதது எனககாட்ட "சாதிகாண்டோடலெனறேபேத மிலககீழுணடு" எனவுங கூறினா. (நிக)

வாயதவறிக கோணகையை வாய்வையயாா மெயயயாந்தும
பேய்மரபுஞ் சேயமரபும பிண்டமிடு—தீயொழுககுச
செயபிக்கே தீயனவாயக் தோவதுககுத் துறகுறவன்
சயபிக்கு நறகுரவன் சாாபு.

| | |
|---|---|
| மெய, அயர்ந்தும்வாய்தவறி | (நற்குடிப்பேறறைஉடையவர்கள்) உடல்மறந்து கூட வாககுததடுமாறி |
| கோணகையை | (ஒருவனை) அவதூறுசெய்துநகைத்தல் பிரயோஜனததை |

| | |
|---|---|
| வாய் வையார் | (விரும்பி) வாயிலெடுத்துப் பேசார் (ஆதலால் அக்குடும்பத்தில்கோணைகைதலையெடுக்குமோ) |
| பிண்டம் இடு | (அதுவேறுயாருக்குஉரித்தெனில்)உடல்பிறப்பித்த |
| பேய் | பெய்மையாகிய பெற்றோர்களது |
| மரபும் | வம்மிசபாரம்பரையாகவும் |
| சேய் | (தனது) இளமைப் பிராயமுதற்கொண்டு |
| மரபும் தீஒழுக்கு | வழக்கமாகவும் (தீயொழுக்கங்களில் பழகியும் பிறரைத்) தீயொழுக்காகக் |
| செப்பிக்கே | கூறியும் நிலைகின்றவனுக்கே உரியதாகும் |
| தியனவாய் தேர்வதுக்கு | (இக்கீழ்மகனது செயல்கள் யாவையும்) பொல்லாங்கானவைகளாக ஆராய்கின்றவர்களாகிய புழுக்களுக்கு |
| துற்குறவன் | பொல்லாதவேடனவான் |
| சப்பிகு | (நம்மையும் இவ்வாறே அவதூறு செய்யவானல்லவாளன்றுகருதாத) சாரமற்றவனுக்குத்தான் |
| சார்பு | (இந்தக் கீழ்மகன் கனக அவதூறாகிய) ஆதரவைக்கொண்டு |
| நற்குரவன் | நல்லகுருவாவான் |

கோணைகையை யோக்கியனென மயங்குஞ்சுபாபத்தைஎடுத்துக்கூறினமையால் பிராந்தி அலங்காரத்தோடு கூடிய சுபாப உகதி அலங்காரம். (௫௨)

## உலோபமறுத்தல்.

அற்பறமான நிலையற்றவுடன் கசடாம
புற்பாறும் பஞ்சாரமும் பொன்றுறுமோ—உற்பாத
பிணடப்பிசிறொருவன் பேருதித்ததில்லி பற்றிக்
கெண்டை யாநோக்கினது கீழ்க்கு.

| | |
|---|---|
| புல்பாறும் | அற்பத்தனமுள்ள பருந்தும |
| பஞ்சாரமும் | கிளியும் (ஒருகூண்டிற்) |
| பொன்றுறுமோ | போய்வாசஞ்செய்யுமோ வாசஞ்செய்யமாட்டாது |

| | |
|---|---|
| அன்பு, அறம் மானம, நிலே ற்றவுடன் | (அதுபோல ஆன்மாவுககு உடைததாயிருக்க வேண்டிய) அன்பு அறம் மரியாதை தன்னபிமான முதலியவைகள் (முறறிலு) மில்லாமல்போனவுடனே |
| கசடாம | பிசினித்தனமானது தலையெடுக்கும |
| உற்பாதபிண்டம | (ஆகலால்) பிசினித்தனமே வந்து உருவஙகொண்டதுபோலொதத |
| பிசின் | உலோபத்தனமுளள |
| ஒருவன் தில்லி | ஒருவனல் (மீன்பிடித்துப் போடுதலுக்குச்சாதனமான) பறியின் |
| பற்றி போ உதித்த | பொருட்டு (கறிக்குமீன் கொடாதவன் தில்லியோடுகொடுததானென்ற) உலகவழக்கசசொல் உண்டான |
| ஆம் கெண்டை | அவமானததை |
| நோககின் | (நாம்) கவனித்தால் |
| அது | அநதப் பிசினித்தனமும் |
| இழக்கு | இழ்மககளுக்கு உரியதாகும் |

அரசாட்சியரது சேவக னொருவன் மீன் பிடித்துககொண்டிருக்கின்ற மீன்பிடிகார னொருவனிடததில் கறிக்கு ஏதாவது மசசஙகள தரலவேண்டும் என இரந்துகேட்க அவன் பிசினிததனததால் அச்சேவகனை யெதிர்த்ததால் அவனுக்குக் கோபாவேசம பிறந்து அரசாட்சியரது ஏரியில் எப்படி மீன்பிடிக்கலாமென அடித்தும பிடரியைபபிடித்துத தள்ளியும தில்லியாகிய பறியிற்கைபோட்டும் அவனைக் கொண்டுபோகையில் அமமீன்பிடிகாரன் அச்சேவகன்காலில்விழுந்து யாசித்துத தன்னைமட்டும் மீட்டுக்கொண்டு அந்தப்பறியையும் அதற்குள்ளிருக்கும்மசசங்களையும் இழந்துபோயினெனவுமஇந்தச்சம்பவத்தை பிசினிததனமுள்ளோர் விஷயமாய் கறிக்கு மீன்கொடாதவன் தில்லியோடு கொடுப்பானென்னவும் உலகவழக்கமாய்ப் பழமொழி வழங்குகின்றது.

தில்லியென்பதற்குக் காரணார்த்தமும் தில்லுப்பில்லுக்குஇடமானபறியென்பது பொருளாம். (நிக

இண்டஞ்செடித்தலையே யில்லகமெக்கமனு
இண்டாட்டன் கொண்டோ[illegible]கல் செம்மரபோ—கொண்டாட

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,

ஓச்சுக்ஓசசே மூன்றின் கேடேனும நன்றாககா
மாட்சியதுவிட்டிலுறு மாண்பு.

| | |
|---|---|
| ஓச்சு ஓசசே மூன்றின் | ஓசககஓச்சுத் தம்பலங் ஓயாக்ஓயாத தமபலம் மா ட்சிமாட்சித தமபலம் என்கிற இந்தவாக்கிய ததில் கண்ட மூன்று தீரத்தாராலும |
| இண்டஞ்செடித் தலையேம | இண்டஞ்செடியில்சிககிக்கொண்டசிரசைப்போ லகுடியிற் சிககுண்டவாகளாயிருககின்றேம |
| கேடேனும | (மாயாமாயத்தமபலம் என்றவாககியபபடி அவ ர்களால் வெறுர்கப்பட்டு நமக்குக்) கெடுதி நேரிடினும் |
| நன்று ,ஊக்கா | (அவர்களுக்கு) நன்மைசெய்யாத |
| விட்டில், உறு மாண்பு | (விளக்கில் விழுந்து மடியும்) விட்டில்படாத சிறுமையாகிய |
| மாட்சியது | தன்மையானது |
| கொண்டாட இல, மககள், மனு, அகடு | (நம்மில்) வளர்ந்தோஙக (மேற்கூறிய) மனைவி யும் மக்களும் (மறறக) குடுமபததாருமதன்) வயிறும் |
| திண்டாட்டம், கொண்டு,ஒதுக்கல் | திண்டாடுதல் கொள்ள (பிசினித்தனமாய்ப்) புதைததுவைக்குதல் |
| செம்மரபோ | நல்லொழுக்கமோ (நல்லொழுக்கமன்றும்) |

ஒச்சுக்ஓசசுத்தம்பலம் என்ப மனைவியும புருஷனும் நடா த்தும் ரகசிய முதலிய கூட்டுறவுகளை யுணர்ததுவதாம்.

ஓயாக்ஓயாத்தம்பலம் என்பது பிள்ளைகள்பிறந்து அதனால்வ ரும் இன்ப முதலியவைகளை யுணர்த்துவதாம.

மாட்சிமாட்சித்தம்பலம் என்பது உத்தியோகமுதலிய தொ ழிலால்வரும் இன்பமுதலியவைகளை யுணர்த்துவதாம.

மாயாமாயாத்தம்பலம் என்பது தான் கிழமாய்ப்போனதினா ல்யாவராலும் மரணத்தை விரும்புகை முதலியகெடுதியைஉணர்த்து வதாம்.

இண்டஞ்செடியில் அகப்பட்டுக்கொண்ட சிரசுக்கும அச்செ டிக்கும் யாதொரு அபாயம் நேரிடாவண்ணம் தந்திரமாய் விலகிக்

கொள்ளவேண்டிய தெவ்வாறே அவ்வாறே இலலறவாழ்க்கையிலிருந்து யாவரும் நழுவிவிடவேண்டியவர்களெனக் காட்ட "இண்டஞ்செடித்தலையேய்" எனவும் விட்டில் விளக்கினிடத்தில் விழுந்து மடியினும் வெளிச்சத்துக்கு ஒரு கெடுதியு மில்லாதிருக்கலாம் ஆனால் பிசினித்தனத்தினாலோ பின்னடியாருக்குங்கூட புதைத்த புதையலினால் யாதுபிரயோஜனமும் கிடையாதெனவுங்காட்ட "விட்டிலுறுமாண்பு" எனவுங் கூறினர்.

பிரத்தியட்ச ஏதுக்களைக்கொண்டு பிசினித்தனஞ் செய்தல் கூடாதென மறுத்துவிட்டமையால் வியாகாத அலங்காரம். (௬௪)

சாய்ப்பதாய்த் தன்வினையுந்தப்பாமே யெங்குவிடா
பேய்ப்பறப்பேனுண்ணரும்பைப்போக்கினுயிர்-மாய்ப்பானேன்
ஆர்க்கூழியோ வுனக்காரிடி னெனுன்பசியைத்
தீர்க்காபிற வூண்செயல்.

| | |
|---|---|
| உன்பசியை | (உலோபியே) உனதுபசியைப் |
| பிற, ஊண் செயல் | பிறர் உண்ணுஞ் செய்கையானது |
| தீர்க்கா | (ஒருபோதும்) தீர்க்கமாட்டாதாம் |
| உனக்கு ஆர்இடின் | (ஆதலால் நீமரித்தபின்பு) உனக்காக யார்வந்து சற்கிருத்தியங்களைச் செய்யினும் |
| ான் | யாதுபிரயோஜனம் |
| ன், வினையும் | தான்செய்த இருவினையும் |
| ாய்ப்பதாய் ப்பாமே, ங்கும்விடா | (ஒருவனைச் சார்ந்து கொண்டே இருக்கின்ற) நிழலைப்போல தவறாது எவ்விடத்திலும் விட்டு நீங்காதாம் (இவ்வாறிருக்கத்) |
| ேய், பறப்பு என | (தீயவழியில்) பேய்போல் பறந்து பொருள்தேடுவானேன் |
| நுண், அரும்பை | (ஒருகாசிலுள்ள) சிறிய அரும்பைத் |
| போக்கின், உயிர் மாய்ப்பானேன் | (தருமத்துக்காக) நஷ்டப்படுத்தினால் உயிர் விடுவானேன் |
| ஆர்க்கு, ஊழியோ | (நீங்கள் இவ்வாறாகப் பொருள்தேடிச் சேர்த்து வைப்பது) யார்யாருடைய நல்வினைப் பயனோ (நானறிகிலேன்) |

அவனவன்செய்த வினைப்பயன் அவனவனைவிட்டு நீங்காதெனக் காட்ட "சாய்ப்பதாய்" எனவும், ஒருவனுக்காக வேறொருவன் சற்கிருத்தியங்களைச் செய்யினும் செய்தவனுக்கேயன்றி அவனுக்கு ஒன்றுமில்லை என "உன்பசியைத் தீர்க்காபிறனூண்செயல்" எனவும் உவமித்துக்கூறினர்.

உனக்காக சற்கிருத்தியங்களையார் செய்யினும் பிரயோஜனமில்லையெனக் கூறினமையால் அசம்பவ அலங்காரம்.

நீங்கள்பொருள் தேடுவதற்குக்காரணமும் உங்களிடத்தில் பொருள்வந்து சேர்ந்திருப்பதும் யாருடைய நல்வினைப்பயனோ வென்றமையால் சந்தேக அலங்காரம். (௫௫)

---

## அழுக்காறாமை.

பலகோட்க திரும்பாத்தியன் முன்மாம்பழுதத்தை
உலாவண்டு முப்பழிஞ் சிற்காய்ப்பூளும்—பலவாறாய்
ஆர்ந்தார்க்கும் பார்த்தவனினண் செயலென் றெள்ளதினும்
நேர்ந்தார்க்கு மிக்களிக்கு நெஞ்சு.

| | |
|---|---|
| பல, கோள் கதிரும் | (சூரியனிலிருந்து முயற்சியின்றி ஒளியைபெற்றுக்கொண்ட) பலகிரகங்களினது ஒளியையும் |
| பாத்தியன், முன், மாம்பழுதத்தை | சொந்தக்காரன் (அனுபவிக்கும்) முன்னமேவண்டுமாமரத்தின் பழத்துககுள்ளே |
| உலாவண்டும் உப்பும் | சஞ்சரித்துஅனுபவிக்கின்ற வண்டையும் (அளிநிலத்தில் பிறந்தும் யாவருக்கும் சாரமாயிருக்கின்ற) உப்பையும் |
| அழிஞ்சில், காய், புள்ளுமபார்த்து, நேர்ந்தார்க்கும் | அழிஞ்சிற்காயில் (புழுவாய்உற்பத்தியாகித்தன்னுலேயே வலிமையடைந்த) குளவியாகிய பறவையையும்பார்த்துத் (தனது) பகைவர்களாயிருக்கினும் (அவர்கள்) |
| பல, ஆறாய் | (மேற்கூறியவைகளைப்போல) நானாவிதமாய்ச் |
| ஆர்ந்தார்க்கும் | (செல்வங்களைப்பெற்று) அனுப விக்கின்றவர்களுக்கும் |
| அவனின், அண் செயல், என்று எள்ளதினும் | அவ்விறைவினது மகிமைபொருந்திய அனுக்கிரகமென்று (தான் அச்செல்வர்களால்) நிந்திக்கப்பட்டகாலத்திலும் |
| நெஞ்சு | (நல்லோர்களினது) மனமானது |

மிக, களிக்கும — மிகவும் ஆனந்திக்கும்

புள் என்பது பூள என நெடித்தல்விகாரம்பெற்றது.

நல்வினைப்பயன் இறைவனது அனுக்கிரகத்தை ஏவிவிடின் அதனால்யாதொருமுயற்சியின்றி அயலாருக்குரியச் செல்வத்தைப்பெற்றுக்கொண்டவர்களும் மற்றொருவனுக்குச் சொந்தமானதைத் தாமும்போய் அனுபவிக்கின்றவர்களும் தான்பிரயோஜனமற்ற குடும்பத்தில் பிறந்திருக்கினும் ஆசான் முதலியோர் ஒத்தாசையினால கல்விப்பொருள் செல்வப்பொருள்களில் மேன்பட்டு உலகுக்கு உபகார கருத்தாவாயிருக்கின்றவர்களும் யாதொருசகாயமின்றித் தானே வலிமையடைந்து மேன்பட்டிருக்கின்றவர்களுமாகியபலரும் பலபலவாறாய்ச் செல்வ முதலியவற்றைப் பெற்று அனுபவிக்கின் நமக்கென்னவென்று மகிழவேண்டுமெனவுங் குறிப்பித்து பூமி முதலிய கிரகங்களையும் வண்டுமாம பழத்திலுள்ள வண்டையும உப்பையும அழிஞ்சிறகாயக் குளவியையும உதாரணமாகக் கூறினர். (௫௬)

அழுக்காறனாகி லவனாத்திகப் பானாத்தியினும
இழுக்காமிய னடுவா மீரழுனும்—முழுகக்குந்தீ
மணவையினீர்ப் பூவுவன்னியின் றேலந்நீரில
சணமொழியில் வீடாந்தமம்.

தீ, மணவையில — நெருப்புள்ள அடுப்பில்
நீர், பூவும் — நீர்புஷ்பமும்
அ, நீரில — அந்த (நீர்புஷ்பமுள்ள) தண்ணீரில
வன்னி, இன்றேல் — நெருப்பில்லாதபடியால் (பொறாமை யுள்ளவனிடத்தில் நடுவுநிலைமையும நடுவுநிலைமையுள்ளவனிடத்தில் பொறாமையும் இராது ஆதலால ஒருவனிடத்தில்)
அழுக்காறு அனுகில் அவன — பொறாமை அணுகில் அவன் உடனே (நடுவுநிலைமையற்றவனாகின்றமையால்)
ஆத்திகம், பானாத்தியினும — (அவனது) ஆஸ்திக பகுதியானது இறைவனில்லை இருக்கில் காணோமே யென்னும நாஸ்திகக்கொள்கையிலும
இழுக்கு ஆம — குற்றமுடையதாகும (பொறாமை யுள்ளவர்களிலும் இறைவன் இல்லை என்கின்றவர்கள் மேலோ எனக்கொள்கில்)

| | |
|---|---|
| இயல் நடு ஆம் | (பிரபஞ்சகாரியங்களை ஒவ்வொன்றினது தன்மைகளை அறியும்) இயற்கையிலிருந்து உண்டான நடு நிலைமையே (அவ்வாறு நாம் உரைப்பதற்கு) காரணமாம் |
| சணம் | (ஆதலால்) சற்று நேரமாவது |
| ஒளி இல் வீடு ஆம தமம் | விளக்கு இல்லாதவீட்டைப்போல (அன்பென்னும நெய்யை பொறுமையென்னும பூனை நக்கிவிடவே நடுவு நிலைமையென்னும தீபம் அணைந்து) இருட்டென்னும் அஞ்ஞானத்திலுலை |
| ஈர் மூனும் | உட்பகை ஆறும் வநது கூடிக்கொண்டு |
| முழுககும | நரகபாதாளத்தில் அமிழத்திவிடும் |

பொறுமை யுள்ளவனிடத்தில் நடுவுநிலைமையும் நடுவுநிலைமை யுள்ளவனிடததில் பொறுமையும் இன்று எனத திருஷ்டாநதத்தைக கொண்டு குறிப்பிததமையால் அர்த்தாந்தர நியாச அலங்காரம்.

ஆஸ்திகன் நடுவுநிலைமையை இழந்து விடுதற்கும் நாஸ்திகனுக்கு நடுவு நிலைமை கிடைத்ததற்குங் காரணங் கூறினமையால் ஏது அலங்காரம்.

“சணமொழியில் வீடாந்தமம்” என ஏகதேசத்தோடு அதிசயப்பட உருபகஞ் செய்தமையால் உருபகஅதிசயஉத்திஅலங்காரம.

பிறச்சகுன மூககறையாய்ப் பேறறிமைகாண்டேன் றலையும்
பெறுப்பதென் றீசசீற்றம் பிழைபிணியான்—கறிசசலொடு
மாதிரதனத விலலாக்கு மணலைக கயிறுக்கும்
மாதிறத்து மீடேறுன் மறறு.

| | |
|---|---|
| கறிச்சலொடு பிறச்சகுணம் | (பிறரது வாழ்க்கை கண்டு மனம்)தழுமாமையுடன் அயலானுக்கு அவசகுனம நேரிடுவறகாக |
| மூக்கறையாய் பெறறிமை | (தன்) மூக்கை அறுத்துக்கொள்ளுகின்றவனைபோல (நிஷ்டூரதன்மையைப்) |
| காண்டு | பொருந்தித |
| ஏன்றலையும மாதிரதனத | (தன்வாழவுக்கு மாத்திரம்) முயற்சியெடுத்து அலைப்வறுகி வானததை |
| வில்லாக்கும | வில்லாகச்செய்கின்ற |

| | |
|---|---|
| மணலை | மணலைக் |
| கயிறாக்கும் | கயிறாகத்திரிகின்ற |
| மா, திறத்தும் | பெரிய வலிமைக்குச் சரியானசாமர்த்தியங்களை உடைத்தாயிருக்கினும் |
| பெறுப்பது என | இவற்றிற்காக பெற்றுக்கொள்ளும பலன் யா தெனில் |
| தீ, சீற்றம் | (இறைவனது) கொடிய கோபமேயாம் |
| ஈடேறான் | (இக்கோபத்தினால்) ஈடேற்றம் பெறாதவனாகி |
| பிழை | நீங்காத குற்றத்தையும் |
| பிணியான் | துன்பத்தையும் உடையவனாவன் |

மற்று—அசைநிலை.

அயலானுக்கு அவசகுனம் நேரிடும் வண்ணம் தன்மூக்கை யறுத்துக்கொண்டவன்போல் என்றமையால் சகோத்தியலங்காரம்.

வானத்தை வில்லாகவும் மணலைக்கயிறாகவும் செய்ததுபோல என்றமையால் உலக உததியோடு கூடிய உலுத்த உவம அலங்காரம.

உலோபி தன்வலிமையால் செய்யும் முயற்சிக்குப்பதில் தெய வகோபங கிடைக்கும என்றமையால் பரிவர்த்தந அலஙகாரம். (ருஅ)

## கொலைமறுத்தல்.

எவ்வருண மேல் கீழென்றென்னீரி மாலச்சேய்
ஒவ்வுதிரச் சிநதியுரு பிணத்தின்—எவ்வுதலைக
கண்டவுட னுட்டீர் கலக்கிலென் கட்டுமுனை.
அண்டு வழியே யுவணமாங்கு

| | |
|---|---|
| இமாலசசேய் | இமாலயமென்னு மலையை அஙகமாகஉடையஇங் தியாஎன்னுந தாயின்பிளளைகளே |
| மேல் | (நாம) மேல்வருணத்தவர்கள் |
| எவ்வருணம் | (நீஙகள்) எவ்வருணத்தைச சேர்நதவாகள் |
| கீழ என்று | எனவிசாரித்துக் கீழ்சாதி (ஆதலால்) |
| என்னீர் | (தொட்டால் திட்டு என்று கருதாதிருப்பீர்க ளாக |

| | |
|---|---|
| ஒவ்வு, உதிர | (ஆனல்) தனைப்பயப்பாமலாதத மனுமக்களினது இரத்தத்தை |
| சிந்தி | (இரக்கமின்றிச்) சிந்துநின்றவனாகிய |
| உரு | அவயவஞ் சரியாயிருக்கின்ற |
| பிணத்தின் | உயிர்ப்பிணம்(நடமாடித்திரிகின்றமையால் அத)னுடைய |
| தலை, எவ்வு | தலைவெளிப் படுந் தோற்றத்தைக் |
| கண்டவுடன் | (கண்) கண்டவுடன் |
| ஆட்டா | உங்கள் உட்பொறிகள் நடுங்குவதுந்தவிர வெளி அவயவங்களையும் கழுவுவீர்களாக |
| கலக்கில் என் | (அக்கொலைபாதகர்களோடெவனுவது) அடுத்திருந்தால் (உங்களுக்கு அதனல்) என்ன |
| கட்டு முடை | நீங்காதமுடை நாற்றத்தையுடைய அழிப்பிணத்தின் |
| அண்டு, வழியே | வசப்பட்டல்லவா |
| உவணம் | கழுகின் கூட்டங்க ளிருக்கின்றன |

ஆங்கு—அசைநிலை.

ஒருவன் தீயொழுக்காய்த் திரிந்து அலைவனாயின் அவனை உடனே சாதிப்பிரஷ்டஞ் செய்து கீழ்மக்களாக்கிவிடும் ஆசாரம் இந்துதேசத்தவர்களிடத்தில் மாத்திரமுள்ளதா யிருந்ததெனக்காட்ட "இமாலச்சேய்" எனவிளித்தும் எவ்வருணத்தவனாயிருக்கினும் அவ்வாறு சாதிப்பிரஷ்டஞ்செய்து கீழ்மகனாக்கவேண்டியது அவசியமெனக்காட்ட "எவ்வுதலைகண்டவுடனாட்டா" எனவும் அபிமான முதலியவைகள் ஆத்துமாவுக்கு உரியதாகையா லிவற்றை இழந்து கொலைத்தொழில் புரிகின்ற இவனுக்கு ஆன்மாவிருந்தும் இல்லையெனக்காட்ட "உறுப்பிணத்தின்" எனவும் இவனோடு சேர்கின்றவர்களும் கீழ்மக்கள் வகுப்பைச் சேரும்படி செய்யவேண்டியது அவசியமெனக்காட்ட "அண்டுவழியே உவணமாங்கு" எனவுங் கூறினர். (௧௬)

மேல்கீழோ டொன்றலுக்கு மேதுவா மேதினிக்குக்
காலனையக் கொண்டலைக் காயுமனம—கோலவனைக்
கோறலெனே வுள்ளனுமேற் கோறிலையே நாறகவொளி
ஏறவிட்டோமோ கருத்தோவென்று.

| | |
|---|---|
| மேதினிக்கு | உலகத்தில் |
| மேல், கீழோர் | மேல்சாதியார் கீழ்சாதியார் |
| என்றலுக்கும் | என்றுபிரிவினை உண்டாகுதலுக்கும் |
| ஏது ஆம் கால் | (கொலைபாதகராகிய இவர்களும்) காரணமாம் (இவ்வாறு கீழ்சாதியாகுதலையிவர்கள் கவனியாவிடினும்) யமனைப் |
| அறனைய், கொண்டு, உடலை | புண்ணிய புருஷனைச் செய்து (அயலானது ஆன்மாவையல்ல) உடலைமட்டும் |
| காயும் | கொல்லும் |
| முன்னம் | முன்னடியே |
| கோலவனை | (தனது) ஆன்மாவாகியதன்னைப் |
| கோறல் | புத்தியீனமாய்க்கொல்லுதல் |
| என்னே | யாதுகாரணம் பற்றியோ |
| உள் அணு | இவ்வாறான மதியீனத்துக்குக் காரணமான(அவனது (மனமாகிய அணுரூபமானவஸ்துவை |
| மேல் | அறிவிற் பெரியோர்கள் |
| கோறிலையே | கிருபாநோக்கஞ் செய்து சீர்படுத்தாத காரணம் தெரியவில்லையே |
| ஒழி நூற்க, ஏற | (அல்லது விளக்குப்பூச்சிகள்) தீபம் அணைந்துவிடும்படி (அதில் மடியாமல்) |
| விடோமோ | செய்யமுடியுமோ |
| என்று | என்று |
| கருத்தோ | கருத்துக்கொண்டோ (கொலைபாதகனைப்பற்றிச் சற்றுவது கவனிக்கின்றிலர்) |

யமன்ஒருவனதுஉடலையும்உயிரையும்வெவ்வேறாகப்பிரித்தலுக்கு இக்கொலைபாதகனேகாரணனாகையால்"காலறனைக்கொண்டு"எனவும் ஒருவேளையிக்கொலைபாதகன் கைக்குநீங்கலாகிவிடினும்இவன் கொலை செய்ய எத்தனித்த குற்றத்திற்கு இக்கொலைபாதகனது ஆத்துமா நரகாக்கினிக்குத் தப்பாது எனக்காட்ட "கோலவனைக் கோறல்" எனவுங் கூறினர்.

கொலைசெய்யுந்தொழிலினால் யாதொரு நன்மையுமின்றி ஆன்மாவையும் பறிகொடுப்பது யாதுகாரணம் பற்றியோஎனவும் இவனைப்பற்றிப் பெரியோர்களுங் கவனிக்காத காரணம்யாதோ எனவுங் கூறி

ணமையால் விஷாதன அலங்காரத்தோடு கூடியசந்தேக அலங்காரம (௬0)

பெற்றோ ராசாசான் பெண்டுரோகங் கொலைமேல்
ஒற்றுமையர் நீங்கற் குறுவதைமேல்—கற்பூற
சிக்காக்கித் தூற்றூறுஞ் செய்ந்நன்றாற்றூறும்
மிக்கொலைக்கு மெக்கொலைக்கு மேல்.

| | |
|---|---|
| கொலை<br>பெற்றோர்<br>ஆரசு, ஆசான் | (மனுபுத்திரரைக்) கொலைசெய்தலிலும் மாதா பிதாவுக்குச்செய்யும துரோகமும் ராஜதுரோகமும் ஆசான் துரோகமும் |
| பெண்துரோகம<br>மேல் | பெண்ணுக்குச்செய்யும் துரோகமும் மேலானதாம் |
| கற்பூற | (இவைகளிலும் தங்கள்) கற்பைச்சிதைத்து (இஷ்டப்படி) நடக்க |
| ஒற்றுமையர்<br>நீங்கல்கு | ஸ்திரிபுமானிருவரில் ஒருவர்நீங்கும்படி (தானுவது அல்லது அன்னியரைக்கொண்டாவது) |
| உறு, வதை | செய்கின்ற கொலைபாதகம் |
| மேல், மிக்கொலைக்கும், எக்கொலைக்கும் | மேலானதாம் (இதைவிட) மேலான கொலையிலும் (வேறு) எந்தவகையான கொலையிலும் |
| சிக்காக்கி | நன்மைகளைத் தீமைகளாகமாற்றி |
| தூற்றூறும்<br>செய், நன்று<br>ஆற்று | (ஒருவனை) அவதூறு பண்ணிக்கொண்டு திரிகலாகிய கொலையும (ஒருவர்) செய்த நன்றியைமறந்து விடுதலாகிய |
| ஊறும் | கொலையும |
| மேல் | மேலானதாம் |

இக்கவியில் அதிலும் இதுசாரமுடையது எனக்கூறினமையால் சார அலங்காரம். (௬௧)

## பிறமனை நயவாமை.

கட்பருகு பாத்திரமாய்க் காண்டலே காமுகரின்
வெட்கைக் கிடம்பெறு மான்மேல் வீக்கும்—கட்பருகி
தற்சுகம்போ மிவற்குத் தனும்போ மென்றச்சமுமாம
நச்சுமீன் றூண்டிலூறு நாணு.

| | |
|---|---|
| மேல வீககும | கறபுண்டையஸ்திரி (ஒருவனல் தனதுகற்புககுஇ டை யூறுண்டாகுமபடி சமபவிககிற தாயிரு நதால உடனே) உயிரை விடடுவிடுவள |
| காமுகரின் | (ஆதலால்) காமுகாகள் து |
| வெடகைககு | (பிறமனேயாளைவிரும்புமு) இசசைககு |
| கடபருகு யாதகிரம | (வெறியாகள யாவருமு வாய்வைததுக்)களளைகுடிததலுககுச சாதனமான குடுவையைப் |
| ஆய காணடாளே | போல (பலருககும) இடஙகொடுககும சுபாவமுளள ஸதிரியே |
| இடமபெறும | இடமாயிருபபாள (ஆனல) |
| கடபருகி தன், சுகம போம் | கட குடிககிறவனுககு (எசசிலோடு கலககின்ற தளையிலுலும வெறியாடலினலு முண்டாகிய நிநதை முதலியவறருலும) தன் னபிமானமுதலிய தறசுகமட்டும போம |
| இவாககு தனும போம | காமுகராகிய இவாகளுக்கோ (மேறகூறிய தறசுகம்போவதுநதவிர அசசுகததுககுச்சாதனமான) உடலும(நினையாதவேளை)சேதப்படும் |
| என்று அசச மும, ஆம | என்று நடுநடுஙகுகினற பயமு முண்டாகும, (இநத பயததோடுகூடிய பிறமனேவியினின்பமானது) |
| நசசு மீன் | (தீஙகைததராத இரைத்தனக்கிருந்தும) தூண்டிலின இரையை விருமபுகின்றமீனனது(அத) |
| தூணடிலுறு | தூண்டி விலகபபடடழியும |
| நாணு | வெடகமபோலாம. |

ஆல்—அசைநிலே.

சறறேனும கறபுடைமையைப பொருந்திய சாதிபபிறபபையுடையவள் கறபுககுப பஙகம வருவதா யிருககின் உயிரைக்கொடுதது விடுவாளே யன்றி உயிருளளமட்டும அயலானுக்குத தன்தேகத்தை ஒப்புககொடாளென "மேலவீககும" எனவும் கறபுநிலேதவறும இயறகை யுளளாளே புருஷனுககு மாததிரமலல தன்னைவிரும்பிய அனைவருக்கும மோசம் வருவிபபாள் ஆதலால் தனக்கு மனைவி இருந்தும அவனுகுத் துரோகஞ் செயது இவளை நம்பி மோசம போகல் புததி யீனமென "நசசுமீன் தூண்டிலுறுநாணு" எனவும் உவமித்துங் கூறினா, (கூஉ)

நாய்முறையிற் கீழ்க்கொண்டார் நால்வர்க்கு மேலாகப்
பாயொன்றிற் றாங்கியெனல் பாடியோ—பேய்மையோர்
தன்மனைக்கும் பற்றாதார் தாரமயல் விருப்பேன்
புன்புதையல் காண்போ னின்போக்கு.

| | |
|---|---|
| நாய் முறையில் | (கற்பொழுக்கம் தவறிய பெண்புணர்ச்சி ஒழுங்கில்) நாயின் கிரமத்திலும் |
| கீழ்க்கொண்டார் | கீழ்ப்பட்டவளாகி |
| பாயொன்றில் | படுத்த ஓரோபாயிலேயே |
| நால்வர்க்கும் மேலாக | நாலுபெயருக்கும்மேலாகப் பலருக்கும் |
| தாங்கி | இடங்கொடுப்பாள் |
| எனல் | என்ற உலகப்பிரசித்தம்— |
| பாடியோ தன்மனைக்கும் பற்றாதார் | பொய்யோ (அதுநிசமல்லவா இந்தபிரத்தியட்சப்பிரமாணப்படி) தன்து மனைவிக்கும்,(புணர்ச்சித் தொழிலுக்குத) தாங்காதவாகளாகிய |
| பேய்மையோர் | மதிகெட்ட காமுகர்களுக்கு |
| அயல்தாரம் | பிறமனை நயததலாகிய |
| விருப்பு, ஏன் | ஆசை யென்னத்திற்கு(இவ்வாறு ஆசைப்படுதலானது) |
| புன் புதையல் | (மாந்திரிகன் குழியைத் தோண்டப்பண்ணி அக்குழியில் காண்பித்த) கண்காட்டிவித்தைப் புதையலை (நிசப்புதயலென நினைத்துஅதனைத) |
| காண்போனின் | (தன்னதாக்க அம்மாந்திரிகனுக்கு) உள்ளதெல்லாம் கொடுத்து அலைகின்றவனது |
| போக்கு | புத்தியீனம்போலவாம் |

தனக்குமாத்திரமல்ல தன்னைப்போல் அநேகருக்கு இடங்கொடுக்கு மியல்பினை உடையாளாதலால் அவளிடத்தில் யாதொரு இன்பமுங் கிடையாதிருந்தும் அவளை விரும்புதலாகிய மதிகேடும் தன்மனைவியைப் பூரணப்படுத்தும் வலிமையற்றஇவர்கள் அயல்மனையைவிரும்புதல் தன்மனைவியை இழந்துபோகத் தான் எனவும் நிரூபிக்க "புன்புதையல்காண்போ னின்போக்கு" எனவுங் கண்காட்டிவித்தைப்புதையலாகியபொய்ப்புதையலைதிருஷ்டாந்தப்படுத்தினர்(கூஉ)

பாட்டன் சொங்கைக் கொண்டான் பட்டகடன் வட்டியுடன்
மீட்டீயான் றுச் சாரிவேண்ட றிக்கை—தீட்டிறறு
உள்ளதய றீண்டுகையை யுன்னியுன்றன் மாமபறையும்
பிள்ளபிளா யெஙகென் றென்பேர்.

| | |
|---|---|
| துச்சாரி | பிறதாரததை விரும்புகின்ற காமுகனுகிய நியாயாதிபதியே |
| பாட்டன் சொம் | (பலாபலக்கர்த்தா வென்கிற இவன் தனது) பிதிராசசிதமான சொத்தை |
| கைககொண்டான் | முழுவதுந் தன்னதாககிகொண்டான் (ஆனல் அவனது தந்தைமுதலிய முன்னோகள்) |
| பட்டகடன் | (என்னிடததில்) கொண்டகடனை |
| வட்டியுடன் | இலாபததுடன் |
| மீட்டு | மறுபடியும (எனக்கு) |
| ஈயான் | கொடுகின்றுனிலன் (ஆதலால்) |
| அறிக்கை | (இநத விவரஙகண்ட எனது) விண்ணப்பபபத்திரிகையை |
| வேண்டு தீட்டிறறு | விருப்பக்துடன் அங்கிகாரஞ் செய்யக்கடவை (நீ அவவாறு அஙகீகாரஞ்செய்து எனக்கு வரவேண்டியகடனை மேறகூறிய பலாபலக கருத்தாவே தரவேண்டுமென) தீாப்பு எழுதியாயிறறு |
| உள்ளது | (இவ்வாறுநீஎழுதினதீாப்பு)நியாயந்தான்(ஆனல்) |
| அயல் தீண்டுகையை எஙகு உன்னி பிளளா | (இநத நியாயப்படி) பிறனது மனைவியைததொட்டு விபசாரஞ் செய்தலாகிய [illegible]டனுககுப் (பதி[illegible]க நமது பின்னடியாரும உததிரவாதஞ்செயயநேரிடுமே இனிமேல் நமககுமரியாதை) உண்டாஎனநினைத்து (எனது)பெண் மக்களும மருமக்களுமாகிய பிளளைகளே |
| பிளளாய் என்போ என்று | (அப்பிள்ளைகளின்) பிள்ளைகளாகிய என்பேத்திமாாகளே (எனதுவிபசாரச் செயகையென்னும் தீவினைபபயனல்) எனக்கு (உஙகளால்) அவகீாத்தி நேரிடும் என்று |
| உன், தன் | உன்னுடைய |
| மாா, பறையும | மாாபில அடிததுக்கொளளககடவை |

முற்பிதாவாகிய நான் பட்டிருக்கும் விபசாரஞ் செய்தலாகிய கடனை எனது பிற்சந்ததியாராகிய பெண்பிரஜைகள் தீர்த்துக் கழிக்க வேண்டிய அபகீர்த்தி எனக்கு நேரிடுமே என்று மாயில் அறைந்து கொள் என்றமையால் துல்லிய யோகித அலங்காரம். (சுச)

---

## உட்பகைமறுத்தல்.

மூளாகு முலோபமுடன் மூர்க்காதி யக்கினியும
மள்ளலாய் மோதுதலாவன் மதமும்—உள்ளரிதாம
மாய்கையாம் பின்னு மலமூங்கில் வாழியரி
வாய்தனக்கு நீயேவழி.

| | |
|---|---|
| உலோபம் | பிசினித்தனம் |
| ஆகும்,முள்,உடன் | என்னும் முள்ளுடனே |
| மூர்க்காதி | மூர்க்க முதலியவைகளாகிய |
| அக்கினியும் | நெருப்பையும் |
| மள்ளலாய் | வலிமையுள்ளதாய்க் |
| வன், மதமும் | கொடியசெருக்கு என்னும் செபகையாகிய |
| மோதுதலாம் | உரசுதலையும் |
| உள், அரிதாம் | நினைத்தலுக்கு அடங்காத |
| மாயகையாம் | விபரீதஞ் சந்தேக முதலிய மாயகை யென்னும் |
| பின்னு | பின்னுதலையுமுடைய |
| மலம் | உட்பகையென்னும் (மலை) |
| மூங்கில் | மூங்கிலே |
| அரி,வாய, தனக்கு | (அந்த) மூர்க்காதியாகிய அக்னிவாய்ப்பட்டு (நாம்) |
| நீயேவழி | (அழிதலுக்கு ஏதுவாக) நீயே காரணமாயருக் கின்றை |
| வாழி | (ஆதலால் நீ) வாழ்ந்திருக்கக்கடவை |

மனம உதவாழல் போகுதலுங் தவிர இவ்வுலகத்திலுங்கூட ஆன்மாவுக்குக் கெடுதி நேரிடும் வண்ணம் மூர்க்க முதலிய கோப முண்டாகுதலுக்கு உட்பகையே காரணமாதலால் அவற்றையும் அவ

ற்றையுடைய மனதையும் முன்னிலையாகக்கொண்டு "மல்லூங்கில் அரி வாய் தனக்கு நீயேவழி" என்றார்.

இங்கு விரோதச்செயல்களுக்கு உருபகஞ்செய்தனமயால் அபேத உருபக அலங்காரம். (கூரு)

வெட்டவாவச் சுவத்தை வேதனச்சக்கோ டரியில்
கட்டசுகங் காணுகலக சுவை—தட்டாதாம்
இளைத்த கொம்பைமாட்டி யிரண்டோதி யாந்துணைக்கை
விழவலக்கை கொள்ளாவிடின்.

| | |
|---|---|
| வேதன், அசச | இறைவபயம் என்னும் |
| கோடரியில் | கோடரியினால் |
| கட்டம், சுகம் | (துன்ப இன்பங்களில்) வெறுப்பும் விருப்பும் |
| கலகம், சுவை | (சத்துருமித்துருக்களில்) பேதமும அபேதமும் |
| காணு | (ஆகியகரடுமுரடுகள்) சற்றுவது |
| தட்டாது ஆம் | தட்டாமல் சமைந்திருக்கின்ற |
| இளைத்த | பண்படுத்தப் பட்டதாகிய |
| கொம்பை | மனமென்னும் கொம்பை |
| மாட்டி | இணைத்து |
| இரண்டு | இரண்டு அறிவாகிய |
| ஓதியாம் | (ஆசான்) அறிவு என்னும் |
| துணைக்கை | இடதுகையினாலும் |
| வலக்கை | தன்னறிவு என்னும் வலதுகையினாலும் |
| விழ | கீழேவிழும்படி |
| கொள்ளாவிடின் | ஓங்கி அககோடரியைக்கொண்டுவெட்டாவிடின் |
| அசசு வதனை | (உட்பகைமுதலியவற்றிற்குக்காரணமான) அஞ்ஞானமென்னும அச்சுவவிருக்ஷத்தை |
| வெட்டவா | வெட்டித்தள்ள முடியுமா, ஒருபோதும்முடியாதாம் |

கடைசியாக அச்சுவத்தமென்னும் விருக்ஷவனை அஞ்ஞான முதலியவற்றிற்கு உருபகஞ்செய்து இந்தஅஞ்ஞானத்தைத் தொலைத்தலுக்கு உரிய ஏதுவையும உருபகஞ் செய்தமையால் அபேதஉருபக அலங்காரத்தோடு கூடியஏது அலங்காரம். (கூசு)

உட்பகை யாவுன்வாழ்வுக் குலகுநூறாண்டதினும்
சொப்பன சுழுத்தியு மேதுன்பந்தோ—அப்பப்ப
அம்பரத்திற் றேம்பியுனை யண்டியடைந் தேன்கரையில்
கொம்படியாப் பாறிருந்தென் கூறு.

| | |
|---|---|
| உன், வாழ்வுக்கு உட்பகையா | (மண்மேனியாதவேளைநான் இறைவனிடத்தில் போகவும் நீஎன்னைவிட்டு பிரியவுமநேரிடுகின்ற) உனது அறபவாழ்வுக்கு உட்பகையும் வேண்டுமா |
| உலகு நூறு ஆண்டு அந்தோ | (தீர்க்காயுளா யிருப்போமென உனக்கு நிச்சயமிருக்கினும் இந்த) உலகம (நமக்கு) நூறு வருஷந்தானேஇருக்கும ஐயோ |
| அதினும | அந்த நூறுவருஷததிலுமுள்ள |
| சொப்பனம் சுழுத்தியும் துனபம் | (விழிப்பும) சொப்பனமும் நித்திரையும் துன்பமாகவே முடியும (நடபடி இவ்வாறிருப்பதால் |
| அப்பப | (மனமாகியஎன்) அப்பனே (யென்) அப்பனே |
| அம்பரத்தில் | இப்பிரபஞ்சசாகரததில்(நிலையற்று) |
| தேம்பி | (அமிழ்ந்தி அமிழ்ந்தி) தியக்கமுற்று |
| யுனை, அண்டி | உன்னை ஆவிப்பிடித்து |
| அடைந்தேன் | ஆதரவாகக் கொண்டிருக்கின்றேன் |
| கரையில் கொமபடியா | (ஆகலால் இபபிரபஞ்சசாகரததிலிருந்து) (தானேமாலுமியு மரககலமுமாய்)முதன்மைபபட்டிருந்து கரையிற கொண்டு போகாத |
| பாறு | மரக்கலமாகிய நீ |
| இருநதென் | (எனககு) இருப்பதினல் யாதுபிரயோஜனம் |
| கூறு | நீயே யோஜிததுப்பார் |

ஆன்மாதன் மனதைப்பார்த்து நீயும்நானும் மிஞ்சினல் நூறு வருஷந்தான் கூடியிருப்போம் அப்பால நீயும் இவ்வுலகமும் எனககு உரிததில்லை என "உன்வாழ்வுக் குலகுநூறாண்டு" எனவும இவவண்ணம் நூறுவருஷம் கிடைத்தாலும் இவ்வருஷஙகளில இவ்வுலக வாழ்வும இன்பமாய் முடியினும அவ்வின்பம் யாவும துன்பமாகவே முடியுமென"சொப்பனசுழுத்தியு மேதுன்பம" எனவு மஆன்மாதனகது அம்மனதின் ஒததாசையின்றி இபபிரபஞ்ச மாயகையிலிருந்துத

ப்பிப்பிழைக்க முடியாதெனக்கண்டு அம்மனைதைப்பார்த்து "அப்ப ப்ப" எனஇரந்து கெஞ்சியும் கூறினர். (சுஎ)

---

## அரசியலொழுக்கம்.

காலுமா லுந்துதியிற் காண்டிலியாய்க் காணுமென்
மேலுமுறைக் கேங்கேக்க மேதையாய்—நாணுநன்
றின்பீவன் பாமரானா யேற்றவனும பொற்குடுக்கை
இன்றோவென் கூற்றையெதிர்த்து.

| | |
|---|---|
| பொன்குடுக்கை இன்றோ, என் | (பிச்சை கேட்கின்ற ஒருவனது பிச்சையெடுக்குமபாத்திரத்தைப்பார்த்துஇவனுக்குப்)பொன்னாற்செய்த பிச்சாபாத்திரம் இல்லையோ எனச் (சேரன்என்னுமரசன் சொன்னதாகஅவனது செழிப்பைப் பற்றியுண்டான) |
| கூற்றை | உலகவதந்தியை |
| எதிர்த்து துதியில, காலும் | விரோதித்து (உலகநடபடிகள் யாவற்றிலும்பழகி வழிபடுகிடவுளை) வணங்காமல் (சூரியன்) உதயமாகுதலையும |
| மாலும், காண்டிலியாய் | (அச் சூரியன்) மயங்கும் நேரமாகிய முந்திக் கறுக்கலையும காணுதவனுகி |
| மென் மேலும் முறைக்கு காணு ஏங்கு | (குடிகள்) அடிககடிவந்து முறைப்பாடு செய்யுந் தொந்தரைகளுக்காக (அவர்களைவெறுத்துத்) தள்ளிவிடாதபடி (நாமிருந்தும குடிகளுக்கு குறைவுதீரவில்லையே யென்று) நடுங்குகின்ற |
| ஏக்கம் மேதையாய் நாணு | (இன்னும் குடிகளுக்கு நன்மைசெய்யவேண்டும் வேண்டுமென்கிற) பேராசையைப்பொருந்தியதன்மையுடையவனாய்ப் பலவகைப்பட்ட |
| நன்று | நன்மைகளையும் |
| இன்பு | இன்பங்களையும் |
| ஈவன் | பிரஜைகளுக்குத் தருகின்றவனுகி |
| பாமரானா ஏற்றவனும் | (நற்குணம் நற்செய்கைகளைப் பொருந்திய) மந்திரி முதலிய பதினெண்மரையும் உடையானே நல்ல அரசனும், |

பதினெண்மாகளாவன - பிரதானிகா, புரோகிதா, சேனுபதியா, தூதர், சாரணா, மந்திரி, கருமாதிகா, சுற்றம, கடைககாபபாளா, நகரமாக்கள, படைக்தலைவா, இவுளிமறவா, யானைவீரா, நட்பாளா, அநதணாளர், மடைதொழிலர் மருததுவா, நிமிததிகபபுலவர், ஆகிய இவர்களே பதினெண்மாகளாம்.

சேரனென்னும அரசன் உலக நடபடியில் தேறினவனுபிருக்கப்பிசசையெடுககும ஒருவனைப் பாாதது இவனுக்குப பொன்னுற செயத பாததிரம இனமேே வென அவன் சொனனதாயச சொல்லும வதந்தி பொய எனவும அவவரசன் நீதியுளளவனெனக காண்பிகக வும் "கூறறை" எனவுங கூறினா.

அரசனுககிருககவேணடிய குணங்களிததன்மையதெனக்கூறினமையால சுபாவ உததி அலங்காரம். (சூஅ)

மோக்கமிலிஙகீது லகேமூவாறும பேணிபர
சாக்கியொடு தறபவனே சததரசு—போய்ககாலால்
ஆளியினைறான் டினடுபவோ வன்னவண்மேல்
கோழிமுடி யென்றான்குறித்து.

| | |
|---|---|
| இஙகு மோககம் இல | இவவுலகம மோக்ஷமா மோக்ஷமிலலையாம |
| ஈது உலகமே | இதுபிரபஞ்சமே (ஆகலால் அநேகதாறுமாறுகளுணடெனககருதி) |
| பர சாககி ஓடு | உள்ளபடி கண்டறிநத களஙகமற்ற சாட்சியைகைககொளளுதலுடனே |
| மூவாறும பேணி | பிரதானிகா முதலிய பதினெண் மரையும்காப்பாறறித (தமிழையும்அவறறின் கிளையாகிய கொடுந்தமிழ பன்னிரண்டையும பாதுகாப்பதோடு இததேசத்துக்குரிய) பதினெண் பாஷைகளையும பாதுகாதது பதினெண்மதபேதங்களினுலுங் தொகதரையுணடாகாது குடிகளை யிரட்சித்துப்பதினெட்டு நற்குணஙகளையுஙகையாண்டு |

| | |
|---|---|
| ாலால் ஆளி ஒன்று ஆண்டி ன், போய் | (கடனை வாங்கிக்கொண்டு இல்லையென்றவனைப் பார்த்துக்) காலால் நடந்துபோகின்றவன் இன்னேரம் அவ்விடத்துக்குப்போய் |
| துடுபவோ | (அவனும்சேவகனும்) சேர்ந்திருப்பார்களோ |
| துன்ன வள், மேல் | (எனவும் பிரமாணஞ் செய்யப்போகின்ற வர்களில்) அவள்தலையில் |
| ோழி முடியே ோல் நறித்து | கோழியினது (முடிஎனவும் தந்திரமாய்ப்பேசி நியாயத்தைக்கண்டு பிடித்த) தந்திரயுக்திகள் போன்ற வைகளை கையாடி (அவற்றுறகிடைத்த) |
| தற்ப வனே | தற்பவசாட்சிகளைக் கைக்கொண்டும் நியாயங்களைக்கண்டுபிடிப்பவனே |
| சத்தரசு | னீடூழிகாலம் வாழத்தக்க நல்ல அரசனும் |

இத்தன்மையதான இராஜாங்கம் புத்திர பாரம் பரையாக நிலைத்திருக்குமெனவும் இவ்வரசனும் நீடூழிகாலம் மோக்ஷத்தில்வாழ்ந்திருப்பன் எனவும் கருத்துடன் "சத்தரசு" எனவும் "மூவாறும் பணி" என நான்கு காரியங்களுக்குச் சிலேடையாகவுங் கூறினர்.

பிரதானிகர் முதலிய பதினெண்மரைப் பற்றிமேலேச் செய்யுளில் பாமரர்என்பதின் கீழ்க்கண்டு கொள்க.

கொடுந்தமிழ் பன்னிரண்டாவன தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேணு, சீதம், மலாடு, பூழி, பன்றி, அருவாவடதலை, அருவாதென் தலை, புனல்நாடு ஆகிய இப்பனிரண்டு நாடுகளிலும் வழங்கிய மொழிகளாம்.

தமிழாகிய செந்தமிழ், தென்பாண்டிநாட்டுக்குவடக்கும புனல்நாடாகிய சோழநாட்டுக்குத் தெற்கும் பொதிய மலைக்குக் கிழக்குமுள்ள மங்களபாண்டியநாட்டில் வழங்கிய மொழிகளாம்.

இதிகாசங்களின் சித்தாந்தப்படி மேற்கூறியதமிழ்மொழி ஆதியில்கங்காநதியின் அடித்துவாரமாகிய இமயமலையை அடுத்து இருந்ததாயும் அப்பால் வரவரத் தமிழர்கள் தெற்கு நோக்கியே இத்தேசமுழுமையும் இடம்பிரிந்து பிரிந்து வந்தமையால் அவ்வவ்விடங்களி லுற்பத்தியாகிய இந்தத்தமிழோடுகலந்த குசலம், கலிங்கம, வங்கம், கஙகம, மகதம், சீனம், கடாரம், கவுடம், சோணகம், சாவகம்,

துழுவம், குடகம், கன்னடம், கொங்கணம், தெலுங்கம், சிஙகளம, கொல்லம், ஆகிய பதினேழு பாஷை மொழிகளுடன் சம்ஸ்கிருத மொழியுஞ் சேர்ந்த பதினெண்பாஷை மொழிகளும் தென்மொழியாகிய தமிழை அடுத்துவந்த மொழிகளாம்.

பதினெண்மதங்களாவன லோகாயிதம், ஆருகதம், வைபாஷிகம், சௌததிராந்திகம், யோகாசாரம், மாத்தியமிகம், நையாயிகம், வைசேடிகம், பாசுபதம், சாங்கியம், யோகம், பாட்டம், பிரபாகரம், சங்கரம், பாஸ்கரம், யாதவம், ஏகாயனம், வைஷ்ணவம் ஆகிய இவைகளாம்.

பதினெட்டு நற்குணங்களாவன சத்தியவாதம், தானசீலம், பிரதிக்கினை தவறுறுதல், தியொழுக்குவெட்கம், பராக்கிரமம், பொறுமை, சினேகக்குணம், பேர்பிரஸ்தாபம், துஷ்டநிக்கிரகம், சிஷ்டப்ரிபாலனம், அறப்பயனுணர்வு, நன்காராய்தல், மிருதயை இனிய மொழி வாக்குவலிமை, பெரியோர்க்கு வணக்கம், பச்சபாதமின்மை, விவகாரத்தில் பகுத்தறிவு ஆகிய இவைகளாம். (கூகூ)

கொற்றவளை கொள்ளஞெருழுக் கூசனமுஞ்சற்றனுகா
நிற்றலலர்பூவலர்த்து நீண்டிடறில்—உற்றெருளிகண்
லீலென்புவன் காப்பாங்கோ திமைகாப்புங
கோலிதிருணங் காப்பாங்கோன்.

| | |
|---|---|
| அலர் நீண்டு இடறில் | சூரியனுனவன் (தன்னை முழுவதும் கிராணமூடிக்கொள்ளுவதினுல் நேரிட்ட) கொடியதுன்பத்திலும் |
| பூவலர்த்தும் கொற்றவளை | (தாமரைமுதலிய) புஷ்பங்களை அலரசெய்யும் (அதுபோல தனக்கு என்னதுன்பம் நேரிடினும் அதனை ஒருபொருட்டாக நினையாமல்) பகைவர்கள் நாடழித்தலுக்கு |
| ஒளிகண் | ஒளியுள்ளகண்ணைச் |
| உற்று | சூழ்ந்திருக்கின்ற |
| லீலென்பு | (வளைவுள்ள) குவளைஎலும்பைப் |
| வன் காப்பாம் | போல வலிமையோடு காத்தலும் |
| கொள்ளல் | திருடர்களால் வழிப்பறிமுதலிய அபகரித்தலுக்கு |

இமை கேடாது காப்பும் — (அக்கண்மணியை எப்பொழுதுங் காத்துக்கொண்டிருக்கின்ற) இமையைப்போல(யாதொரு) தாமதமின்றிக்காத்தலும

தொழு கூசனமும் — பிரஜைகளிலொருவருக்கொருவர் சண்டைசச்சர வுமுதலியவைகள்

சற்றணுகா — சற்றுவது உண்டாகாவண்ணம்

திருணம் — தூசிமுதலாய்ப்படியாதபடி அக்கண்மணியைக் காக்கின்ற

கோலிகாப்பாம நிற்றல் கோன் — (இமையின்) உரோமங்களைப்போலஅடிக்கடிகாத்து நிற்றலுமாகிய (இவ்விலட்சணங்களை உடையானே) அரசனும

தன்னைப்போல் வலியுள்ள சத்துருக்களாலும் கொள்ளைக்காரமுதலிய களவாகளாலும ஒருவருக்கொருவா சண்டை சச்சரவுசெயயுங குடிகளாலும பிரஜைகளுக்கு யாதொரு துன்பம நேரிடாது காககவேண்டுவது அவசியமெனததிருஷ்டாநததுடன் அரசனது குணககுறிகளை எடுததுக் கூறினமையால் திருஷ்டாந்த அலங்காரததோடு கூடிய சுபாவ உகதி அலஙகாரம். (எ0)

---

## குடிமையொழுக்கம்.

கொடுஙகோ லரசிறகுடி பிளழப்பதின்றுபலா
றிடுமுனைஙகாண்டோடுகாணின் றரிவாய—இடுசேவன்
நசிப்பதிலுநதுண்டாட னன்றரசேநன்றூறகு
ருசிககுநரதினியின்பாலொனறு.

அரசே — (ஐய) கொடுஙகோலரசனே

நசிப்பதிலும துணடாட ல நன்று — (பலபலவிததகிலும)குடிகளைவதைத்துக கொல்லுவதிலும (சணப்பொழுதுக்குள்ளாகத தலைவேறு உடல்வேறாகத) துண்டஞ் செயதல நலலதாம்

ஊன்கு நன்று — (பிரஜைகளாகியகுடியேஇககொடிய அரசன்கீழ் வாழ வதிலும்)மாமிசம்நல்லதாயிருக்கும்படி

உருசிககும் நரதினி யின்பால் — (நன்றாயததின்னக கொடுத்துக கொழுக்கவைதது அறுத்துச்சமையல் செய்து) உருசிபாரக்கும நரமாமிசபட்சணஞ் செய்கின்றவனின கீழாவது போய

ஒன்று — வாழக்கடவை
அரி, வாய், இடு — (ஏனெனில்) விஷப்பாம்பு வாயப்பட்ட
சீவன், இன்று — உயிர்களழிந்துபோம் (அதுபோல)
கொடுங்கோல் — நீதிதவறுதலையுடைய
அரசில் — அரசனிடத்தில்
குடிபிழைப்பது இன்று — பிரஜைகள் தப்பிப்பிழைக்கவே கூடாதாம் (ஆதலால்)
பல, ஆறு — (அவன்பற்), பலவிதமாய்
இடுமுனம — (உன்னை) வாயில்போட்டுக் கொள்ளுமுன்
காண்டு — (நல்ல அரசன்எங்கு இருக்கின்றானென்று) தேடிப்பிடித்து
ஓடு — (அவனிடத்தில்) விரைந்துசெல்லுவாயாக

காண் இரண்டும் அசை நிலைகள்.

பிரஜைகளுக்கு ஒன்றிப்பு இருக்கவேண்டியது அவசியமெனக் காட்டக்குடிகளை எல்லாம் ஒன்று கூட்டித் தனதுமுன்னிலையில் ஒருபக்கத்தில் நிறுத்தியும் கொடிய அரசனையும் தனக்குமுன்னிலையிடத்தில் வைத்தும் " ஓடு " " ஒன்று " என ஒருமைகொடுத்துக் கூறியிருக்கின்றனர். (எக)

தரணிமதித்த மணிக்கரு ஞமசத்தரசன்
உருகுவரம்புறு சேருள்ளன்பால்—வறியனும்
தற்சுடரா முத்தலமோதப்பு பார்ப்புய்த்திடுமோ
அற்பருண்டே நான்மலர்க்குமாங்கு.

சதத ரசன் தரணி — (பிரஜைகளாகிய குடியே) நீதிமயமாய் வடிவங்கொண்டிருக்கின்ற அரசன் (பற்பலதேசங்கள் மலைகள் கடல்கள் முதலியவற்றாலாகிய விலைமதிக்கப்படாத இந்த) உலகத்தைக்
மதித்த மணிக்கு — (கொடுத்து விலைக்குவாங்கும்படி)மதிக்கப்பட்ட இரத்தினக்கல்லுக்கும்
அருமை — அருமையானவனும் (ஆதலால்)
உள், அன் பால் — (மனதில் பிரஜைகளிடத்திலுண்டாகிய) அன்பின் செய்கையால்.

| | |
|---|---|
| வறியனும் | இலேசானவன்போல் காணப்படுவன் |
| வரமபு உறு | (இதனாலே அவனை அசட்டை பண்ணாது அவ்ன்) கட்டளையைக் காத்துநட |
| தன், சுடரை | (ஏனெனில்) தன்வீட்டுவிளக்கை |
| முததலமோ | முத்தஞ்செய்யலாமோ |
| உருகு | (தவிரவும் அவனிடத்தில் எப்போதும்) அன்பு வைத்துக்கொண்டிரு (ஏனெனில் |
| ஆங்கு | (அவ்) வவ்விடஙகளிலுள்ள |
| நால் மலாக்கும | நீரப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ, புதர்ப்பூ ஆகிய இவைகளுக்கும |
| அன்பர் உண்டு | (அவைகள்கண்டு மலரும்படியானசூரியன் முதலிய) நாயகங்களு முண்டல்லவா |
| சேர் | (அவனது செஙகோலுக்குப்பயந்து விலகிவிடாது) சேர்ந்திரு (ஏனெனில்) |
| சபபு | (தாயை) விட்டுப்பிரிநத |
| பார்ப்பு | குஞ்சு (தபபிப்) |
| உய்ததிடுமோ | பிழைக்குமோ (பிழைக்காதாம்) |

அரசன் விஷயமாய்ப் பிரஜைகளுக்கு இருக்க வேண்டியதை மூன்றுகாரியமாயச் சுருக்கித் திருஷ்டாந்தப்படுததி ஆத்தாந்தரமுங கூறினமையால்திருஷ்டாந்ததேதாடு கூடியஅர்ததாநதர நியாச அலஙகாரம். (எ௨)

ஒன்றிப்பேநும் மரசொழிந்தபின் சொற்றவொரு
இன்றதனை விட்டாரீரிமாலததாய்—வென்றுநீா
அனையுந்தலேயா னீராணிழந்தீர் பற்றுடற்சார்
நரந்தொட்டற் கம்பானீர் நன்கு.

| | |
|---|---|
| இமாலத்தாய், ஒன்றிப்புவம | (வடக்கேஇமையமலையையும் எல்கையாககொண்டிருககின்ற இநதியாவென்னும தாயேநீர் ஒன்றிப்பில்லாத |
| நும, அரசு | உம்முடைய சுய அரசாட்சி |
| ஒழிந்தபின் | முற்றிலும் அற்றுப்போன தன்பின்னா |
| அனையும் தலே ஆனீர | (நரிக்திரத்தினலோ அலலது அககால அரசர் திருடர் முதலியோர் தஙகளைச் செல்வவான்களென்றெண்ணி தொந்தறை செய்வார்களெ |

ன்றே ஒரோ துணியை) அரையிலேயும் தலையி
லேயுஞ்சுற்றிக்கொண்டுகட்டைபோலத்திரிந்தீர்

நன்கு ஆளிழந்தீர் — மிகவும் ஆத்துமாவுக்குரிய தன்னபிமானமும இழந்துவிட்டீர் (அகனாலே) ஆத்துமாவையுமபெரும்பாலு) மிழநதுவிட்டீர

பற்றுடல் சார் நரம — அமஞ்சிபிடிககின்ற வர்களுககுப் பயநது தரிததுக் கொண்டபறறோடுகூடிய உடலவேஷத்துடனே மனுஷப்பிணததை

தோட்டல் — குததிவேவிக்கும் படியான

கம்பானீர — சவளகுததிக கொம்மைப்போல துன்பப்பட்டீர

சொறறலொணு — (இவ்வாறு) சொலலிமுடியாத

அதனைவிட்டு — அந்தக கொடூரததிலிருநது

இன்று — (நல்ல ஆளுகையாகிய) இககாலத்தில்

ஆறீர — ஆறுதலடைவீராக

வென்று ஆறீர — (உமக்குநேரிட்ட இந்தசிந்தையைககுறிதது இங குளள அநிய தேசததார நிநதிததாலுமகிநதிக கட்டும் அதனைப்பொறுமையினுல்) வென்றுசகித்துககொண்டு ஆறுதலடைவீராக

நீதியான அரசாட்சியிலலாவிடின் பிரஜைகளுக்கு இகபரமிரண்டிலுஞ் சுகமகிடையா ஆன்மாவையும இழககவேண்டியதாய்நேரிடுமெனசகாட்ட "ஆளிழநதீர" என சிலேடையாகக கூறியும அவறறை நிரூபிக்குமாறு முறபட்ட அரசாகள் காலததில் நடநத நடபடிகளை எடுத்து "அரையுந தலையானீர" "பறறுடறசார நரநதொட்டற கம்பானீர" எனவுங்கூறினா. (எஈ)

## சுயபாஷைக் காதகமறுப்பு.

எப்பாடைக் கேறறமிறை யோன்பாடை யென்றுமிறறே
அப்பாடைச் சாததிரியே யானுமெனறெ—தறபாடை
துற்றுகான் தறபிரஜை சுட்டா வடிப்பிடிகொம்
பிற்றிழந்தானே யிசைதது.

எ, பாடைக்கு — (சுயபாஷை காதகரே பிரஜைகளது) எநதபாஷைகளுககும

| | |
|---|---|
| இறையோன் பாடை ஏறறம் | அரசனது மொழியாகிய இராஜபாஷை மேல் (என்பது) |
| இற்றே | இககாதிலேயா |
| என்றும் | எப்பொழுதுமாம் |
| அப்பாடை | அந்தபாஷையில் (நீ) |
| சாத்திரியே | சாஸ்திரியாக |
| ஆனும் ஏனோ | இருக்கினும் யாதுபிரயோஜனம் (என் பிரயோ ஜன மின்றெனை நீகேட்கில்) |
| தன், பாடை துன்று, ஆகான் | தன்சுயபாஷையில் (அபிமானங்கொண்டு) சாடி நன்றாகக் கறகாதவன் |
| அடி | (தா) ளிருக்குதலுக்கு ஆதாரமான கிளையும் |
| பிடிகொம்பு | பிடித்திருக்கும் கிளையும |
| இற்று | முறிந்து |
| இழந்தானை இசைத்து | அவ்விருவாதரவு மிழந்து கீழே விழுகின்றவனை ஒதது (சுயபாஷையிலும் அன்னியபாஷையிலும் ஒன்றுக்குமுதவாதவனாகி) |
| தன்பிரசை சுட்டா | அவனைத் தன் சொந்த இனத்தாருங்கூட நன்கு மதிக்கமாட்டார்கள் |

இக்காலத்திலேயா எப்பொழுதும என ஆட்சேபித்தமையால் ஆக்ஷேபஅலங்காரம். (எச)

ஆரியத்தாலக் கடிப்பட்டானா யதன்பின்னோர்.
காரியத்தாற் கட்டழிந்தை காண்பாரோ—நீரரசு
காப்பாற்றினின் னுடைச்சேய்காகழித்த நின்முனிபோல்
மூப்பிநமக் குண்டோனாநீ மூண்டு.

| | |
|---|---|
| மூப்பிஆரிய ததால் அக்கடிப்பட்டா னய் | (பிறப்பிலும்இத்தேசத்துக்கேஉரித்தாகவந்து வாழ்க்கைப் படுதலிலும் சிரேஷ்டபாத்தியதைபடைந்திருக்கும்)தமிழாகியபெண்ணே ஆரியமொழியினால் அலங்கோலப்பட்டுத் துன்பத்துக் குள்ளானாய் |
| அதன் பின்னோர் | அதன்பின்பு அரசாண்ட அரசர் உன்னே நசித்துவிடவேண்டுமென்ற |

| | |
|---|---|
| காரியத்தால் கட்டு இழந்தை | செய்கையாகிய காரியத்தினால்(இலேசில்அழிவு படாது நீ) அழகுமட்டும் குறைந்துபோனை (இவ்வாறு) |
| நீர் அரசு | (அபாயத்திலிருந்த உன்னை) நற்குணம் நற்செய கைகளைப்பொருந்திய இக்கால அரசன் |
| காப்பாறறின் | பாதுகாததுவராவிட்டால |
| காணபா ரோ | (இசகாலததிலுள்ள விததுவான்கள் உன்னைக்)க ண்டுபிடிபபாாகளோ |
| நின்னுடை | (இப்படி நீ இக காலத்தில் மேன்பட் டிருக்கி னும்) உன்னுடைய |
| சேய்கா | (சில) பிள்ளைகளை இழிவாகக்கருதி |
| கழிதத | (தற்காலததில்) நிநதிககின்றன |
| நின் முனி போல | (இவர்களுககுப புத்தி வருததும்படி ஆதியில் உனககாகக காசியிறபோய் ஆரியரோடு வ ழக்கிட்டு செயஙகொண்டுவநத உன்னுடைய அகத்தியமுனிவனா ஒதத |
| நமக்கு உண்டு | (வித்துவான்கள்) நமக்குத்தறகாலத்தி லிருக் கின்றனர் |
| நீ | (ஆதலால் அவர்களிடத்தில் இக்கவியாகிய என் விண்ணப்பத்தையும்) நீ கொண்டுபோய் |
| உனா | (நமது குறைகளெலலாம) சொலலக்கடவை |

சமஸ்கிருத பாஷைக்குத் தமிழ்ப்பாஷை குறைந்ததெனை ஆரியர் வாக்குவாதஞ் செயதபோது அவர்களை அகததியர் காசியிறபோய் மேறகொண்டனர் ஆதலால் இதுபறறியே இத்தமிழை அகததியன தமிழெனவும் வழஙகுகின்றது.

மூப்பி என்றது உருபக அதிசய உத்தி அலஙகாரம். (எரு)

சககரக பாலசுழ ருங்குரு வட்டமென
மிக்கவழக காயிரமோ வீண்டமிழோ—தக்கரியீா
மாலுமிககோ வேஙகலுமபாா மான்மகன்காண் மோரடென்கும்
போலியன்று றொன்றுமறுா பூண்டு.

| | |
|---|---|
| சுழல் | அநதரத்திற் சுற்றுகின்ற |
| சக்கரம | பூமியைத் |

| | |
|---|---|
| தாங்கு | தாங்குகின்ற (இறைவனது) |
| கபா லம் குரு வட்டம் என | மண்டை என்ற (பொருளில்) சக்கரம் சுற்றுகிறது கபாலம் தாங்குகின்றது (என, எனக்குக்கவையில்லைப்போஎன்ற அவசரத்தில்வழங்குகின்றபழமொழியையும) ஒரு வியாழவட்டம் பன்னிரண்டு வருஷமென்ற கணிதத்தையும் போன்றவைகளாகிய |
| மிக்க | ஆயிரக்கணக்கான (பெண்கள்முதலியசாதாரண அறிவாளிகளுங்கூடப்) |
| வழக்கு | (பேசுகின்ற) வழக்கச்சொற்கள் |
| ஆயிரமோ | ஆயிரக்கணக்கான வருஷத்துக்கு முன்புள்ளதோ (அல்ல, தொன்று தொட்டுள்ளதாம்) |
| கரு அறியீர் | (இவ்வாறு சாதரணர்களுங் கூடபழமொழியாய் வழங்குமபடியான பூமிசாஸ்திரம் வானசாஸ்திர முதலிய பலவகைப்பட்ட சாஸ்திரப் பழக்கத்தை யுடைய சுயபாஷைகளின் மான்மியத்தை) நீர் அறியுந்தர முள்ளவரல்லர் |
| வீண் தமிழோ | (மேலும்முயற்சியும்போதுமான அறிவுமில்லாத ஒருவனுக்கு இடங்கொடுக்கப்பட்ட) உபகாரமற்றதமிழ்ப்பாஷையா (அல்ல ஆனால்) |
| மாலுமிக்கு | (சமுத்திரத்தினது ஆழம், நீளம், அகலம், கரை துறை முதலியவற்றை ஒருவாறு அறிந்திருக்கின்ற) மாலுமிக்கு |
| என்று | (அவற்றை நினைக்குக) தோறெல்லாம் |
| ஏங்கலும் | (நடு) நடுக்கமுமாம்(ஆனால்) |
| பார் மான் மகன் | (சலாசய மென்பதைச் சற்றாவது அறியாத) நாட்டுபுறத்தானும் சிறுவன்போலொத்த பகுத்தறிவில்லாதவனுமே கரையினின்று |
| மோடு | (அதோ சமுத்திரத்தின்) உச்சி தெரிகின்றது |
| காண் | (அவ் வுச்சிக்கு அப்பால் இவ்வளவு தூரத்தில் தானே அடுத்தகரையிருக்கும்) பார்ப்பாயாக |
| என்கும் | என்று சொல்லுவன் (இவனே) |
| போலி அன்றார் | ஒத்தவன்தான் (தமிழ்ச்சாகரத்தை அற்பமாகக் கருதுவானே அன்றி) மற்றையோர்கள் |
| என்றும் | எக்காலத்திலும் |

| | |
|---|---|
| பூண்டு | (மனம்) ஒத்து (சுயபாஷைக்காதகராகி |
| மறா | (தமிழை) நிந்தியார் |

இந்நூலாசிரியர் சுயபாஷைகளி லொன்றாகிய தமிழ் மொழியின் மான்மியங்களில்சிலவற்றைப் பிரத்தியட்சமா யறிந்தவரேயன்றி மற்றப்பாஷையின் மான்மியம தனக்குப் புலப்படும்படி கற்றறியாதவராகையால் இப்பாஷை யிலுள்ளசில பிரத்தியட்ச நடபடிகளைக் கொண்டு மறற சுயபாஷைகளின் காதகரைக கண்டிக்குமாறு மேலைச் செய்யுளிலும் இச் செய்யுளிலும்மூன்றின சில நடபடிகளை எடுத்தாண்டுத் திருஷ்டாந்தப் படுத்தத் தமிழ மொழியை வியந்து கூறி யிருக்கின்றனா. (எசு)

---

## ஞானசிரிய வொழுக்கம்.

ஆசிரிய ஞகுரித மத்தனையே மேனோக்கி
வீசியுள மோசமதை வீடணுககின்—தாசனையே
சூரியனைப் பார்த்துயருஞ் சொக்கியமு னிழலனை
மாரேற்றுங் காக்கு மரம.

| | |
|---|---|
| மரம் சூரியனை | விருட்சமானது சூரியனையே |
| பார்த்து | பார்த்து |
| உயரும் | மேல்நோக்கியே செல்லும |
| நிதம் அத்தனையே மேனோக்கி | (அதுபோல)எப்பொழுதும இறைவனதுவசப் பட்டே நடந்தும அவ்விருட்சம் |
| ழல், சொக்கி | உஷ்ணத்தைத் (தானே) பெற்றுக்கொண்டு |
| லனை ாற்றும் ந்தும் | உஷ்ணந்தாங்க முடியாமல் தன்னிடத்தில் வந்தடைந்தவர்களை, முதன்மையாக இருந்து காப்பாறறும (அதுபோல) |
| னையே மாசத்தை கின் | (தாபத்திரயாககினியினதுஉஷ்ணந் தாழக்கூடாமல் தன்னிடததில் வநதடைந்த மாணாககாகளது) மனஅஞ்ஞானத்தைத் (தக்ஷணமே)ஓட்டிமோக்ஷ நெறியில் செலுததினால்தான் |
| | ஞானசிரிய னவான் |

பகுத்தறிவில்லாத மரத்துக்கு இவ்விலட்சண மிருக்கையில் மேலான ஞான நூற்களின் கருத்தறிவுள்ள ஞானாசிரியனுக்கு மேற் கூறிய இலட்சண மிருக்கவேண்டியது அவசியமெனக்காட்ட மரத்தை உவமித்துக் கூறினா.

தாபத்திரயாக்கினி யாவன, மனைவிமக்களால் வரும் இன்ப துன்பமாகிய ஆதியாத்மிகம், முன் வினையினால்வந்த பலாபலன்களினால்வரும் இன்பதுன்பமாகிய ஆதிதெய்விகம் மண் முதலிய பஞ்ச பூதங்களாலும் இடிமின்னல் வீடு இடிதல்முதலியவற்றாலும் நேரிடும் துன்பவின்பமுதலியவையாகிய ஆதி பௌதிகம் ஆகிய இம்மூன்றும் தாபத்திரயாக்கினிகளாம். (எஎ)

வீழ்குழவு காண்டிடுக்கை யோட்டுவினை வாயிருநூல்
ஆழ்கலிக்கோறுன் றருநா காணியெனத்—தாழ்வாற்றார்
சமையிகளை நோக்குப வோ தனக் குவையேனோ வெதிர்க்கோள்
குமையிவுளியாட்படை யாய்க்கொண்டு.

| | |
|---|---|
| தனக்குவை ஏனோ சமையிகளை நோக்குபவோ | (ஞானாசிரியர்கள் தமக்குத்) திரவியக்குவியல் கிடைக்கின்றதா யிருக்கினும் அவைபெரிது (அல்லவீண்பெயருக்காவது அல்லது வயற்றுப் பிழைப்புக்காகவாவது) சமயத்துக்குத்தக்கது கற்கின்றவர்களை (மாணாக்காகளாகத்) தெரிந்து கொள்வார்களோ (கொள்ளார்) |
| தாழ், சணியார் | (தாங்கள் கற்றுக்கொடுக்கையில்) சாரமற்ற நூற்களின் கருத்தையும் (போட்டுக் குழப்பிக்) கற்றுக்கொடுக்கமாட்டார்கள் |
| வீழகுழவு காண் திடுக்கை ஓட்டும் | (அவ்வாறு சாரமான நூற்களைக் கற்றுக்கொடுக்கையில் ஆன்மாவைபபற்றியாவது இறைவனைபபறறியாவது மாணாககனுக்கு விபரீதமுண்டாகி அச்சமடைந்தால் உடனே) கீழேவிழுந்தபிள்ளையின் (மனம்) நடுங்குகின்ற பதஷ்டத்தை (நெஞ்சிலு தட்டிக்கொடுத்து) நீக்குகின்ற |
| வினைவாய் | துரிதத்தைப்போல (அவ்விபரீதங்களை நீக்கி) |

| | |
|---|---|
| இருநூல் நாகு ஆணி என | மகிமை தங்கிய தத்துவசாஸ்திரமுதலியவைக ளின் நுட்பப்பொருள்களை பசுமரத்தாணி யைப்போல (மனதில்பதிப்பித்து) |
| ஆழ், கலி கோல்தரும் | (அந்த சாஸ்திரங்களாகிய) ஆழமான கடலை அளந்தறியும்படியான அளவுகோலாகிய மா ணாக்கனது தன் னறிவையும் உண்டுபண்ணு வன் |
| எதிர் கோள் | (இச் செய்கைகளுக்கு) விரோதமான செயல்க ளைக் கொண்டுஞானாசிரிய னயிருத்தலானது |
| ஆள் | குதிரைவீரனல்லாத ஒரு பயங்காளி |
| குமையிவுளி | கூத்தாடிச் சிலம்பக்குதிரையைக் |
| கொண்டு | கொண்டு |
| படையாய் | யுத்தம்நடத்தல் போலாம் |

தான்-அசைநிலை.

தத்துவசாஸ்திர முதலியவைகளினாலே மாணாக்கனுக்கு விப ரீதம் பிறந்து அதனால் நாஸ்திக முண்டாகாவண்ணம் மிகுந்த எச் சரிப்புடன் உடனேக்குடனே அவ்விபரீதங்களை நீக்கவேண்டுமென "வீழ்குழங்காண்டிடுக் கையோட்டு விளைவாய்" எனஉவமித்துக்கூறி னர். (எஅ)

மாணாக்கற் சீரறியு மதியாதுங் காணுகிற்கும்
கோணூஉம் வரூஉந்திற் குறைபடீஉம்—வீணேக்கும்
சிக்கரசோ டுண்ணிலையஞ் செக்குடனே கேரண்டம்
ஒக்குகதி ராணியுந்தா னொத்து.

| | |
|---|---|
| சிக்கரசு ஓடு ஒத்து | உருசியறியும் நாக்கினுட் கருவியோ டொத்து |
| மாணாக்கன் | மாணாக்கனது |
| சீர், அறியும் உண் நிலை அம் ஒத்து | தன்மையை நன்று யறிந்திருப்பன் (ஒருவன் அசுத்தஞ் செய்தலுக்கும் மற்றொருவன்) உண்ணுதலுக்கு முரிய நீர் நிலையை ஒத்து |
| மதியாதும் காணுகிறகும் | மாணாக்கனில் எவனுவது தன்னை நன்குமதியா த்தை ஒரு பொருட்டாக நினைக்க வலிமையு டையனுவன் (அவ்வாறுகான்) |

| | |
|---|---|
| செக்குடன் ஒத்து | (எண்ணெய்முதலிய இரசம்வேறு சக்கை வேறாகப் பிரிக்கின்ற) செக்கை ஒத்து |
| வருந்தில் கோணும் | தான் நூற்களின் உட்கருத்தை வெளிக்கருத்தாக்க முயலுகையில் உண்டாகுந் தொந்தரையினால் வாடுவன் (ஒருக்காலும் வாட்டமடையான்) |
| ஒக்கு | (தனக்குத்தானே) ஒத்திருக்குதலுக்குக்காரணமான |
| கதிர் ஆணி ஒத்து | தன்னை யுரைசுவதினால் பலச்சிறப்படினும் மாற்றை உணர்த்துவதில் குறைவுபடாத ஒளியுள்ள உரையாணியை ஒத்துத் |
| குறை படும் | (தான் கற்பித்ததினால் எவ்வளவு தளர்ச்சியடையினும் அறிவிற்) குறைவுபடுவன் (படான்) |
| கேரண்டம் ஒத்து, வீண் நோக்கும் | (வீண்பார்வைபாராத) காகத்தை ஒத்து தான் வீணான சங்கதிகளை உபயோகிப்பன் (உபயோகியான்) |

தான் - அசைநிலை.

ஞானாசிரியனது தொழிலின் இயற்கையை ஐந்தாகப் பிரித்து நாவினிடத்திலிருந்து உருசியை உணர்த்துங் கருவி முதலிய ஐந்து பொருட்களைக் கொண்டு திருஷ்டாந்தப் படுத்தினர். (௭௬)

---

## ஆஸ்திகக்கற்பொழுக்கம்.

புத்தமிர்தோ தேங்கல்வி புத்தேளுந் தன்மகவைக்
கத்திவிட்டா டன்னவளுங் கண்ணோக்கில்—நத்திலாய
எண்டில்சித் தாதிபத் தேழா னுயிரோடே
துண்டுதுண்டாய்க் கொல்வன் றுணிந்து.

| | |
|---|---|
| புத்தேளும் | (கௌதம ரிஷியினது மனைவியையிச்சித்துச் சாபத்தைப் பெற்றுக்கொண்ட) இந்திரனும் |
| தன், மகவை கத்திவிட்டாள் தன்னவளும் | (சந்தனு என்னும் அரசனுக்குப் பெற்ற) தன்னுடைய பிள்ளையை போட்டுவிட்டுக் கோபங்கொண்டவளாகி மறைந்து போனவளாகிய கங்கையையும் |
| கண்ணோக்கில் | ஆராய்ந்துபார்த்தால் |

| | |
|---|---|
| தே கல்வி | இறைவனை அறிந்திருக்கும் அறிவோடுகூடிக் கற்ற கல்வியானது |
| புத்தமி ரதோ | (அவ் விருவரும் சாப்பிட்டிருக்கின்ற) தேவாமிர்த மாகுமோ அல்ல மேலானதாம |
| நத்தி நிலாய் | (ஆதலால் இறைவனை அறியும் அறிவோடு கூடிக கற்குங்கல்வியை) விரும்பி உறுதியாகக் கைக்கொள்ளக் கடவை |
| எண்டில் | (அவ்வாறு செயயாவிடின்) கணிக்கப்பட்ட |
| சித்தாதி | சித்தமுதலிய |
| பத்தேழான் | பதினேழு உறுப்புகளை உடைய சூக்குமஅவயவி |
| துணிந்து | ஒருமித்து |
| உயிரோடே | ஆன்மாவை இவ்வுலகத்தில் வைத்தே |
| துண்டு துண்டாய் | இகததிலும் பரததிலும் இதைத்து |
| கொல்வன் ௨ | ஒன்றுக்கும் உதவாதபடி வதைததுக்கொலவன் |

நில - அசைநிலை.

தன் தேகமெல்லாம் ஆயிரம பெண்குறிக ளாகும்படிச சாபத்தைப்பெற்றஇந்திரன் கவுதம ரிஷியை நோககிக் கெஞ்சினதினாலே அப் பெண்குறிகளை ஆயிரங் கண்களாக மாற்றினா ஆதலால் இவ்வாறான வலிமை அவ் விரிஷிக்குக் கிடைத்ததற்கு இறைவனை அறியும் அறிவும அவ்வறிவினு லுண்டாகிய இறைவ பக்தியே காரணமெனக் காட்ட "புத்தேளும" எனவும இத்தன்மையதான கல்வி அறிவைப்போல வலிமையையும் இரக்கத்தையும் அன்பையும் வேறொன்றும் தாராதெனக் காட்ட "தன்மகனைக் கத்திவிட்டாடன் னவனுங் கண்ணோக்கில்" எனவும் கூறினா

பதினெழு அவயவங்களாவன, மெய், வாய், கண், மூக்கு, செவிகளிலிருந்து பரிசுனித்தல், உருசித்தல், பார்த்தல், சுவாசித்தல், கேட்டல் ஆகிய இவற்றை ஆன்மாவுககு உணாத்தும் சூக்குமமுமாயிருக்கின்ற ஞானேந்திரியஙக ளைந்தும் சித்தத்தோடு கூடியமனமும் அகங்காரத்தோடு கூடிய புத்தியுஞ் சேர்ந்து ஆக ஏழும் அறிகருவிகளாம், இந்த ஏழு அறிகருவிகளும தொழிலை பிறப்பிககுங் கருவிகளுக்கு இடமாகிய வாககு, பாதம் பாணி பாயுரு உபஸ்தஙகளி லிருந்து தொழிலகளை உண்டுபண்ணும் ஐந்துகன்மேந்திரியஙகளும் பஞ்ச

வாயுக்களுமாகச்சேர்ந்து பத்துஞ் செய்யுங் கருவிகளாம் இந்த அறி கருவிகளும் செய்யுங்கருவிகளுமாகிய பதினேழுமே சூக்குமதேக அவயவங்களாம். (அ0)

புழுதி தரிக்கரிய ரல்லர் புகழ்கொண்டு
தொழுத பலமனத்தா ரசூட்டுவிக்கும்—குழுந்திருவேர்
இகலன் பிரசபதி இங்கியக்கன் மேலாக்கும
இகபரத்தின் முன்னோடி யீது.

| | |
|---|---|
| புழுதி தரிக்கரியர் அல்லர் | (தன்மேல்தானே) புழுதியைப் போட்டுக்கொள்ளும் யானையைப்போல் (தன்சுயபிரஷையைத் தானே)நிந்திக்கின்றவர்கள்தவிர மற்றவர்கள் |
| புகழ,கொண்டு தொழுத | கீர்த்தியை ஸ்துத்தியஞ் செய்துகொண்டுவணங்கப்பட்ட |
| பலமனத்தாா | பலரது மனமாகியபூமாலையையும் (ஆஸ்திகக்கல்வியானது தன்னை உடையானுக்கு) |
| சூட்டுவிக்கும் | அணிவிக்கும் |
| ஈது, இகபரத்தின் | இவ்வாறான ஆஸ்திகக் கல்வி செல்வமானது இவ்வுலக இன்பத்துக்குமாத்திரமல்ல, மறுமை இன்பத்துக்கும் |
| முன்னோடி | முன்னதாகச்சென்று (தன்னை யுடையானுக்குக் காரிய சித்தியாம்படி பலவந்தஞ் செய்கின்றமையால்) |
| குழும், பிரசபதி | அதிக இனத்தாரைப்பொருந்திய பிரசாதிபதியையும் |
| திரு, யக்கன் | செல்வத்தில் குபேரனையும் |
| ஏர், இக்கி | அழகில் மன்மதனையும் |
| இகலன் | ஒத்தவனினும் |
| மேல், ஆக்கும் | மேலாக இருக்கச்செய்யும் |

ஆஸ்திகக் கல்வியானது பலவாறான நன்மைகளையும் விளங்கப்பண்ணின என்றமையால் ஆவிர்த்தி தீபக அலங்காரம். (அக

கல்விகலாதென்னோ காடாகு முள்ளிடமே
நல்லரசன் வெள்ளக்கடன்மடையில்—செல்வீதம்
நல்லுழவன் செய்விளைவு நாற்பயனு மின்றியோங்
கல்விடமா நாயரியாங்காடு.

| | |
|---|---|
| நல், உழவன் | நன்றாக உழவுதொழில் செய்கின்றவனது |
| செய் | பண்படுத்தப்பட்ட விளைநிலமானது |
| விளைவு | விளைச்சலினால் |
| நால், பயனும் | பலவகைப்பட்டப் பிரயோஜனதலைத்தருமாம் |
| இன்றி | இவ்வாறு பண்படுத்தாவிட்டால் |
| விடம் ஆம் ஓகைகல், நாய அரியாம் | (அந்த விளைநிலமே) பாமபு, யானை, செந்நாய், சிஙகம் வாசஞ் செய்கின்ற |
| காடுஆகும் | காடாகும் (நியாயம இவ்வாறிருப்பதால்) |
| கல்வி, கலா | ஆஸ்திகக்கல்வியைக் கற்காதது |
| என்னே | யாதுகாரணம்பற்றியோ |
| உள், இடமே | (இதனால் இருதயமாகிய) விளைநிலத்திலுள்ள |
| காடு ஆகும் | (மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான் கும் முறையே பாமபு, யானை, செநநாய், சிங கம்ஆக மாறி வாசஞ்செய்யத்தக்க)காடாகும் |
| ஆசான் செல், ஈ | (ஆகலால் நல்ல) ஆசிரியனது சமுகததில்போ ய் புறத்துக்குறிய ஆராதனை வஸ்துவையும் மனதையும் மனதோடுபொருத்திய ஆன்மா வையும் காணிக்கையாகவைத்து |
| வெள்ள கடல், மடையில் கல் | கடல்மடை திறந்ததுபோ லொத்த அவனது அறிவினிரசத்தை அனுசரிததுக் கற்றுக் கொள்ளக்கடவை |

மனம், புத்தி, சித்தம் அகங்காரங்களினது ஒவ்வொன்றின் குறைகுணங்களைக்கொண்டு மேற்கண்ட செந்துக்களை ஒப்பிட்டுக்கூறி யிருக்கின்றார். (அஉ)

## பெருந்தகைமை.

*தலைநின்றவேழானுஞ் சடப்பவங்களைந்தானும் **
*நிலைநின்ற எகருறியு நீக்கி—மலைகின்றீர*
*ஈனாந்தா லீரொட்டினேற்றம் பெறலீர்*
*போராவாயாவுமபிற.*

| | |
|---|---|
| தலை, நின்ற | முதன்மைப்பட்டு |
| எழானும் | எழுவகைப் பெரும்பாதகங்களினாலும் |
| ஐந்தானும் சடப்பவங்கள் | ஐவகை பஞ்சமாபாதகங்களினாலுமாகிய |

| | |
|---|---|
| எ,குறியும் நிலைநின்ற நீக்கி, | (அவற்றவற்றிற்குரிய) எந்தச்செயல்களையும் இருந்த இடம் (தெரியாமல்) நீக்கி |
| ஈர் ஐந்தால் | (மனம் வாக்குக்காய நற்குணங்கள்) பத்தையுங் கொண்டு |
| ஈர் எட்டின் ஏற்றம | புகழ் முதலிய பதினாறையும் (அவற்றிற்குமேலான) பெருந்தன்மையையும் |
| மலைகின்றீர் பெறலீர் | (பெறறுக்கொள்ளக்கடவீர் இவ்வாறு பெற்றுக் கொள்ளச்செய்யு முயற்சியில்) தளாச்சியடையீர் (இவற்றைப்) பெற்றுக்கொள்ளீராகில் |
| பிறயாவும் பேராவாம் | மற்ற மனம்வாக்குக்காயத்தீக்குணங்கள்பத்தும் (வந்து ஆண்டுகொண்டு) விட்டு நீங்காவாம். |

பெரும்பாதகங்களாவன,—அகங்காரம், கொடாமை, காமம், பகை, பெருந்தீனி, கோபம், சோம்பல், ஆகிய இவைகளாம்.

பெருந்தகைமைக்குரிய குணங்களாவன, பெருந்தன்மை, புகழ், கல்வி,வலி,வெற்றி, நற்குடிப்பேறு, பொன், நெல், நல்லூழ்,நுகர்ச்சி, அறிவு,அவயவபங்கமின்மையோடுகூடியஅழகு,துணிவு,நோயின்மை, தீர்ககாயுசு, தன்னை மதியாதவரைக் கணியாதல் ஆகிய பதினாறுமாம்.

மனத்தீக்குணங்களாவன கொடுரேசிந்தை, விபசார விருப்பம், பேராசை.

வாக்குத் தீக்குணங்களாவன தூஷணம் பேசல், கோட்சொல்லல், கடினமொழி, பயனிலவார்த்தைகள்.

காயத்தீக்குணங்களாவன, களவாடல், வீண்தொழில் புரிதல், கொலை.

மனம்,வாக்கு, காயங்களின் நற்குணங்களுண்டானால் பெருந்தகைமைக்குரிய பதினாறு பொருட்களும் சித்திக்குமெனச் சாதித்தமையால்வாக்கியார்த்தத்தை ஏதுவாகவுடைய காவிலிங்கஅலங்காரம்.

நுதியாத னிந்தை நுடங்க லவதூறு
முதியாமைகொண்டு முறுமுறுப்பு—மதியாமை
பிகுவுக்குப் புட்கலம் பிழை மாசேறு
குகமின்று மஞ்சுகொளுங்கோ.

| | |
|---|---|
| மஞ்சு கோ | (தனக்கு ஆதாரவைத்தேடி வந்தடைந்த) மேகத்தைத் தாங்குகின்ற கருங்கல்மலையானது |
| புள் கொளும் நுதியாதல் | பறவைகளின் விடும் எச்சமுதலியவற்றைச் சகிப்பதும (போல பிறன் தன்னை) கனவீனம் பண்ணுதலையும் |
| மாசு, கொளும், நிந்தை | காற்றினால் நேரிட்ட தூசி முதலியவற்றை சகிப்பதும் (போல ஒருவன் தன்னை) நிந்தித்தலையும் |
| பீழை, கொளும், அவதூறு | (தான்கருங்கல்லாயிருந்தும்) பொருக்கினால் (தன் மகிமைக்குப் பங்கம்நேரிடுவதைப்) பெற்றுக்கொள்வதும் (போல அயலான்செய்யும்) அவதூறையும் |
| ஏறு, ஆகமின்றுகொளும் நுடங்கல் | (தன்மேல் தாக்குகின்ற) வெயிலையும் இடிமுதலியவற்றையும் சட்டைபண்ணாததும (போல அன்னியனால் வருந்) துன்பத்தையும |
| மதியாமை | (தன்னை) மதியாத தன்மையைப் |
| கொண்டு | பொருந்தி |
| முறுமுறுப்பு | முறுமுறுத்தலையும் |
| மதியாமை | ஒருபொருட்டாக நினையாதிருக்குதலுமாகிய இவைகளை |
| பிகுவுக்கு | பெருந்தகைமைக்கு |
| கலம் | ஆபரணங்களாம் |

பெருந்தகைமையில்லாதவனா லுண்டாகியகனவீனம், நிந்தை, அவதூறு, தன்னை அசட்டைபண்ணி வருத்துதல், முறுமுறுத்தல், ஆகியவைந்தையும் சட்டைபண்ணாத தன்மையையும் பொருந்தியிருக்க வேண்டியது அவசியமென்பதற்கு திருஷ்டாந்தமாக கருங்கல் மலையின் தன்மையையும் இங்கு எடுத்தாண்டதுந்தவிர அயலான் என்ன குற்றஞ்செய்தாலும் தனக்கு என்னதுன்பம் நேரிட்டிருக்கினும் தன்னிடத்தில் வந்தடைந்தவர்களைக் காப்பாற்றவேண்டுமெனப் பொருள்பட "மஞ்சுகொளுங்கோ" என்பதில் மஞ்சுஎன்ற அடைமொழியைப் பொருள் நயப்படுத்தி யிருக்கின்றனர். (அச)

உயர்த்தன் டரமன்றுண்ணேக்கிற் செந்தன்று
வியுத்தற்கயற்குணமே வீழெவர்க்கும்—நயத்தலர்க்கும்
நன்றுக்குத் தாண்மூன்று நாகமதை யெக்குநிறை
ஒன்றுளதோ மேற்குரித்தா மொட்பு.

| | |
|---|---|
| உயாத்தல மரம் அன்று | ( பெருந்தகைமையுடையார் தங்களைத்தாமே ) உயர்த்திக்கொள்ளுதலுக்கு மரமா அல்ல(இறைவனைப் பற்றும் விஷயத்தில் மாத்திரம மேற்பட்டவர்களாவார்கள் அவ்வாறின்றிப்) |
| உள், நோக்கில், செந்து அன்று | பிரபஞ்சத்தையே நோக்குதலுக்கு (அவர்கள்)மிருகமா அல்ல (அவ்வாறு பிரபஞ்சமாய்கையில் சிக்கல் கிழமக்களது செய்கையாம்) |
| வியத்தல்கு | (ஆறு விப்பெருந்தகைமையோர்) மெச்சிகொள்ளுதலுக்கு |
| அயல், குணமே | அயலார்களது நற்குணஙகளாம் |
| எவர்க்கும் வீழ் | ( தாங்கள் தாழ்வடைதலுக்கு) எவ்வகையோருக்குங்கீழ்ப்படிதலாம் |
| நயத்தலாகும் | (தாஙகள் முயற்சியில் பழகுதலுக்குத் தன்னைப்) பகைக்கின்றவர்களுக்கும் |
| நன்றுக்கு, காள | நன்மைசெய்து தங்களைபோலாக்குதலுக்குச் செய்யும் பிரயததனமாம் |
| மூன்று நாகம | (இவ்வாறான மூன்று செயல்களினால் இவர்கள் சந்தனவிருக்ஷத்தின் பெருமையை விளக்குகின்ற) சந்தனசயிலத்தையும்(எல்லாமலைகளிலும் தன்னைத் தாழ்த்திக்கொண்ட)விந்தியபருவததையும(தன்னிலுள்ளவஸ்துக்களைத தன்னைப்போல் வாசனை கமழசெய்கின்ற, கந்தமாதனகிரியையும் போல்பவர்களாம்) |
| அதை | அம்மூன்று மலைகளையும் |
| மேல்கு, உரிததாம் ஒட்பு | மேல்மக்களுக்கு உரிததாக இருக்கின்ற(இநதப்) பெருந் தகைமையையும் |
| எக்கு | மேலெழுப்பி நிறையாடுகின்ற |
| நிறை | நிறைகல் |
| ஒன்றுளதோ | (உலகத்தில்)ஒன்றுஇருக்கின்றதோ(இல்லையாம்) |

இவற்றிற்கண்ட மூன்றுமலைகளும் தன்னை அடுத்திருக்கும் பொருட்களையுந் தன்னைப்போல செயயு மென்றமையால் தற்குண அலங்காரம்.

“ உயாத்தல் மரமன்றுண்ணோக்கில் செந்தன்று ” எனப், பெருந்தகைமை உடையாரைப் புகழ்ந்துகொண்டே கீழமக்களை இக

ழ்ந்தமையால் அப்பிரஸ்துதப் பிரஞ்சை அலங்காரம், இதனையே வியாசநிந்தை அலங்கார மென்பாருமுளர்.

மூன்றுமலைகளையும் பெருந்தகைமையோரது குணங்களையும் நிறுக்கும்படியான நிறைகல்லுண்டோஎன ஒன்றைக்கொண்டு நிரூபியாமல் ஆட்சேபித்தமையால் பிரதேச அலங்காரம்.

மேற்கூறிய மூன்றுமலைகளையும் தாங்கி நிறையாடக்கூடிய நிறைகல் இல்லெனவும் அயலாரது நற்குணங்களை மெச்சிப்பேசுதலும் எவர்க்குந்தாழ்ந்து இருக்குதலும் தன்னைப்போலஅடுத்தவர்களை யாக்குதலுமாகிய இந்தமூன்றுமலைகளையும் பெருந்தகைமையோர் தாங்கவல்லவரெனவும் பொருள் தருகின்றமையால் உருபக அதிசய உதகி அலங்காரத்தோடுகூடிய சம்பவ அலங்காரம். (அரு)

---

## மானம்.

பகட்டாட் குலுக்கரிவை பஞ்சரடிமே லடியாய்
முகத்தாட்டட ஞழ்ந்துமுன்னேற்றல்—அகட்டாட்டின்
உண்ணிலையைப்போறறுவர்போன் றுறறசெயல்போல்வனவாம
தண்மனையிற் காண்டுகிலோஞ்சற்று.

பகட்டு — எடுப்புக்தனமாக
ஆண்குலுக்கு அரிவை — நாணம், மடம அசசம் பயிரப்பு என்னுங் குணங்களின்றிய பெண்களையும்
அகத்தாட்டின் — (ஆண்மக்களில்) வயிறறுப்பிழைப்புக்காக
பஞ்சர் — அறபாகளின்பிறகே (அவர்களது)
அடி மேலடிஆய் — அடிச்சுவடின்மேல் தன்காலடிகளை வைத்து
முகததாட்டுடன் — இச்சகமுகத்தைக் காட்டுதலுடன்
ஆழ்ந்து — தலைகுனிந்து
முன்ஏற்றல் — (அவன்) சமுகததில் யாசித்தலையும்
உண்இலையை — சாப்பிடுத[illegible]கு உபயோகிக்கும் இலையை
போறறுவர் போன்று — சாப்பிடும[illegible]ம் புனிதப்படுத்தி (சாப்பாடானவுடன் அதனை அலக்கழித்து எறிந்துவிடுகின்றவர்களை) ஒத்துக (காரியங்கூடுமட்டும்)

உற்ற செயல் போல்வனவாம் — நயவசனித்தலும் மாய்மால மூங்காட்டுகின்ற செயல்களையும் இவைபோன்றசெயல்களையும்

தண் மனையில் — நற்குணம் நற்செய்கைகளையே சார்பாகஉடையகுடும்பத்தில்

சற்று — சற்றாவது (நாம்)

காண்டுகிலோம் — காண்கின்றிலோம்.

நற்குணம் நற்செய்கைகளையே சார்பான குடும்பத்தில் சாந்தமும் மரியாதையும் விளங்குகின்றமையால் "தண்குடி" என்றார்(அசு)

நாபியுடைத்துயிரு நத்துமதைநாண்குறைக்காய்ச்
சாபிணிக்கக்கோடலுண்டீர் தான்பாலும்—ஓவாதாம்
மரியாதைப்பங்கமயோ மாற்றுநோய் மாண்டார்போல்
அறியாதுங் கொள்ளாரறிந்து.

நாபிஉடைத்து — வறசநாபியில் தங்கி உரித்தாயிருக்கின்ற

உயிரும் — செந்துக்களும் (அதில்)

நத்தும் — விருமபியிருக்கின்றன (அதுபோல)

மரியாதை பங்கம், ஐயோ நோய் — மானபங்கம் (கிழமக்களுக்கு உரித்தாயினும்) ஐயோ (அநதப பசச நாபியைப்போல) வியாதியை(இது)

மாறறும — நீககாதாம் (மேலும்)

அதை — அந்தப்பச்சநாபியைத்

நாண்குறைககாய — (தான் இரகசியததில் செய்த) மரியாதை பங்கத்துககாக

சாபிணிகக — மரணம் நேரிடும்படி

கோடல் — உட்கொண்டு உயிாவிடுதலை (உடையாருமா)

உண்டு — இருக்கின்றனர் (ஆதலால்)

ஏர் தான் பாலும் — மானபங்கம் நேரிட்டபின்னர் உயிர்விட்டமையால இந்தச்செயலுமா மரியாதைப் பஙகத்துக்கு வியாதியைத் தீர்க்கும் பச்சநாபியை ஒப்பிடுஞ் செயலும்

ஓவாதாம் — பொருநதிவராவாம்

மாண்டாா போல — (இவ்வாறு மானபங்கம் நேரிட்டபின்னா) உயிர்விட்டவர்களைப்போல

| | |
|---|---|
| அறிந்து அறியாதும கொளளார | (பெரியோாகள் மரியாதைபபஙகத்தை) அறிநதா வது அறியாமலாவது கைககொள்ளமாட்டாா கள் |

மரியாதைப்பஙகம சீழமக்களுககும வற்சாபி, பசசாபி புழுவுககும இடமாயிருககும விஷயததில ஒத்திருககினும பசச ாபியோ ரோகையதீர்ககுங குணம இருபபதால் இதை மரியாதை பஙகததுககு ஒபபிடலாகாதென்றனா. (௭௭)

ஓடமனுட் பண்டமாறறேகண்டு மோய்மாதைப
போடலருந தோனோபுரட்டுருட்டும்—கூடறிய
வெககியனாககண்டு வெறிகுறளாந தூர்ததமிவா
விககியது மெசசியது வேமபு.

| | |
|---|---|
| ஓய் மாதை | (தன்கற்புசகு பஙகம் நேரிடுகின்றதாயிருககின்) உயிரவிடுகின்ற கறபுடைய மாதாசுகளை ம |
| கண்டும | கண்டும |
| ஓடமனுள் | (துறைமுகத)தோணியைபபோல(பலருக்கும) இடஙகொடுககின்றவளாகிய |
| பண்டமாறறே | (விபசாரிகளது) வியாபாரமும |
| போடல் அரும் | (உண்மையும வாககு மாறுமையும் பொருநதி யிருபபுதால) கிடைத்தலுககு அருமையான |
| தோல்நோ | சததியவாசகன் முன்புச்கு |
| புரட்டுருட்டும | புரட்டுருட்டுசசெய்தலும |
| கூடி அறிய | (இபபுரட்டுருட்டு வெறி, கோள அவதூறு உடை யவாகளது) தேகததைக காணுதலுககும் |
| வெககியனை | அஞ்சுகின்ற நல்லோாகளைக |
| கண்டும | கண்டும |
| வெறி குறள தூாததமஆும | குடித்து வெறித்தலும கோட் சொல்லுதலும்அ வதூறுபேசுதலும் நடநதேறிவருகின்றன |
| இவர் விககியதும் | (இவ்வாறான) புரட்டுருட்டர் வெறியா கோளா தூாததராகிய இவாகளைச (சிலா புகழநதுபே சித) துள்ளிவிழுதலும் |
| மெசசியதும | மெச்சிபபேசியதும |
| வேமபு | (பெரியோாகளுககுக்) கசபபாம |

கீழ்மகன் நல்லோர்கள் செய்கைகளைக் காண்கினும் சீரடையானென இதிற் குறிப்பித்தனர். (அஅ)

---

## முயற்சி.

பொய்யாதிமாற்றம்புகா மூப்புவாத்தியயன
செய்பருவமூன்றின் திருவொழுக்கான்—கையாற்றி
நடுவிரண்டி றபதமொடு நலமாணக்கன்றாங்கல்
கடாதருட்கும் காக்குங்கடை.

| | |
|---|---|
| தாள | முயற்சியுடையான் என்றுசொல்லப்படுகிறவன் |
| பொய், ஆதி | பொய்முதலிய |
| மாற்றம | சதுருத்தனம (தன்னில்) |
| புகா | பிரவேசியாமல் |
| மூப்பு | (பாலியத்தில தனக்கு) மேற்பட்டவாகளாலும |
| வாத்தி | (சிறுபிராயத்தில்)வாததியாலும |
| அயயன் | (வாலிபப் பிராயத்தில்) ஆசிரியனுலும |
| செயபருவம் | செய்யப்பட்ட பருவங்களாகிய |
| மூன்றின் | மூன்றினுலுண்டான |
| திருஒழுக்கான் | பரிசுதத நல்லொழுக்கததால் (கிடைத்த) |
| கையாற்றி | (கல்விசசெல்வம பொருட்செல்வங்களைத் தேடி மேறகூறியமூன்றுதரததாகளையும்)பாதுகாத்து |
| நடுவிரண்டில் | நடுவான ஆடவப்பருவததிலும் மூததோன்பருவததிலும் |
| பதமொடு | பிரமாசசாரி முதலியபத்துபபேரையும் பாதுகாப்பதோடு |
| நல் மாண க்கன் தாங்கல் | நற்குண நற்செய்கைகளையுடைய மாணக்கனுண்டானல் அவனுக்குச் செய்யவேண்டிய பக்குவத்தைச் செய்தலோடு |
| கடை | கடையான விருத்தாப்பியப்பருவத்தில் |
| கடாது | (மேற்கண்டமுயற்சியைத்தன்னல்வன்றமட்டும்) விடாமல் கைக்கொண்டு |
| அருட்கும் | (தெய்வக்) கிருபைக்காக |
| காக்கும் | காத்திருப்பன் |

ஏழுவயசுவரை பாலியம், பதினாறுவயசுவரை சிறுபிராயம்,மு ப்பத்திரண்டுவரை வாலிபனாகிய புருஷன், நாற்பத்தெட்டுவரை ஆட வன், அறுபதுவரை மூத்தோன், அறுபதுக்குமேல் விருத்தாப்பியம்.

அமைத்தவைக்கேய்ந்து மதற்கிணங்கி வீண்போக்கா
திமைப்புழியுந்தாமுயன்று மீடேற்றில்—உமறசெயலென்
றடுத்துழற்ற நீர்நிழலுமாண்டே விளித்திடுமோ
துடித்தோடிக்கொண்டவாக்கோதுன்பு.

| | |
|---|---|
| ஆண்டே | அவ்விடத்திலுள்ள |
| நீர் நிழலும் | தடாகமும்(அத்தாடகத்தையடுத்த)சோலைநிழலும் |
| விளித்திடுமோ | தவனமுடையோர்களை வலிய அழைத்திடுமோ |
| துன்பு | (அந்த) தாகமாகிய துன்பம் |
| துடித்து | (துடி) துடித்துவிரைந்து |
| ஓடிகொண் டவர்க்கோ | ஓடி விடாயைத தணித்துக்கொண்டவர்களுக் கு உண்டோ |
| அமைத்த வைக்கு ஏய்ந்து | (ஆதலால் இறைவன்) விதித்தவைகளை ஒப்புக் கொண்டு(நல்வினைப்பயனிருந்தால்தான் கிடை க்குமே என) |
| இமைப்புழியும் | இமைப்பொழுதாவது |
| வீண்போக்காது | வீணானநேரம்போக்காமல் |
| அதற்கு இண ங்கி, முயன்று | அவ்வாறான காரியசித்தி, (எப்படிப்பட்டதாயி னுமதனைக்) கைக்கொண்டு முயற்சிசெய்தும் |
| ஈடேற்றில் | முன்வினைப்பயன் ஈடேற்றஞ் செய்யாவிடின் |
| உமன்செயல் | தெய்வச்செயல் |
| என்று அடுத்து | (எவ்வாறே) வென்று (அடுத்) தடுத்து |
| உழற்ற | முயற்சிசெய்யுங்கடவன் |

நீருஞ்சிழலுந் தனக்குக் கிட்டும்படி பக்கத்தில்இருப்பதுபோ லொத்த காரியசித்தியுமுண்டு;வருத்தப்படினும் சித்திக்காதகாரியசித் தியு முண்டு என இருவகையாய்ப் பிரித்திருக்கின்றனர். (௩௦)

குதுகுலிப்புமேக்கறுப்புங் கோட்டமுநற்கோதரியலார்
எதுவரினுமேளனமு மெண்ணிலரால்—பொதுமுறையார்
கண்டபொருளோட வம்பியோடாதென்போர் களையைக்
கண்டவுடன் கொண்டாட்டுக்காண.

| | |
|---|---|
| பொதுமுறையார் | பொதுவானசனங்கள் |
| கண்டபொருள் | (தாங்கள்) கண்ணிற்கண்ட பொருட்கள் |
| ஓட | ஓடுகின்றதேயன்றி |
| அம்பிஓடாது என்போர் | கப்பல் ஓடாமல்நிற்கின்றது என்று சொல்லுகின்றவர்களாயினும் |
| கரையை | (அடுத்த) கரையைக் |
| கண்டவுடன் | கண்டவுடனே |
| கொண்டாட்டு | மனமகிழ்ச்சியாம் |
| நற்கோளியலார் | (இவ்வாறே தானெடுத்துக்கொண்ட) நன்மையானகருமங்களைச் செய்யும் தன்மைஉடையார |
| ஏக்கறுப்பும் | (பின்னனுகூலத்தை அறிந்திருப்பதால் மற்றவர்கள் ஆளைப்பற்றிச் செய்யும் குறைவுகளையும் |
| கோட்டமும் | இளக்கரிக்கப்பண்ணுதலையும் |
| ஏளனமும் | அசட்டைபண்ணுதலையும் |
| எண்ணிலர் | (ஒருபொருட்டாக) நினைக்கமாட்டார்களிப்படி |
| எதுவரினும் | (மற்றவர்கள் தான்செய்யும் முயற்சியை இகழ்ந்து) என்ன நிந்தைசெய்யினும் (அது அவர்களுக்கு) |
| குதுகுலிப்பாம் | மனமகிழ்ச்சியேயாம் |

ஆல், காண் - அசைநிலைகள்.

தாமெடுத்துக்கொண்ட காரியத்தை முடிக்கும்வலிமை நுட்ப அறிவுடையவர்களுக்கே உரியதெனக்காட்டச் சமுத்திரத்தின் கரைதுறைகளை யறிந்த மாலுமிக்கு முயற்சியுடையானை ஒப்பிட்டுக் கூறியிருக்கின்றது. (கூக)

## கூடாவொழுக்கம்.

எந்தெந்தவூ ழெவனினேன்றபடியே யிணங்கும்
நந்துபிழை முப்பொறியானுடுவலும்—பந்தனர்
என்றுய்ந்துகாண்க முகமெட்டி னதைவிட்டொழிக
தென்றுலங்கி னன்றொழிக சென்று.

| | |
|---|---|
| முப்பொறியால் நந்து | மனம் வாக்குக்காயங்களினால் (நல்லொழுக்கம்) கெடும்படியாக |
| பிழை | (தங்கள்தங்கள்) குற்றத்தின்படி |

எவனில் (எவ) னேவனில்
எந்தெந்த என்னென்ன
ஊழ் தன்மை
ஏன்றபடியே இணங்கும் அமைந்திருக்கின்றதோ (அதற்குத்) தக்கபடி தான்கூடிச் சிநேகிப்பன்
காடும் வலும் (ஆதலால் ஒருவனை அகஸ்மாத்தாய்க்) கலந்து கொள்ளும் அவசியம் நேரிடினும்
பந்தனார் (இவனுக்குச்) சிநேகன் யார்
என்றாய்ந்து என்று நன்றாய் விசாரித்தறிந்து
சென்று முகம் காண்க எட்டின் (அவன் நல்ல கூட்டுறவைப் பொருந்தியிருப் பானாயின் அவனிடத்தில்) போய (அவனது) முகதரிசனையைக்கண்டு வார்த்தையாடுக (அசச மையததில் ஏதாவது) குற்றங்கண்டு பிடிககப் பட்டால்
அதைவிட்டொழிக அக்குற்றங்களையும் அவனையும் மனதில் முழு லாய் வையாமல்விட்டு நீங்கவேண்டும்
தென் துலங்கின் (ஒருவனை யோக்கியனென்று நினைத்துக்கூடி. ன பின்னரும்) ஏதாவதுதீயொழுககங்கண்டு பிடிக்கப்படின்
அன்று அப்பொழுதே (அவனை)
ஒழிக விட்டு நீங்கக்கடவன்

நல்லொழுக்கமுடைய இயற்கைக்குணததானுந தீயொழுக்கத் தன்மையுடையானும் எளிதில் ஒன்று கூடாரெனக் குறிப்பித்து "பந் தனொன்றாய்ந்து" எனவுங்கூறினர். (கூஉ)

துரியவெரியழலின் றுணைதூரமத்துணைமேல்
அருமையுறவெளிதோவாஜெடிது—கருவறுப்பே
தற்சேர்ந்தார் தற்குடியுந் தனுவொன்றே யூன்றிக்கு
முப்பாலே பார்க்கார் முனிந்து.

துரியம் துரியாதீதமாகிய மோக்ஷத்துக்கும்
எரியழலின் எரிவாய் நரகத்துக்கும்
துணைதூரம் (எவ்) வளவுதூரமோ
அத்துணை அவ்வளவுதூரமாக

| | |
|---|---|
| மேல் | மேல்மக்கள் விலகியிருப்பார்கள் |
| உறவு | (ஆதலால் அவர்களது) கூட்டுறவு |
| எளிதோ | இலேசில் கிடைக்குமோ |
| அருமை | (கிடைத்தலுக்கு) அருமையாம் |
| இது | இந்தக்கீழ்மக்களது (கூட்டுறவோ) |
| தான்,சேர்ந்தார ஆனொடுதற்குடியும் | (தனது தேகம் மாத்திரமல்ல)ஆன்மாவாகிய தன்னை [illegible] தன்னைச்சேர்ந்தவர்களது ஆன்மாக்களையும் தன்குடும்பத்தையும் |
| கருவறுப்பே | கருவறுத்துவிடும் (ஆனல்) |
| ஊன்றிக்கு தனு ஒன்றே | பல்லை ஊன்றி விஷத்தை ஊற்றுகின்ற சர்ப்பத்துக்கோ உடலொன்றுதான் (நாசமடையும்) |
| முனிந்து மு பாலே பார்க்கார் | (ஆதலால் பெரியோர்கள இவர்களைப் பற்றி) வெறுப்படைந்து மனதினுலும்கினையாவாயினுலும் பேசார இவாகளைத் தீண்டவு மாட்டார்கள் |

சிற்கூட்டுறவு நரகத்தையும் மேற்கூட்டுறவு மோக்ஷத்தையும் தருமெனக் குறித்தமையால் எதாசங்கிய அலங்காரம். (கூ௩)

விண்வட்டங்கையோடுகிண்ணி யிருவிண்ணொளியார்
கண்கண்டவாட்டேனுங்கான் மயிர்வான்—விண்மீனின்
புக்குளைவாய்தண்ணுவாற் பூத்தலொடுமேலகூட
மூக்காலுங்காணுமுகம்.

| | |
|---|---|
| விண்வட்டம் கையோடு கிண்ணி | (கவிநதிருக்குதலையுடைய) ஆகாயவட்டத்தை ஒற்றைவிரலில் நின்று சுற்றுமபடி (செய்து)கிண்ணியாகவும் |
| விண் | ஆகாயத்திலுள்ள |
| இரு ஒளி | சந்திரனையும் (சூரியனையும்மற்றக்கையில் ஆடும்படி செய்கின்ற) அம்மனைக்காயாகவும (பொருந்தி) |
| விண்வால்மீனின் | வாலநட்சத்திரங்களை |
| வாய் | (தன்) வாயினிடத்தில |
| புகுது | புகுந்தி |
| உளை | அதினுடைய) துவாரத்தினிடத்தில் |

| | |
|---|---|
| தண்ணாவால் | குளிர்ச்சியுள்ள நாவினால் |
| மயிர்க்கால் | உரோமத்தினது நுனியைச் |
| பூத்தலொடு | செலுத்தி (அவ்வால்நட்சத்திரங்களை) கோர்த்த லோடுகூடிய |
| ஆட்டு,பார்:கண் கண்ட ஏனும் | விளையாட்டை பூமியில் (இனிமேல்) நமதுகண் காணும்படியாகக் கிடைத்தாலும் |
| மேல்கூட முக்காலும் | மேல்மக்கள் (கீழ்மக்களோடு கூடியிருக்குதலே) உண்மையாகவே இதற்குமுன்காணவுமில்லை இப்பொழுதும காண்கின்றது மில்லாதது போல இனிமேலும் |
| முகம் | (நமது) முகங்கள் |
| காணா | காணமாட்டாவாம் |

"முக்காலும்" என்பதை இறந்தகால நிகழ்கால எதிர்காலங்களெனவும் உண்மையாகவும் எனவும் பொருள்படும்படி சிலேடையாகக் கூறினர். (கூச)

---

## நட்பியலொழுக்கம்.

பிழைக்காது நற்குடியான் பிழையோர்ப்புந் தூற்றஞ்சி
இழைக்காதஞ் சாதுபயனெள்ளொடுமூன்—றிழைத்தறியா
மாண்பொத்தியல்பு கொளுவன் செயற்கைக் கேள்கேளே
பேண்கூத்தாராவர்பிற.

| | |
|---|---|
| அஞ்சி பிழைக காது | (தனது குடிப்பிறப்புக்குக் கீழ்மைவந்து ஆரம்பித்துவிடப்படாதேஎன்று) பயந்து (யாதொரு) குற்றச்செயல்களைச் செய்யாமல் |
| நற்குடியான் | நற்குடிப்பேற்றுக்குத் தகுதியுள்ளவனாகி |
| தூறு பிழை ஓர்ப்பு | ஒருவன் செய்த அவதூறையாவது ஒருவன்செய்த குற்றங்களையாவது ஆராய்தலோடு |
| இழைக்காது | (அதனை ஓர்பொருளாக நினைத்தால் தனக்கே குற்றம் ஆகுமெனமனதில்)பேணிவைக்காமல் |
| அஞ்சாது | (சிநேகபங்கம் வந்துவிடப்படாதேஎன்று) அஞ்சாமையும் |
| பயன் | சிநேகப்பிரயோசனமும் |

| | |
|---|---|
| எள்ளுடு | (சிநேகத்தை) அற்பமாய் நினைத்தலும் |
| மூன்று | ஆகியமூன்றையும் |
| இழைத்தறியாத | செய்யத்தெரியாத |
| மாண்பு | நற்குண நற்செயல்களை |
| இயல்பு,ஒத்து | இயற்கையாகவே அமைதலைப்பொருந்தி |
| கொளுவன் | இருக்கின்ற வலிமையோடு |
| செயற்கை | செய்யப்பட்ட |
| கேள்கேளே | சிநேகமே நட்பு என்னப்படும் |
| பிற | (இவ்விலட்சணமில்லாத)மற்றவர்கள் |
| பேண் | போதுமானபடி கொடுத்து உற்சாகப்படுத்தினுல்மட்டும் |
| கூத்தர் ஆவர் | (நல்ல சாலவித்தை காட்டுதலும் பயப்படுதலும் மேன்மையாக நினைத்தலும் இல்லாவிட்டால் மேற்கூறிய மூன்றுசெயலிலும மாறுபடுகின்ற)கழைக்கூத்தரை ஒத்தவர்களாவார்கள். |

கழைக்கூத்தர் திருஷ்டாந்தத்தை எடுத்தாண்டு சிநேகர் ஆகாதவர்களது இலக்கணத்தை இங்கு நன்றாக விளக்கினர். (௩௫)

கொடுக்குங்காலோதியினுங் கொள்ளுங்கா னம்மதலென்
றடுக்காதென் றம்மாகியாண்டினைமுன்—றிடுக்கூட்டிச்
சோகஞ்சேர்ந்தோன்மனைக்குச் சூலாய்த்து வன்றுமவள்
ஏகங்காணுக்கோ ளெனில்.

| | |
|---|---|
| கொடுக்குங்கால் | (சிநேகனுக்கு ஒன்றைக்) கொடுக்கின்றபோது |
| ஓதியினும் | மேகத்துக்கு தனது சலத்தைக்கொடுத்து முழுக்கஞ் செய்தலையுடைய சமுத்திரத்தைப் போலவும் |
| கொள்ளுங்கால் | சிநேகிதனிடத்தில் ஒன்றை) வாங்கிக்கொள்ளுங் காலத்தில் (அதனை) |
| நம்மது அல | நம்முடையது அல்ல |
| என்று | வென்றும் |
| அடுக்காது என்று | (வாங்கினதை அபகரித்தால்சிநேகத்துக்கு) அடுக்காதென்றும். |

| | |
|---|---|
| அம் ஆகி | (மேற்படியும் அந்தச் சமுத்திரத்தில் வலியப்போய மழையாகப் பெய்துகொடுத்து விடுகின்ற) மேகத்தைப்போல (வலியக் கொண்டுபோய் வாங்கினதைக் கொடுக்கின்றவ)னாகி |
| சோகதோன் | (கன்னிடத்தில்பேசும்படி) வந்தவனாகியஒருவன |
| உரைமுன் ஆண்டு | (தனது சிநேகனைப்பற்றி) தூறுதலசொலலி முடியுமுன்னதாக அச்சமையத்தில |
| சோகம | நான்தான அவன் (எனத) |
| திடுக்கூட்டடி | (தூறுதல்சொல்லும அவனுக்கு வெட்கமும அதனாலமனம) ஆற்றாமையுமுண்டுபண்ணி |
| சூலாயமனைக்கு | (சிநேகனது) மனைவிக்கு பிள்ளையாகி |
| அவன் ஏகம | (இவவாறு பிள்ளையாகத் தன்னைப் பாவிக்கினும அலலது தனனை பிதாவாக அவனைபாவிக்கினும) அவனோத தனிமையாகக |
| காணக்கோள | கண்டு வாராததையாடாத செயலகளையும |
| எனில | பொருந்தியிருந்தால் |
| துவன்றும | சிநேகமானது வளாநதோங்கும் |

நான்தான் அவன் எனச சிநேகனைப் பாவிக்கினும அவனது மனைவியையும பாவிக்கவேண்டிய விதரதைஉணாததுமாறு "மனைக்கு சசூலாய்" என்றா. (சுசு)

> தீமானபோரகேளகேளே செப்பிலமைக் கூத்தியொன்றோ
> தீயபுலன்செல்வழிக்காயச செய்மனையும—நாயகனே
> நீபகுவரைவேகின்றூ றொன்றுலநீ தீட்டலென்றோ
> தீய்ப்பிணத்தைப் பாரததுச சில.

| | |
|---|---|
| தீமான்போர | (நல்லொழுக்கமில்லாதவன் தன்னைப்போல நல்லொழுக்க மிலலாதவனை சிநேகிப்பனென ஆகம பிரமாணமுண சொல்லியிருக்கின்றமையால) பெ லலாதவாகள |
| கோள கேளோ | (ஒருவருக்கொருவா செயயும) சிநேகமும சிநேகமேயாம |

| | |
|---|---|
| அமை கூத்தி எனோ | இப்படியிருக்கப் பொல்லாதவர்களது சிநேகம் சிநேகமல்லவெனக்) கழைக்கூத்தாடி திருஷ்டாந்தத்தைக்கொண்டு நிரூபித்துக் காட்டுவானெனக் |
| செப்பில் | கேட்கில் |
| தீயபுலன் செல்வழிக்காய் | தீயொழுக்கத்தில் ஐமபுலனிசையையும் நிறைவேற்றவேண்டி |
| செய் | (ஒருவரையொருவர்மோசஞ்)செய்கின்ற |
| மனையும் நாயகனே | (இருவரீயும்) மனைவியும் புருஷனும் என்றுஆகமங்கூறுவதுபோல உபசாரவழக்கேயாம் |
| சில தீய்பிணத் தை பார்த்து | (சுடப்படுகின்ற) சிலபிணத்தைப் பார்த்து |
| தீய்க்குவரை | (அப்பிணத்தைச்) சாம்பராகுகும்வரை |
| வேகின்றார் | (இன்னார்) வேகின்றனர் |
| என்றுலகு | என்று உலகத்தாருங்கூட |
| தீட்டல்லஎனோ | சொல்லுதல்யாதுகாரணம்(உபசாரவழக்கல்லவா) |

பொல்லாதவர்கள் ஒருவருக்கொருவர் செய்யும் சிநேகத்தைச் சிநேகமென்று ஆகமமும் உலகமுங் கூறுவது உபசாரவழக்கென்பதைநிரூபித்துக்காட்ட "தீயபுலன் செல்வழிக்காய்ச்செய்மனையு நாயகனே" எனவும் இவ்வாறாகவே உபசாரவழக்காய்க் கூறுவதுவழக்கமெனக்காட்ட "தீய்ப்பிணததைப்பார்த்து வேகின்றாரொன் றுலகு தீட்டலெனோ" எனவும் கூறினர். (கூஎ)

---

## கீ ழோ ர்.

தூக்கிவிடுதறு லைத்தனெடுநாட்பயினை
மூர்க்கமொடு தீக்குணமே முன்னேட்டல்—கீழ்க்கோளே
பச்சதாபக்கனியைப் பாரார்பகுத்தறிவோ
துச்சனர்க்கு முண்டோசுகம்.

| | |
|---|---|
| தூக்கிவிடுதல் | (ஒருவருக்கொருவர்)விரோதத்தைமூட்டிவிடுதல் |
| நெடுநாள் பயினை | புருஷனும் மனைவியுமாக இருந்து நெடுங்காலம் வாழ்கின்றவர்களை |
| துலைத்தல் | வாழவொட்டாமல்பிரித்தல் |
| மூர்க்கமொடு | அகங்காரத்துடனே |

| | |
|---|---|
| தீக்குணமே | துறவ்சயகைகளையே |
| முன்னேட்ட | எஙகும் பரவச்செய்தலாகிய |
| கீழ்க்கோளே | இவைகளும இவைபோலவனவுங் கீழ்மக்களுக்கே உரிய செயல்களாம் |
| பச்சதாபி கனி யை | இதனல் இவாகளுககு இன்பமில்லையோவென கேட்கில தான்செயதுகொண்ட அக்கிரமத்தைநினைத்து மனஸ்தாபப்படுதலாகியகனியை |
| பாரார் | (என்றைககாவது) கைககொண்டிராதவாகளாகிய கீழமக்களுக்குப் |
| பகுத்தறிவோ | பகுததறிவுண்டோ |
| துசசனாககும் | (பகுத்தறிவில்லாதஇந்த)துனமாாக்கர்களுககும் |
| சுகம உண்டோ | இகத்திலேயாவது பரததிலேயாவது) இன்பமுண்டோ (இலலையாம) |

பசசாதாப மில்லாதவர்களுக்குப் பகுத்தறிவில்லை பகுததறிவில்லாதவர்களுககுக சுகமில்லை என முறையே காரணங கூறினமையால் காரணமாலா அலங்காரம. (கூஅ)

கூழடுத்தவள்ளாடாயக் கூப்பயலாம் வெள்ளிடியாயத்
தீழலரோ நாலேந்துதிஙக டநதை—ஊழுடையான்
குடிவழக்கென்னு நேர்கொள்கை கெட்டோ மேலென்றல்
பிடிவாதமையோபெறு.

| | |
|---|---|
| கூழ்அடுத்த | (தன்னை அடுத்தவர்களை அடியோடு கெடுப்பதில்) பயிர்வகைகளைக கிட்டிசசேர்நத |
| வெள்ளாடாய் | வெள்ளாட்டைப்போல |
| வெள்ளிடியாய் | மோசஞ்செய்து |
| பயலாம், கூ தீழலரோ இஙகு | தன்னை மேல்மகன்போல நினைத்துக்கொண்டு அயலாரை மரியாதைக்குறைவாக சிறு பயல்களைப்போல கூப்பிடும் மரியாதையற்ற கீழமககளே இவ்வுலகததில் |
| ஆய்ந்து, நால் | வருந்தித தொஙகுகின்ற |
| அடு அம ஊழுடையான், தந்தை குடிவழக்கு | (கொலைபாதகனைக்)கொலைசெய்புந்தகப்பனைப்பற்றி (மகன் எனது தகப்பன் கொலைபாதகாகளைக் கொலை செயதது) குடிவழக்குககு இசைந்ததாகையால்(நானும்என்குடும்பமுமகீழ்மக்களல்ல) வென்பன் (இது நியாயம்) ஆனல் நீஙகளோ; |

கொள்கை கெட்டீர் — நற்செய்கைகளை இழந்துவிட்டவர்களாகயிருக்கின்றீர்கள் (நியாயமஇப்படி யிருக்கத்தகவிலா)
மேலென்றல் — மேலமக்களென்று சொல்லுதலானது
ஐயோபிடிவாதம் — ஐயோபிடிவாதமாம்
பெறு — (ஒருபோதும்நீங்கள் அவ்வாறுசொல்வது)செல்லமாட்டாதாம்

அரசனும் பிரஜைகளும் ஒத்துக கொலைபாதகனைத தூக்கில் போடுவதால் குடிவழுக்கென்றார். (கூகூ)

---

## மேலோர்.

பொறுத்தன் மிகப்பெருமை பொறுக்காதல் கீழ்முறைமை
பொறுத்தல் கூடாதென்றற்போ யதுக்கக்—கறிபபாண்டக்
கொள்ளைக்குப் பூட்டாகுங கூழழிக்கு வேட்டாகும
தள்ளிவிடிற் கொட்டணலஞ் சற்று.

பொறுக்காதல் கீழ்முறைமை — பொறுதியில்லாதது கீழ்மக்களது குண மாதலால்
பொறுத்தல் மிக பெருமை — (எதையும்) பொறுத்துக்கொள்ளுதல் மிகவும் பெருமைக்குணமாம் (ஏனெனில்)
கறிப்பாண்டம் கொள்ளைக்கு — (பதார்த்தமுதலியவைகளைச்) சமையல்செய்யும் பாண்டத்தை (நாய்வந்து) சிதைத்தலுக்கு (அது உட்பிரவேசியாதபடி)
பூட்டாகும் — (வீட்டுக்குப்) பூட்டுப்போடவேண்டியது அவசியமாம்
பொறுத்தல்கூடாது,என்றால் — (இந்நியாயப்படி நாம்விலகியிருந்தும் கீழ்மகனது தொந்தரை) பொறுகக முடியாதாயின்
கூழ் — (மிருகங்கள் வந்து) பயிரைக்
அழிக்கு — கெடுத்தலுக்கு
வேட்டாகும் போய் — வெற்றுவேட்டுப் போடுகின்றதுபோல (அவனிடத்தில்)போய்
அதுக்க — பயமுறுத்துக (இதற்கும்)
தள்ளிவிடில் — (அவன்) மிஞ்சுவானுயின்

| | |
|---|---|
| சற்று | (அவனுக்கு மோசம் நேரிட்டாவண்ணம்) சற்று |
| கொட்டல்நலம் | தண்டிப்பது நன்மையாம் |

பெரியோர்கள் மிகு வலியுள்ளோர்களைக் காட்ட "சற்று" என்றார். (௧00)

உடும்பே ஏனம்பாம்பல்ல வொண்ணடையார் பிச்சிலதே
எடுத்துரைப்பானற்செயலா மென்கரணம்—முடிந்திடுமோ
கடங்கொடுத்த கோமகனார் காண்டமதைப் பார்த்தெடுக்கும்
இடந்தெடுக்குஞ் செம்மரபே என்று.

| | |
|---|---|
| ஒள்நடையார் | பரிசுத்தநடக்கையையுடையபெரியோர்கள் |
| உடும்புபாம்பு ஏனம் அல்ல | (இரண்டுநாக்கையுடைய) உடும்பும்பாம்பும் (எவ்விதத்திலும்புனிதமற்ற)பன்றியும்அல்லவாம் |
| பிச்சு இலதே | (களங்கமற்ற) பிச்சு இல்லாதபுறாவாம் |
| எடுத்துரைப்பான் | (அவர்களது பெருந்தகைமையை) எடுத்துப்பேசும்படி |
| நற்செயலாம் | (மனமாகி) நினைத்தலையும் (சித்தமாகி) ஒன்றுவித்தலையும் (புத்தியாகி) நிச்சயித்தலையும் (அகங்காரமாகிக்)கொண் டெழுப்புதலையும் (ஆன்மாவுக்கு)உணர்த்துகின்ற |
| என்கரணம் | எனது அந்தக்கரணத்தினாலே |
| முடிந்திடுமோ | முடியுமோ (ஆனால்) |
| கடங்கொடுத்த | (நானறிந்தமட்டில்சொல்லவேண்டுமாயின்யுத்தத்தில் தன்)தேகத்தைக் கொடுத்த |
| கோமகனார் | (ஒரு) அரசனுக்குப் பிறந்தசிறுவனே |
| காண்டமதை பார்த்து எடுக்கும் | (தன் தந்தையைக் கொன்ற அரசன் பரீட்சிக்குமாறு அனேகதின்பண்டங்களை எதிரிலேயும் ஆயுதங்களைப் பின்னாலேயும் வைத்திருந்தும் அச்சிறுவன்தின்பண்டங்களை விரும்பி எடாமல்) ஆயுதங்களையே பார்த்து எடுத்தனன் |
| என்று | (அதுபோல பெரியோர்கள்உலகத்தில் தங்களைவசப்படுத்தும்படியான எப்படிப்பட்ட துற்செயல்களிருக்கினும் அவற்றைவிரும்பாமல்தாங்கள்) மனமொத்துத் |

| | |
|---|---|
| இடந்தேடுக்கும் | தேடியெடுப்பது |
| செம்மரபே | நல்லொழுக்கமேயாம் |

பெரியோர்கள் "உடும்பேனம்பாம்பல்ல" என்றமையால்கீழ் மக்களை உடும்பு பாம்பு பன்றிக்கு ஒப்பிட்டு இருக்கின்றனர். (கO௪

கற்றோர் கருத்தீர்க்குஞ் சாரபினரோ காணுமவர்க்
கெற்றாமெனவளை யீரோய்ந்திடுவீர்—சற்றருளி
வாசியேமென்னு மறைகளங்க வேண்டாம்
தேசுபெற்றுத் தந்ததுபோற்றெவ்வு,

| | |
|---|---|
| கற்றோர் | கற்றறிந்த பெரியோர்களது |
| கருத்து ஈர்க்கும் | மனம் தன்வசமாகும்படி |
| சார்பினரோ | (கற்காதிருந்தும் அவர்களைப்போல்) நடக்கின்றவர்களே |
| சற்று, அருளி | (தமியேனிடத்தில்) சற்று கிருபைவைத்து |
| காணும் | (நான்சொல்வதை) அங்கீகரிப்பீர்களாக |
| அவர்க்கு | அந்தக் கற்றறிந்த பெரியோர்களுக்கு |
| எற்றாம் என | (நாம்) எம்மாத்திரமென்று (உங்களை) |
| வளையீர் | (நீங்களே) இகழ்ச்சியாய்க்கருதாதிருப்பீர்களாக |
| ஏய்ந்திடுவீர் | (நீங்களும் பெரியோர்களுக்குச்) சமானந்தான் |
| தெவ்வு தேசுபெற்று தந்ததுபோல் | (எங்ஙனமெனில் அவர்களை அடுத்துப் பழகியாருக்கும் நன்மைசெய்வதினால்நீங்களும்)சந்திரன் (சூரியனிலிருந்து)ஒளியைப்பெற்று (உலகுக்கு) நன்மைசெய்வதுபோலவாம் (ஆதலால்) |
| வாசியேமஎன்னும் | (நூற்களை)வாசிக்க அறிந்திலோம என்று |
| மறை | மன அந்தரங்கத்தில் |
| களங்கம் வேண்டாம் | களங்கம்வைக்கவேண்டுவதில்லையாம் |

இதனால் வாசிக்க அறியாவிடினும்பெரிதல்ல நூற்களின் கேள்விகளை அறிந்து நடக்கவேண்டியது அவசியமெனவுங் குறிப்பித்தனர்.

வானேட்டந்தட்டினுந் தவாய்மை தட்டார் வாய்ப்பாற்றார்
தானப்பேர்கொண்டேக தந்தையேன்—ஆநசையார்
நட்டுவெத்தை யாற்றிவந்தோனத்தறபான் மூவருளோன்
இருட்டினாற் கேட்கவலார் கூர்ந்து.

| | |
|---|---|
| தானப்பேர் | (நான்) இடமடியாகப்பிறந்த நட்டாற்றியா னென்னும்பெயரை |
| கொண்டு | (இச்சமையத்தில்) பெற்று |
| ஏகதந்தையேன் | (அறுபத்துமூவரொன்ற இயற்பெயரை யுடைய) ஓரோபிதாவுக்கு புத்திரன் |
| நட்டுவந்தை ஆற்றிவந்தோன் நத்து | (இப்படியிருக்கினும் இக்காலத்தில் ஆதியிலுள்ளசிலவிதவான்களைக் குறித்துச்சிலா தஙகள் மனோராச்சியதத்துக்குஇணங்பபொருளைமாற்றிப் பலவிதமாய்ச்சொல்வதுபோல)நட்டுவதொழிலைச்செய்துவந்தவனெனவும்விருமபப்படததக்க |
| அறுபான் மூவருளோன் | அறுபத்துமூன்று பெயர்களைத்தப்பனுக்கொண்டவன் (என்னும்) |
| கொட்டினல் | (அறிவிற்சிறியவித்வான்கள்)பிடிவாதஞ்செய்துவிட்டால் |
| கூர்ந்து | (எனதுபின்னடியார்அப்பிடிவாதத்தை)ஆராய்ந்து |
| கேட்கவலா | எதிரதது்ரியாயஞ்சொல்லவல்லவாகள்ஆவார்கள (ஒருபோதும் ஆகமாட்டார்களாம்) |
| ஆநசையார் | (ஆனல் ஆ) ஆ (பெரியோர்கள் உள்ளதைஉள்ளதாகக கொள்வார்களேயின்றிஅவ்வாறுஒருகாலததிலுஞ் சொல்ல) விரும்பாாகள |
| வானோட்டம | (ஒருவேளை) கிரகஙகளுடைய ஓட்டஙகள் |
| தட்டினும் | நின்றுபோனலும |
| தமவாய்மை | தமதுவாய்மையில் |
| தட்டாா | குறைவு படமாட்டாாகள் |
| வாயப்பாறுர் | (சமையததுககுத்தககது)வாயாட வுமாட்டாாகள் |

ஆதியிலுள்ள சிலவிதவான்களைக்குறிதது பற்பலகட்டுக்கதைகள தறகாலத்தில் உண்டாயிருப்பதுநதவிர உன்சாதி என்சாதி யெனவும் உன்வம்மிசம் என்வமமிசமெனவும் பற்பல தாக்கஙகளும் வாக்குவாதமு முண்டானதை யறிந்து அவ்வாறு தன்னைப்பறறியும் பிறகாலததில் பொதுவான சனங்களுக்குள்ளே வாக்குவாதமுண்டாகாதபடிக்கும் தனதுபெயரும் தன்தந்தைபெயரும் அருசதத்தில் பின்னப்படுததாதபடிக்கும இஙகு "தானபபேர்கொணடே கதந்தையேன்" எனவுங கூறினர்.

பெரியோர் உள்ளதை உள்ளபடியே சொல்வார்கள் ஆனல் அவர்கள் பொருளை வித்தியாசப்படுத்திவிட்டால் தமதுசந்ததியாரால் என்னசெய்யக்கூடும் என்றமையால் அனுஞ்ஞை அலங்காரம்.(கoக)

---

## சதித்துவகாதகி.

கிஞ்சமமைத்தார்வலனைக் கீண்டிவிடு மூக்கறுக்கும்
தஞ்சனைச் சஞ்சலமே தன்மகவை—மிஞ்சிவிடும்
புததியயனீரிருப்பப் புழனீரைச சுண்ணமிட்டு
சிததி தாம்பூலமிடல் செவ்வு.

| | |
|---|---|
| கிஞ்சம் | அற்பத்தனத்தைப் |
| அமைத்து | பொருந்தச்செய்து |
| ஆர்வலனை | (தன்னிடததில்) அன்புள்ள கணவனை |
| கீண்டிவிடும் | (அவ்வன்பிலிருந்து) பிரித்துவிடும் |
| தஞ்சனை | தம்முடைய குடும்பததாரை |
| மூககறுக்கும் | மரியாதையைக கெடுத்துவிடும் |
| தன்மகவை | தன்னிடத்தில் பிறந்த பிள்ளைகளுக்குப் |
| சஞ்சலமே | (புத்திர பாரம்பரையாய்) நிந்தைமுதலிய துன்பங்களையே கொடுக்கும் |
| மிஞ்சி விடும் | (இவ்வாறு தடியிலிருந்தாவது குடித்தனததைவிட்டுப் புருஷனைப் பிரிந்தாவது விபசாரத்துக்காக) மீறி எடுப்புண்டு போகின்ற |
| புததி | புததியைப்பாரக்கிலும் |
| அயல்நீர் | பக்கத்தில சுத்தசலம் |
| இருப்ப | இருந்தும் |
| புழல்நீரை | சாக்கடை அசுத்தநீரைச |
| சுண்ணமிட்டு | சுண்ணாம்பில்விட்டு |
| சித்தி | அழகாய்த் |
| தாம்பூலமிடல் | தாம்பூலந்தரிக்கின்ற (புததி) |
| செவ்வு | மேலானதாம |

பக்கத்தில் கணவனிருந்தும் சோரநாயகனை விருமபுதல் புத்திரியுமெனக்காட்ட "புழநீரைச்சுண்ணமிட்டு சிதகி தாம்பூலமிடல் செவ்வு" எனத திருஷ்டாந்தப்படுத்தினா. (கoச)

பிறங்கேகஞ்சென்று புகழ்பேசித் தனியோடித்
திறம்பெதிர்த்தலாதி யொன்றாள் சிந்திறம்—பிறங்களியாச்
செண்பகங்கண் டோடளியுந் திசைகாட்டு நற்சீர்போன்
றுண்பார்க்கி னன்றேதுடைத்து.

| | |
|---|---|
| பிறம்கு | அயலானது மனைக்கு |
| ஏகம்சென்று | தனிமையாகப்போய் |
| புகழ்பேசி | (அயலானைப்பற்றிப்) புகழ்ந்துபேசித் |
| தனியோடி | தனிவழியாகநினைத்தஇடத்துக்கெல்லாம்போய்க் |
| திறம்பு | (கணவனது வார்த்தையைக்) கடந்து |
| எதிர்த்தல், ஆதி | (அவனை) யெதிர்த்துப்பேசுதல் முதலிய (துர்ச் செய்கைகளில்) |
| ஒன்றாள் சிந்தி | ஒன்றையாவது உடையவளாகிக் கற்பழிந்து போயினும் |
| பிறன், கு | அயலானுக்கு தன்தேகத்தை (அவன்) |
| அளியாள் | உருசிகரும்படி கொடாதவளது |
| திறம் | (இந்த) வல்லமையின் |
| உள்பார்க்கின் | உட்காரியங்களைக் கவனித்துப் பார்த்தால் |
| செண்பகங்கண்டு | செண்பகமலரைக்கண்டு |
| ஓடளியும் | ஓடுகின்றவண்டுக்கும |
| திசைகாட்டும் | திசைகாட்டுங்கருவிவட திசையையே நோக்கிக் காட்டுதலுக்கும் |
| நல்சீர் | போதுமானவது |
| போன்று | இருக்கின்றதை ஒத்து |
| நன்று | நல்லதாகிய |
| ஏது உடைத்து | காரணங்களை உடைத்தாயிருக்கலாம |

சண்பகமலர்களில் தேனிருக்கினும் அதில் உருசியில்லாததால் அவ்வண்டுகள் விலகி ஓடுகின்றன.

திசை காட்டுங் கருவியினது சாதிவட திசையி லிருப்பதாலத் தத்திக்கையே நோக்குகின்றது.

சதிதநுவகாதகிகளை இருதரத்தாராகப்பிரித்து மேலை செய்யுளில் தன்தேகத்தை அயலானுக்கு ஒப்புக்கொடுத்தவர்களேயுட் யுக்கவி

யில் அவ்வாறு ஒப்புக்கொடாதிருந்தும் மற்றச் செய்கைகளினாலேகற்பிழந்துபோனவர்களைக்குறித்துங் கூறினர். (கo௫)

அம்மிமிதித்திரோ யருந்ததியைப் பார்த்திரே
சொம்மலவோ நீமுனோன் சூதிகணீர்—கொம்மைமகீர்
ஆட்டுவிக்குந்தோறு மன்னவனைக் கொல்லுகின்றீர்
மீட்டில்லையங் குமிங்குமெய.

| | |
|---|---|
| சூதிகாள | (கணவனுக்கு) இரண்டகம் செய்கின்றவர்களே |
| அம்மிமிதித்திரோ | (பரஸ்திரியாகேனென)அம்மியை மிதித்தலும் |
| அருந்ததியை பார்த்திரோ | (உன்னைத்தவிர அயலானையே நோக்கேனென) அருந்ததி நட்சத்திரத்தையே பார்த்துங்கணவனுக்குப் பிரமாணிக்கஞ் செய்து கொடுத்தீர்களே |
| நீர் நீமு னோன் | (ஆதலால்) நீங்கள் அக்கினிசாட்சியாக உங்களை விவாகம்பண்ணின கணவனது |
| சொம் அல்லவோ | சொத்தல்லவா |
| நீர்கொம்மை ஆட்டுவிக்குந் தோறும் | (இவ்வாறன கணவனுக்கு இரண்டகஞ்செய்து) உங்கள் தேகங்களை (அயலானை) உருசிக்கும்படி செய்யுந்தோறும் |
| அன்னவனை | (உங்களைக்கொண்ட) அந்தக்கணவனை |
| கொல்லுகின்றீர் இங்கும் அங்கும் | கொலைத்தொழில் புரிகின்றீர் இதனாலும்நீங்கள் கற்பிழந்ததினாலும்இவ்விடத்திலும் பரத்திலும் |
| மீட்டில்லை | (உங்களுக்கு) ஈடேற்றமில்லை |
| மெய் | (என்பது) உண்மையாம் |

அம்மிமிதித்து அருந்ததிபார்க்கும் வரலாற்றை கூகூவது கவியின் வியாக்கியானத்தில் கண்டுகொள்க. (கoசு)

## குலமகள்.

நாற்குணமுமொன்றி லொன்றுறனா மடம் போற்பதிக்காய
வாழ்க்கறிமுன் கையளித்தாருட் புறமும்—மீக்கறிவேன்
[illegible]ண்டிற்குற் சரித்துப்பிரகிருதி செத்துலைப
[illegible]தருணிக் காக்கிரண்டினோ.

| | |
|---|---|
| நாற்குணமும் ஒன்றில் ஒன்றும் | நாணத்திலிருந்து மடமும் இம்மடத்திலிருந்து அச்சமு மிதிலிருந்து பயிர்ப்புமாக இநநான்கும் உண்டாயிற்றும் |
| ஞானம் மடம் போல் | (ஆனால் அந்தமடம்) அறியாமை போல்காணப்படுகின்ற ஞானமாம் |
| தரணிக்கு | (இந்த அறிவு மடத்திலிருந்தே இப்பூலோகம்) |
| ஆக்கு | செழித்தோங்கும்படி |
| இரண்டு நேர்நிறை | அரசனிலிருந்து அரசநீதியும் அந்தணரிலிருந்து வேதமோது தலையும் பிறப்பிக்கின்ற ஞானத்தைப்போல கற்புண்டாயிறறும் |
| ஊழ்க்கற்முன் பதிக்காய் | இந்தக்கற்பினலேதான் கணவனைப்பெற்றுக்கொள்ளும் பிராப்திகிடைக்குமுன்னதாகியகன்னிகைப்பிராயத்திலேயே வரப்போகின்றகணவனுக்காய் |
| உட்பு றமும் கையளித்தார் | (தன்னுடைய) உட்பொறிகளையும் வெளி அவயவங்களையும் (கணவனுக்கென்று) தத்தமபண்ணிவிட்டார்கள் |
| மீக்கு அறிவேன் | (ஆதலாலிவர்களுக்கு) மேலானஅறிவுஎன்னத்திற்கு |
| பிறர் தீண்டில் | ஆனால் (அயலார்) கெட்டஎ்ணககமாக இவர்களைததொட்டால் |
| குற்சரித்து | உடனேஅரோசித்து |
| பிரகிருதி | (மேற்கூறிய) உட்பொறிகளும்வெளியவங்களும் |
| செத்து | ஒன்றுக்கு முதவாததாகி |
| உலைப | நடுநடுங்குவர் |

ஆன்மாவைத்தவிர சரீரமும் மனமும் உயிருமாகிய பிராணவாயுமுதலிய வைகளும் பிரகிருதியின் காரியம் இக்காரியங்களைப் பிரகிருதி என்று காரணத்தின் பெயரைக் காரியங்களுக்கு பொதுப் பெயராய் வழங்கப்பட்டிருக்கின்றது. (௩௦எ)

பலதுறையுங் காண்டுமெனும் பத்திவிடா நீப்பெல்லாம்
நலமழிந்தாழ்ந் தென்றெதிர நன்றாக்கி—அலங்காரவில்
மாரோற்றுமாற்று ளருக்கினுங்கை பார்த்திலகாள்
பாரகலாதோ வொளியாய்பார்த்து

பலதுறையும் காண்டுமெல்லும் } (கற்புடையாள்தனதுநாயகன்) பரஸ்திரிகமன முடையவனுயிருக்கினும்

பத[illegible]விடாம் (அவனிடத்தில்) அன்புகுறைவு படாமலும்

நீப்புளல்லாம் (அவன்தன்னைவிட்டுப்)பிரிந்திருக்கும்நாளெல்லாம்

நலமழிந்து அழகுகுறைந்து

ஆழ்ந்து அடங்கி

என்று எதிர (அவன்தன்னை) எப்போது கண்டானே

நன்றாக்கி (அப்பொழுதே) அலங்கரித்துக் கொண்டு

அலங்காணில் (அவனுக்கு ஏதாவது) வருத்தம் நேரிட்டதைக் கண்டால்

மாறேற்று (தனதுகற்பைத்தவிர தனக்குள்ளயாவற்றையுங் கொடுத்துக்) காப்பாற்றி

மாற்றுள் அருக்கினும் } (அவனது) சேர்க்கையில்வந்தவள் (அவனை) வசப்படுத்தித் தன்னைக் கடீரமாய்நடத்தினும்

கைபார்த்து (அவளுடைய தயவுக்காகவும்) காத்திருந்து

இலகாள் (தன்கணவனதுமனக்) குறிப்பைவிட்டு விலகாதவளாயிருக்கின்றவளாவள்

ஆய் பார்த்து (இந்தக்கற்புடைய) தாய்மார்களைப் பார்த்துத்தான்

ஒளி பார் அகலா தோ } (பலகிரகங்களுக்குநாயகனுகியும் தனக்கு இருட்டைக்கொடுத்துஅழகைஅழித்துவிடுவதுமல்லாமல்அந்நியகிரகங்களையுங்கொண்டு துன்பப்படுத்துகின்ற) சூரியனை இந்தப் பூமியானது விட்டு நீங்காததாயிருக்கின்றதோ (நானறிகிலேன்;)

கற்புடைய தாய்மார்களைப் பார்த்துத் தான் சூரியனைவிட்டு பூமி விலகாது இருக்கின்றதோ என்றமையால் பிரதீப அலங்காரத்தோடு கூடிய சந்தேக அலங்காரம். (கoஅ)

குடித்தாலேநஞ்சு கொலுங்கொள்ளுதலிலாக்குடி கொண்
டுடைத்தாயினீக்கி யுரவோர் குடியாய்ப்—பிடித்தவனை
பகுத்தறியார்கிழென்னல் பார்க்காத்துணைகொள்க
வகுத்தவினம் பார்த்தெடுக்க வாழ்த்து.

குடித்தாலே (நஞ்சைக் கலந்திருக்காநின்ற வாயளவு தண்ணீரைக்கடந்துபோயினும்) குடித்தால்தானே

நஞ்சு — (அதிலுள்ள) விஷம்
கொலும் — கொல்லும்
கொள்ளுதல் இலாக்குடி — (அதுபோல புருஷனுக்கு) வாழ்க்கைப்படுதலில்லா தகுடும்பத்தைப்
கொண்டு உடைத்தாயின் — பொருந்தியிருக்கினும்
நீக்கி — (உடனேஅக்குடும்பத்தைத்தன்னைவிட்டு) அகற்றி
உரவோர் குடியாய் — (தீயொழுக்குக்கு நடுங்குகின்றவர்களை ஆரவணைக்கும்படி காத்துக் கொண்டிருக்கின்ற பெரியோர்களது) குடும்பத்தவளாகி
பகுத்தறியார் கீழ் என்னல் — (தான்புருஷனுக்குவாழ்க்கைப்படுஞ் சாதிப்பிறப்பை அடையவேண்டியவளா யிருப்பதினாலே சாதியுண்டான விவரணந் தெரியாதவர்கள்கீழ்சாதிமேல்சாதியெனச்சொல்லுதலைக்
பார்க்கா — கவனியாமல்
பிடித்தவனை — (தன்னைப்போல் நல்லொழுக்கத்தினால்) மனம் பிடித்தவனைத்
துணை கொள்க — (தனக்குத் துணைவேண்டுமானால்) கணவனாகத் தெரிந்து கொள்ளக்கடவள்
வகுத்த இனம — (ஆனால்சாதிப்பிரஷ்டத்தினாலே)தள்ளப்பட்ட சாதியில்(தனக்கொருகணவன்வேண்டுமானால்)
பார்த்து — (நன்றாக உழவாராய்ந்து)பார்த்துத்
எடுக்க — (தனக்குக்)கணவனாகத்தெரிந்துகொள்ளவேண்டும்
வாழ்த்து — (உலகமே இத்தன்மையதான கற்புடைய தாய்மார்களையும்பெரியோர்களையும் வாழ்த்தக்கடவை

நீங்கி என்னாது நீக்கி என்றமையால் குடும்பத்தி லிருந்துகொண்டே தன்னைச்சேர்ந்த மற்றபந்துசனங்களையும்புருஷனுக்குத் தனித்தனியே வாழ்க்கைப்படும்படிசெய்யக் கூடுமானால்அக்குடும்பத்தைவிட்டு நீங்கவேண்டுவது அவசியமின்றெனக் குறிப்பிக்கின்றது.

இக்கவியினால் வேசிமார்க்கமுடையவர்களும அதனைவிட்டு நீங்கி கற்புடைமகளிராய் இருக்கவேண்டியது அவசியமென விளக்கிக்காட்டினர் (கO௬)

## முற்றிற்று.

[illegible]